- இஸ்ரேலிய ராணுவமானது ஆளில்லா விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் திறன் கொண்ட உயர்திறன் உடைய வான்வழி லேசர் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக சோதித்துள்ளது.
    - எல்பிட் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனமானது இதன் முன்மாதிரி (prototype) ஒன்றை உருவாக்கி உள்ளது.
- இந்தியக் கரைமப் பிரிப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பினுடைய (Solvent Extractors' Association of India) தரவுகளின் படி, 2020-21 ஆம் ஆண்டில் மலேசியா நாடானது இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா பனை எண்ணையினை ஏற்றுமதி செய்யும் ஒரு நாடான இந்தோனேசியாவை முந்தியுள்ளது.
    - இந்தோனேசியா கடந்த ஆண்டு உணவு எண்ணெய்களின் மீது அதிகப் படியான அளவிற்கு வரிகளை விதித்து இருந்தது.
- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த டாக்டர் தடாங் மினு என்பவர் சர்வதேச குத்துச் சண்டை கூட்டமைப்பின் பயிற்சியாளர்கள் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அம்மாநிலத்தின் முதல் பெண் மற்றும் இரண்டாவது இந்தியப் பெண்மணி எனும் ஒரு பெருமையைப் பெற்றுள்ளார்.
    - குத்துச் சண்டை போட்டித் துறையில் அவர் பெற்றுள்ள மகத்தான அறிவு மற்றும் அனுபவத்தின் காரணமாக இவர் சர்வதேச குத்துச் சண்டை கூட்டமைப்பினால் நியமிக்கப் பட்டுள்ளார்.
- சுதந்திரமான மற்றும் தடையில்லா இந்தோ பசிபிக் பகுதியினை உருவாக்குவதற்காக வேண்டி இந்தியக் கடற்படைக் கப்பல்களும் ஜப்பானியக் கடல்சார் தற்காப்புப் படையும் இந்தியப் பெருங்கடலில் ஒரு கூட்டு கடற்படைப் பயிற்சியில் ஈடுபட்டன.
    - இந்தியப் பெருங்கடலில் JS காஷிமா (TV3508) மற்றும் செட்டோ யுகி (TV3518) ஆகியவை INS குலீஷ் என்ற கப்பலுடன் இணைந்து இருதரப்புப் பயிற்சியில் ஈடுபட்டன.
- பாரதி ஏர்டெல் நிறுவனமும் டாடா குழுமமும் இணைந்து இந்தியாவில் 5G இணைப்பு சேவைகளை செயல்படுத்துவதற்கான உத்திசார் கூட்டிணைவினை அறிவித்துள்ளன.
    - இது 2022 ஆம் ஜனவரி முதல் வணிகரீதியிலான மேம்பாட்டிற்கு கிடைக்கப் பெறும்.
- திரைப்படத் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான தஹிரா கஷ்யப் குர்ரானா என்பவர் "The 7 Sins of Being A Mother" எனும் தாய்மை குறித்த தனது நூலானது விரைவில் வெளியாகும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
    - கடந்த ஆண்டு "12 Commandments of Being A Woman" எனும் புத்தகத்தை இவர் வெளியிட்டார்.
- உலக வனவிலங்கு நிதியமானது அப்போலோ மருத்துவமனையின் இயக்குநரான உபாசனா கமினேனி அவர்களை "வன முன்களப் பணியாளர்களின் தூதராக" நியமித்துள்ளது.

- மருத்துவமனைகள் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு போன்ற துறைகளில் முன்களப் பணியாளர்களின் சேவைகளைப் பாராட்டும் நோக்கில் இந்த நியமனமானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖ பிரித்தானிய வழக்கறிஞரான கரிம் கான் என்பவர் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் புதிய தலைமை வழக்கறிஞராகப் பொறுப்பேற்றுள்ளார்.

- காம்பியாவின் ஃபடோவ் பென்சௌடா என்பவரின் 9 ஆண்டு கால பதவிக்காலம் முடிந்ததைத் தொடர்ந்து இவர் அப்பொறுப்பினை ஏற்றுள்ளார்.

❖ கைம்பெண்களின் கருத்துகள் மற்றும் அவர்தம் அனுபவங்கள் மீதான கவனத்தை ஈர்க்கவும் அவர்களுக்கு வழங்கப்படும் தனித்துவமான ஆதரவுகளை ஒன்று திரட்டவும் சர்வதேச கைம்பெண்கள் தினமானது கடைபிடிக்கப் படுகிறது.

- லூம்பா என்ற அறக்கட்டளையானது 2005 ஆம் ஆண்டில் சர்வதேச கைம்பெண்கள் தினத்தைத் தொடங்கி வைத்தது.

❖ கொச்சின் சர்வதேச விமான நிலையமானது தனது விமான நிலையச் சேவையின் தரத்திற்காக சர்வதேச விமான நிலைய மன்றத்தின் 'ரோல் ஆஃப் எக்செலன்ஸ்' எனும் கௌரவத்தைப் பெற்றுள்ளது.

- பயணிகளின் கருத்தின் அடிப்படையில் தொடர்ந்து சிறப்பான சேவைகளை வழங்கி வரும் இந்த விமான நிலையத்திற்கு இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

❖ ஒலிம்பிக் போட்டிகளுக்கான இந்திய அணியின் அதிகாரப்பூர்வ கருத்துரு பாடல் ஆனது வெளியிடப் பட்டுள்ளது.

- மோஹித் சவுகான் என்பவர் "லக்சய தேரா சாம்னே ஹை" என்ற இந்தப் பாடலை இயற்றிப் பாடியுள்ளார்.

❖ உலக சுகாதார அமைப்பானது தென் ஆப்பிரிக்கா நாட்டில் கோவிட்-19 தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பரிமாற்ற மையத்தினை அமைக்க உள்ளது.

- இது எம்.ஆர்.என்.ஏ வகை தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பதற்கு வேண்டி ஆப்பிரிக்க நிறுவனங்களுக்கு உதவி வழங்கும்.

❖ 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய ராஜ்ஜியத்திற்கான இரண்டாவது மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீட்டு மூலம் எனும் நிலையை இந்தியா தக்க வைத்துள்ளது.

- அமெரிக்கா தனது முதலிடத்தை தக்க வைத்துள்ளது.

❖ சீனா நாடானது செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் தனது முதல் விண் ஏவுகலத்தினை 2033 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளது.

❖ இந்தியா மற்றும் செயின்ட் வின்சென்ட் அண்ட் தி கிரினேடினெஸ் (Saint Vincent and The Grenadines) ஆகிய நாடுகள் வரி வசூலிப்பிற்கான தகவல் மற்றும் உதவிப் பரிமாற்றத்திற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

❖ சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது "புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் இடர் நிதிவழங்கல் மீதான ஆராய்ச்சி மையத்தினை" (Centre for Research on Startups and Risk Financing – REST) தொடங்கியுள்ளது.

- இது இந்தியப் புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் துணிகர முயற்சி நிறுவனங்கள் குறித்த ஒரு தரவுக் களஞ்சியத்தை உருவாக்குவதில் உதவும்.

- சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டோருக்கான சர்வதேச ஆதரவு நாள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 26 ஆம் நாளன்று ஐக்கிய நாடுகள் அமைப்பினால் கொண்டாடப் படுகிறது.
  - மனித சித்திரவதை என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல என்பதோடு மட்டுமல்லாமல் அது ஒரு குற்றம் என்பது பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- டென்னிஸ் போட்டியின் தற்கால சகாப்தத்தில் விம்பிள்டன் மெயின் டிரா (main draw) என்ற சுற்றில் பங்கேற்க உள்ள முதல் சீன விளையாட்டு வீரர் சாங்க் சிசேன் (Zhang Zhizhen) என்பவராவார்.
  - 24 வயதான சாங்க் உலகத் தரவரிசையில் 178வது இடத்தில் உள்ளார்.
- டிரைடன் மின்சார வாகன உற்பத்தி நிறுவனமானது தெலுங்கானாவின் சாஹீராபாத்திலுள்ள தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலத்தில் மின்சார வாகன உற்பத்தி அலகு (மையம்) ஒன்றினை நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளது.
  - டிரைடன் மின்சார வாகன உற்பத்தி நிறுவனமானது அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு மின்சார வாகன நிறுவனமாகும்.
- கோவா மாநிலமானது ரேபிஸ் நோய் (வெறிநாய்க் கடி) அல்லாத முதல் இந்திய மாநிலமாக உருவெடுத்துள்ளது.
  - கடந்த மூன்று ஆண்டுகளில் கோவா மாநிலத்தில் ஒரு ரேபிஸ் நோய் கூடப் பதிவாக வில்லை என அதன் முதல்வர் பிரமோத் சாவந்த் அறிவித்துள்ளார்.
- சஜன் பிரகாஷ் நடைபெறவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வான முதல் இந்திய நீச்சல் வீரரானார்.
  - சஜன் ரோமில் நடைபெற்ற செட் கோலி கோப்பை (Sette Colli Trophy) போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்த வாய்ப்பினைப் பெற்றார்.
- மனு பக்கர் - சௌரப் சௌத்ரி அவர்கள் ஒசிசெக்கில் நடைபெற்ற 10மீ ஏர் பிஸ்டெல் துப்பாக்கிச் சுடுதலுக்கான கலப்பு அணிப் பிரிவுப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளனர்.
  - இது குரோசியாவின் ஒசிசெக் என்ற நகரில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியாவிற்கு கிடைத்த மூன்றாவது பதக்கமாகும்.
- 2021 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி மையமாகத் திகழ்ந்த ஐக்கிய அரபு அமீரகத்தைப் பின்னுக்குத் தள்ளி சீனா அந்த இடத்தைக் கைப்பற்றியுள்ளது.
  - அமெரிக்காவானது இந்தியாவின் முன்னணி ஏற்றுமதிக் கூட்டிணைவு நாடாக திகழ்கிறது.
- ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் லிமிடெட் மற்றும் கூகிள் கிளவுட் ஆகியவை இணைந்து விரிவான நீண்டகால உத்திசார் கூட்டிணைவினை மேற்கொள்கின்றன.
  - தேசிய அளவில் நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் சார்ந்த பிரிவுகளில் 5G இணைப்பினை இயங்கச் செய்யும் நோக்கில் இது மேற்கொள்ளப் படுகிறது.

- ஊழல் தடுப்பு ஆணையரான சுரேஷ் N. படேல் அவர்கள் மத்திய ஊழல் தடுப்பு ஆணையத்தின் தற்காலிக மத்திய ஊழல் தடுப்பு ஆணையராக செயல்படுவார்.
  - சஞ்சய் கோத்தாரி அவர்களின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து இந்த நியமனமானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது உலகில் முதல் முறையாக ஒரு மாற்றுத் திறனாளி விண்வெளி வீரரைப் பணியில் அமர்த்த உள்ளது.
- பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஒரு எழுத்தாளரான இமானுவேல் கரேரே என்பவருக்கு இந்த ஆண்டு ஸ்பெயின் நாட்டின் உயரிய ஒரு விருதான 'Princess of Asturias' என்ற இலக்கிய விருதானது வழங்கப் பட்டுள்ளது.
  - இவர் உயரிய இலக்கியத் துறையில் கற்பனை சாராத வகைப் புத்தகங்களுக்குப் புகழ் பெற்றவராவார்.
- ராகி சர்னோபத் குரேசியாவில் நடந்த ISSF துப்பாக்கிச் சுடுதலுக்கான உலகக் கோப்பைப் போட்டியின் மகளிர் 25 மீ பிஸ்டல் துப்பாக்கிச் சுடுதல் போட்டிப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
  - தற்போது நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் இந்தியாவிற்குக் கிடைத்த முதல் தங்கப் பதக்கம் இதுவேயாகும்.
- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவரான சௌரவ் கங்குலி அவர்கள் T20 உலகக் கோப்பைப் போட்டியானது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப் படும் என அறிவித்தார்.
  - 2021 ஆம் ஆண்டிற்கான IPL போட்டிகளின் எஞ்சியுள்ள போட்டிகளும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப் படும்.
- ஐக்கிய நாடுகள் அவையானது ஜுன் 29 ஆம் நாளினை சர்வதேச வெப்பமண்டல தினமாகக் கடைபிடிக்கிறது.
  - வெப்பமண்டலப் பகுதிகளின் அசாதாரண பன்முகத் தன்மையை கொண்டாடச் செய்வதோடு, வெப்ப மண்டல நாடுகள் எதிர்கொள்ளும் தனித்துவம் மிக்க சவால்கள் மற்றும் வாய்ப்புகளையும் இத்தினமானது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- குருகிராமிலுள்ள ஃபோர்டிஸ் நினைவு ஆராய்ச்சி நிறுவனமானது பொது மக்களுக்கு ஸ்புட்நிக் V தடுப்பு மருந்தை வழங்குவதற்கான சோதனை ஓட்டத்தைத் தொடங்கி உள்ளது.
  - தற்போது நமது நாட்டில் கோவிசீல்ட், ஸ்புட்நிக் V மற்றும் கோவாக்சின் ஆகியவை தடுப்பு மருந்து வழங்கும் இயக்கத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- 2021 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் தேதியன்று தேசியக் காப்பீட்டு விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப் படுகிறது.
  - காப்பீட்டுச் சலுகைகள் மற்றும் வெவ்வேறு திட்டங்களைப் பற்றி மக்கள் மேலும் மேலும் அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## கிராம அரிசி

- தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தில் விளைந்த காப்புரிமை பெற்ற "கிராம அரிசியினை" ஒரு தொடக்க நிறுவனமானது விமானம் மற்றும் கப்பல் வழியாக கானா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி (14.5 டன்) செய்துள்ளது.
- அந்த தொடக்க நிறுவனத்தின் பெயர் உதயா வேளாண் பண்ணை என்பதாகும்.
- புரதம், நார்ச்சத்து மற்றும் பல விதமான தாதுக்கள் நிறைந்த இந்த கிராம அரிசி தஞ்சை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப் படுகிறது.




## அரசின் அறிவிப்புகள் - ஜூன் 03

- தென் சென்னையில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் 250 கோடி ரூபாய் செலவில் ஒரு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.
- இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் கூடிய வகையில் கலைஞர் நினைவு நூலகம் மதுரையில் 70 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.
- தமிழ் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் 'இலக்கிய மாமணி' விருது வழங்கப் படும்.
- உயர் விருதுகள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது வசிக்க விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக வீடு வழங்கப்படும்.
- திருவாரூர் மாவட்டத்தில் ரூபாய் 24 கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் 16,000 டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.
- நகர்ப்புற அரசு பேருந்துகளில் வழங்கப்பட்டுள்ள இலவச பயணச் சலுகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கும் வழங்கப்படும்.

## T.M. காளியண்ணன் கவுண்டர்

- T.M. காளியண்ணன் கவுண்டர் அவர்கள் சமீபத்தில் தனது 101வது வயதில் காலமானார்.
- இவர் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் கடைசியான முன்னாள் உறுப்பினராவார்.
- இவர் தமிழ்நாட்டினுடைய சட்ட மேலவையின் உறுப்பினராகவும் 1952 மற்றும் 1967 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மூன்று முறை சட்டமன்ற கீழவையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர் ஆவார்.
- இவர் அப்போதைய அரசியலமைப்பு நிர்ணய சபையின் இளம் உறுப்பினராவார், மேலும் இந்தியாவின் முதல் தற்காலிகப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் இருந்தார்.



## மாநில வளர்ச்சிக்கான கொள்கைக் குழு

- தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில வளர்ச்சிக்கான கொள்கைக் குழுவினைத் திருத்தியமைத்து, பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்களை அக்குழுவின் புதிய துணைத் தலைவராக அவர் நியமித்துள்ளார்.
- இக்குழுவானது முதலமைச்சரின் தலைமையிலானதாகும்.
- இக்குழுவில் ஒரு முழு நேர உறுப்பினர் தவிர்த்து எட்டு பகுதி நேர உறுப்பினர்களும் இருப்பர்.
- பேராசிரியர் இராம. சீனிவாசன் அவர்கள் இக்குழுவின் முழு நேர உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- பேராசிரியர் ம. விஜயபாஸ்கர், பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான மு. தீனபந்து, தொழில்துறை வல்லுநர் மல்லிகா சீனிவாசன் மற்றும் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் (தி.மு.க) T.R.B. ராஜா, முனைவர் நர்த்தகி நடராஜ், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன் மற்றும் சித்த மருத்துவர் கு. சிவராமன் உள்ளிட்டோர் இக்குழுவின் பகுதி நேர உறுப்பினர்களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

- திருமிகு நர்த்தகி நடராஜ் அவர்களை மாநில மேம்பாட்டுக் கொள்கைக் குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கப் பட்டதால் புதிய வரலாறு ஒன்று தமிழகத்தில் எழுதப்பட்டு உள்ளது.
- இந்தியாவில் திருநர் ஒருவர் ஒரு மாநில அரசாங்கத்தின் உயர் மட்டக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- 1971 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதியன்று முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களால் மாநில திட்டக்குழு உருவாக்கப் பட்டது.
- இது மாநிலத்தில் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்குப் பரிந்துரைகளை வழங்கும் ஓர் ஆலோசனை அமைப்பாக நிறுவப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதியன்று முந்தைய அ.இ.அ.தி.மு.க. அரசினால் இதன் பெயர் மாநில வளர்ச்சிக்கான கொள்கைக் குழு எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது.



## சர்வதேச நினைவாற்றல் ஆய்வுப் பயிலரங்கம் – சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

- சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் நினைவாற்றல் ஆய்வு மையமானது சமீபத்தில் ஆசியாவின் முதல் சர்வதேச நினைவாற்றல் ஆய்வுப் பயிலரங்கத்தினைக் காணொலி வாயிலாக நிகழ்த்தியது.
- இது ஆசியாவில் நடைபெறும் இவ்வகையிலான முதல் சர்வதேசப் பயிலரங்கமாகும்.
- இந்திய நினைவாற்றல் ஆய்வுப் பிணையமானது 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் மத்தியில் சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தில் நடைபெறும் ஒரு காணொலி நிகழ்வு மூலம் தொடங்கி வைக்கப் படும்.

## ஆபரேசன் விண்ட்

- ஊரடங்கின் போது மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டதிலிருந்து தமிழ்நாடு முழுவதும் சட்டவிரோதமான முறையில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
- மதுவிலக்கு மற்றும் அமலாக்கப் பிரிவானது ஜூன் 08 முதல் 22 வரையிலான “ஆபரேஷன் விண்ட்” (Operation Wind) எனும் சிறப்பு நடவடிக்கை ஒன்றினைத் தொடங்கி உள்ளது.
- இது மாநிலம் முழுவதும் நடைபெறும் சட்டத்திற்கு விரோதமான மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நீதிபதி A.K. ராஜன் குழு

- சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்ட மருத்துவப் படிப்பு மாணவர்கள் மத்தியில் நீட் தேர்வு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைக் குறித்து ஆய்வு செய்வதற்காக நீதிபதி A.K. ராஜன் குழுவானது நியமிக்கப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இக்குழுவை நியமித்துள்ளார்.
- மருத்துவக் கல்லூரிகளில் அனுமதி சேர்க்கைக்கான மாற்று வழிமுறைகளையும் இக்குழு பரிந்துரைக்க உள்ளது.

## மேட்டூர் அணைத் திறப்பு – ஜுன் 12

- குறுவை சாகுபடிக்கு நீர்ப்பாசன வசதியை வழங்குவதற்காக மேட்டூர் அணையின் மதகுகள் திறக்கப்படுவதை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ஜுன் 12 ஆம் தேதியில் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து 18வது முறையாக நீர் திறந்து விடப்படுகிறது.
- இது 16.05 லட்சம் ஏக்கர் பயிர்களுக்குப் பாசன வசதியை அளிக்கும்.
- இதன் மூலம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்கள் நீர்ப்பாசன வசதியைப் பெறும்.

**Mettur Dam Opening day, level, storage, inflows & outflows**

| Year | Opening Date | Level in Feet on Opening day | Storage in Tmc on Opening day | Inflow in Cusecs on release day | Outflow in Cusecs on next day |
|---|---|---|---|---|---|
| 2009 | 28-07-2009 | 94.68 | 58.16 | 21398 | 12000 |
| 2010 | 28-07-2010 | 82.38 | 44.37 | 3989 | 12000 |
| 2011 | 06-06-2011 | 116.00 | 87.23 | 4143 | 12000 |
| 2012 | 17-09-2012 | 84.15 | 46.22 | 12418 | 15000 |
| 2013 | 02-08-2013 | 109.00 | 77.00 | 19340 | 15500 |
| 2014 | 10-08-2014 | 108.20 | 76.58 | 89723 | 9000 |
| 2015 | 09-08-2015 | 96.51 | 60.41 | 2683 | 13000 |
| 2016 | 20-09-2016 | 87.68 | 50.04 | 10092 | 12000 |
| 2017 | 02-10-2017 | 93.93 | 58.36 | 17875 | 15000 |
| 2018 | 19-07-2018 | 109.00 | 77.00 | 101277 | 20000 |
| 2019 | 14-08-2019 | 107.75 | 75.25 | 111069 | 10000 |
| 2020 | 12-06-2020 | 101.73 | 67.10 | 1439 | 10000 |
| 2021 | 12-06-2021 | 96.81 | 60.78 | 1170 | 10000 |

## கீழடி அகழாய்வு - ஏழாம் கட்டம்

- மணலூர் பகுதியில் அகழாய்வு மேற்கொண்ட போது குழந்தையின் எலும்பு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- கொந்தகை மட்டும் தான் புதைவிடப் பகுதி எனச் சொல்லப்பட்டிருந்தது.
- கீழடி, அகரம், மணலூர் ஆகிய பகுதி மக்கள் வாழ்விடப் பகுதிகளாகும்.
- இந்நிலையில் மணலூர் பகுதியில் முதன்முறையாக குழந்தையின் எலும்பு ஒன்று கண்டறியப் பட்டுள்ளது.

## சென்னை-கன்னியாகுமரி தொழிற்துறை பெருவழிப்பாதை




- ஆசிய மேம்பாட்டு வங்கியும் இந்திய அரசும் 484 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது தமிழ்நாடு மாநிலத்திலுள்ள சென்னை-கன்னியாகுமரி தொழில்துறை பெருவழிப் பாதையில் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதற்கும் தொழில்துறை மேம்பாட்டு வசதியை உருவாக்குவதற்காகவும் வேண்டி மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- சென்னை-கன்னியாகுமரி தொழிற்துறை பெருவழிப் பாதையானது மேற்கு வங்கம் தொடங்கி தமிழகம் வரை நீளும் இந்திய கிழக்கு கடற்கரைப் பொருளாதார பெரு வழித் தடத்தின் ஓர் அங்கமாகும்.

## பொருளாதார ஆலோசனைக் குழு – தமிழ்நாடு

- புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக அரசனாது "முதலமைச்சருக்கான ஒரு பொருளாதார ஆலோசனைக் குழு" என்ற ஒன்றை நிறுவுவதற்கு முடிவு செய்துள்ளது.
- இக்குழுவின் உறுப்பினர்கள்,
    - அமெரிக்காவிலுள்ள மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டஃப்லோ (Esther Duflo),
    - இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன்,
    - மத்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன்,
    - மேம்பாட்டுப் பொருளாதார வல்லுநர் ஜீன் டிரேஸ் (Jean Dreze) மற்றும்
    - முன்னாள் ஒன்றிய நிதித் துறைச் செயலாளர் டாக்டர். S. நாராயணன் ஆகியோர் ஆவர்.




## 16வது தமிழக சட்டமன்றத்தின் முதல் கூட்டம்

- 16வது தமிழக சட்டமன்றத்தின் முதல் கூட்டமானது கலைவாணர் அரங்கில் தொடங்கியது.
- ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அவர்கள் உரையாற்றி, சட்டமன்றக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- அவரது உரையில்,
    - அனைத்து மாவட்டங்களிலும் பணிக்குச் செல்லும் பெண்களுக்காக வேண்டி தங்கும் விடுதிகள் உருவாக்கப்படும்.
    - மாநிலத்தின் அனைத்து மெட்ரோ நகரங்களுக்கு அருகிலும் நவீன வசதிகளுடன் கூடிய பொலிவுறு நகரங்கள் உருவாக்கப்படும்.
    - மீனவர்களின் நலனிற்காக ஒரு தேசிய ஆணையத்தினை அமைப்பதற்கு மத்திய அரசிற்கு வலியுறுத்தப்படும்.
    - மாநிலத்தில் வேளாண்மைக்காக என்று ஒரு தனி நிதிநிலை அறிக்கை அறிமுகப் படுத்தப்படும்.
    - நிலத்தடி நீர்ப் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய சட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்படும் என்று கூறினார்.

### சிஇஓ உலகப் பத்திரிகை

- 2021ஆம் ஆண்டில் உலகின் தலைசிறந்த 100 மருத்துவக் கல்லூரிகளின் பட்டியலில் தமிழகத்தின் 2 கல்லூரிகள் இடம் பிடித்துள்ளன.
- சிஇஓ உலகப் பத்திரிகை சார்பில் ஆண்டுதோறும் உலகின் தலைசிறந்த மருத்துவக் கல்லூரிகள், ஃபேஷன், மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைக் கல்லூரிகள் எனப் பலவற்றின் பட்டியல் வெளியிடப்படும்.
- இவ்வாண்டு இதில் வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரி 49வது இடத்தையும், சென்னை மருத்துவக் கல்லூரி 64வது இடத்தையும் பிடித்துள்ளன.
- அதே போல புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரி இதில் 59வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- வாரணாசி மருத்துவக் கல்லூரி இதில் 72வது இடத்தில் உள்ளது.

### விளையாட்டு வீரர்களுக்குப் பரிசு – மு.க. ஸ்டாலின்

- நடைபெறவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு தமது அரசாங்கமானது பரிசுகளை அளிக்கும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.
- அதில் தங்கப் பதக்கம் வெல்பவருக்கு ரூ.3 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ. 2 கோடியும் வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ. 1 கோடியும் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- சென்னையைச் சேர்ந்த ககன் நரங் என்பவர் மட்டுமே தமிழ்நாட்டிலிருந்து சென்று ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று தனிநபர் பிரிவில் பதக்கம் வென்ற ஒரே நபராவார்.
- இவர் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் போட்டியின் ஆடவர் 10 மீ ஏர் பிஸ்டல் சுடுதல் போட்டியில் இந்தியா சார்பாக போட்டியிட்டு வெண்கலப் பதக்கம் வென்றார்.

## தேசியச் செய்திகள்

### IBF நிறுவனத்தின் பெயர் மாற்றம்

- ஒளிபரப்பு நிறுவனங்களின் உயர்நிலை அமைப்பான இந்திய ஒளிபரப்பு அமைப்பானது (Indian Broadcasting Foundation - IBF) டிஜிட்டல் ஒளிபரப்பு தளங்களையும் உள்ளடக்கும் வகையில் தனது வரம்பை விரிவுபடுத்தியுள்ளது.
- மேலும் அதன் பெயரானது இந்திய ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் அமைப்பு (Indian Broadcasting and Digital Foundation - IBDF) எனவும் மாற்றப் பட்டுள்ளது.
- இதன் மூலம் ஒளிபரப்பாளர்கள் மற்றும் இணையதள ஒளிபரப்பு சேவை வழங்கும் தளங்கள் (OTT) ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்படும்.
- டிஜிட்டல் ஒளிபரப்பு சேவை வழங்கும் அமைப்புகளுக்காக "டிஜிட்டல் ஊடகத் தகவல் கட்டுப்பாட்டு மன்றம்" (Digital Media Content Regulatory Council – DMCTC) எனும் சுயக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

## YUVA திட்டம்

- ❖ கல்வி அமைச்சகமானது பிரதமரின் 'இளம் நூலாசிரியர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதலுக்கான திட்டம்' ஒன்றினை (YUVA) தொடங்கி வைத்துள்ளது.
- ❖ இந்த திட்டமானது இந்தியாவில் படித்தல், எழுதுதல் மற்றும் புத்தக கலாச்சாரம் போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கில் 30 வயதுக்கும் கீழான இளம் மற்றும் வளர்ந்து வரும் நூலாசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கும் ஒரு வழிகாட்டுத் திட்டம் ஆகும்.
- ❖ மேலும் இந்திய நாட்டினையும் இந்திய நூலாசிரியர்களின் படைப்பினையும் உலகம் முழுவதும் வெளிப்படுத்தும் YUVA என்பதன் விரிவாக்கம் "Young, Upcoming and Versatile Authors" (இளம், வளர்ந்து வரும் பல்துறை நூலாசிரியர்கள்) என்பதாகும்.
- ❖ இந்த திட்டமானது இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றி எழுதுவதற்கு இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான பிரதமரின் நோக்கத்தின் ஓர் அங்கமாக செயல்படும்.
- ❖ இந்த திட்டமானது கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியத் தேசியப் புத்தக அறக்கட்டளையினால் நடைமுறைப் படுத்தப்படும்.

## குழந்தைகளுக்கான PMCARES நிதி

- ❖ கோவிட்-19 தொற்றினால் பெற்றோர்களை இழந்த (அ) சட்டப்பூர்வ பாதுகாவலர் / வளர்ப்புப் பெற்றோர்களை இழந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படும்.

***முக்கிய தகவல்கள்***

- ❖ குழந்தையின் பெயரில் நிரந்தர வைப்பு நிதி : ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் 18 வயது பூர்த்தியடையும் போது 10 லட்சம் ரூபாய் தொகுப்பு நிதி.
- ❖ 18 முதல் 23 வயது வரை அவர்களின் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு மாதாந்திர உதவித் தொகையானது வழங்கப் படும்.
- ❖ அவர்கள் 23 வயதினை அடைந்த பிறகு, தொழில் ரீதியாகவோ (அ) தனிப்பட்ட ரீதியிலோ பயன்படுத்துவதற்காக வேண்டி முழுத் தொகையான பத்து லட்சம் ரூபாயானது வழங்கப் படும்.
- ❖ 10 வயதிற்குக் கீழுள்ள குழந்தைகளுக்கு அருகிலுள்ள கேந்திர வித்யாலயா (அ) தனியார் பள்ளியில் தினசரி மாணக்கராக சேர்க்கப்பட அனுமதி வழங்கப்படும்.
- ❖ 11 முதல் 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு சைனிக் பள்ளி, நவோதய வித்யாலயா போன்ற ஏதேனும் ஒரு மத்திய அரசு உறைவிடப் பள்ளியில் சேர்க்கப்பட அனுமதி வழங்கப்படும்.
- ❖ தற்போதுள்ள கல்விக் கடன் விதிமுறைகளுக்கு இணங்க இந்தியாவில் தொழில்முறை கல்வி/உயர் கல்விக்கான கல்விக் கடன்களைப் பெறுவதற்கு அந்தக் குழந்தைகளுக்கு உதவி வழங்கப் படும்.
- ❖ அனைத்துக் குழந்தைகளும் ரூ.5 லட்சம் சுகாதாரக் காப்பீடு வசதி அளிக்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயனாளிகளாக பதிவு செய்யப் படுவர்.




## உதவி எண்கள்

- ❖ கோவிட்–19 பெருந்தொற்றின் இரண்டாவது அலையின் காலகட்டத்தில் மக்களுக்கு உதவுவதற்காக வேண்டி நான்கு புதிய உதவி எண்களை மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- ❖ 1075 என்பது சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் தேசிய உதவி எண் ஆகும்.
- ❖ 1098 என்பது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் குழந்தைகளுக்கான உதவி எண் ஆகும்.
- ❖ 14566 என்பது சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின் மூத்த குடிமக்களுக்கான உதவி எண் ஆகும்.
- ❖ இது கர்நாடகா, டெல்லி, மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ராஜஸ்தான், தெலுங்கானா, உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் செயல்பாட்டில் இருக்கும்.
- ❖ 08046110007 என்பது மனநல ரீதியிலான ஆலோசனைகளை வழங்குவதற்கான தேசிய மனநல மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தின் உதவி எண் ஆகும்.




## நானோ யூரியா

- இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு நிறுவனமானது (IFFCO - Indian Farmers Fertiliser Cooperative) நைட்ரஜன் உரத்தை அடிப்படையாகக் கொண்ட நானோ யூரியாவினை 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் சந்தையில் அறிமுகப்படுத்த உள்ளது.
- 500 மி.லி. அளவிலான நானோ யூரியாவானது 45 கிலோ அளவிலான சாதாரண யூரியாவிற்கு இணையாகும்.
- 500 மி.லி. நானோ யூரியாவின் விலை ரூ.240 ஆகும்.
- இது தவிர, இது விவசாயிகளின் உள்ளீட்டுச் செலவை 15% வரை குறைத்து 20% வரை மகசூலை அதிகரிக்கச் செய்யும்.

## கடல் ரோந்து வாகனம் – சஜாக்

- தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான அஜீத் தோவல் அவர்கள் இந்திய கடலோரக் காவற்படையின் சஜாக் எனும் கடல் ரோந்து வாகனத்தினை தொடங்கி வைத்தார்.
- இது கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டது.
- பிரதமரின் "இந்தியாவில் உருவாக்குதல்" திட்டத்தின் நோக்கில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 5 கடல் ரோந்து வாகனங்களின் வரிசையில் மூன்றாவது வாகனம் சஜாக் ஆகும்.

## ECLGS 4.0

- இந்திய அரசானது அவசரகால கடன் உறுதித் திட்டத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- இது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் வர்த்தகத்திற்கு உதவியாக இருக்கும்.

***ECLGS 4.0 பற்றிய தகவல்கள்***

- ❖ மருத்துவமனை / மருந்தகங்கள் / மருத்துவக் கல்லூரிகள் / மருந்தகக் காப்பகங்களில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலை அமைக்க வாங்கப் படும் 2 கோடி வரையிலான கடன்களுக்கு 100% உத்தரவாதம் வழங்கப்படும்.
- ❖ இந்தக் கடனினை வளாகத்திற்குள்ளேயே ஆக்சிஜன் உற்பத்தி மையங்களை அமைக்கவும் வேண்டி பயன்படுத்தலாம்.
- ❖ இந்த கடன்கள் மீதான வட்டி வீதம் 7.5% ஆகும்.
- ❖ ECLGS 1.0 திட்டத்தின் கீழ் ஏற்கனவே கடன் பெற்றவர்கள் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 அன்று நிலவரப் படி நிலுவையில் இருக்கும் கடனில் 10% வரை கூடுதலாக கடன் உதவியினைப் பெறலாம்.
- ❖ ECLGS 3.0 திட்டத்தின் கீழ் தற்போதுள்ள 500 கோடி ரூபாய் எனும் நிலுவைக் கடன் உச்ச வரம்பானது நீக்கப்பட உள்ளது.
- ❖ சிவில் (பொது) விமானத் துறையானது ECLGS 3.0 திட்டத்தின் கீழ் கடன்பெற தகுதி பெறும்.
- ❖ ECLGS திட்டத்தின் திட்டக் காலம் 30.09.2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## தோட்டக்கலைத் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம்

- ❖ மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திரசிங் தோமர் அவர்கள் 53 தோட்டக்கலைத் தொகுப்புகளின் ஒருங்கிணைந்த சந்தை சார்ந்த மேம்பாட்டிற்காக தோட்டக்கலைத் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ வேளாண் அமைச்சகமானது 53 தோட்டக்கலைத் தொகுப்புகளை அடையாளம் கண்டு அவற்றுள் 12 தொகுப்புகளை சோதனைக்குத் தேர்வு செய்துள்ளது.
- ❖ தோட்டக்கலைத் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டமானது இந்தியத் தோட்டக்கலை துறையில் நிலவும் உற்பத்தி, உற்பத்திக்கு முந்தைய நிலை, தளவாடங்கள், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, வணிகப்படுத்துதல் மற்றும் சந்தைப் படுத்துதல் போன்றவைத் தொடர்பான அனைத்து முக்கியப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை அளிக்கும்.
- ❖ இந்தத் திட்டத்தின் மூலம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டப் பயிர்களின் ஏற்றுமதியை 20% வரை உயர்த்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ 53 தொகுப்புகளிலும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும் போது ரு.10000 கோடி வரையிலான முதலீடுகளை இது ஈர்க்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## கோவிட் சிகிச்சையில் 2DG துணை சிகிச்சை முறை

- ❖ கொரோனா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் 2DG எனும் கோவிட்-19 எதிர்ப்பு மருந்தினை ஒரு துணை சிகிச்சையாக வழங்குவதற்காக வேண்டி அதன் அவசர காலப் பயன்பாட்டிற்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- ❖ இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு வாரியமானது 2-டிஆக்சி-டி-குளுக்கோஸ் (2-DG) மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ மிதமானது முதல் தீவிரமானது வரையிலான கோவிட் – 19 தொற்றுடைய

நோயாளிகளுக்கு ஒரு துணை சிகிச்சையாக இதனை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.




## பால் சுவராஜ் இணைய தளம்

- தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையமானது "பால் சுவராஜ்" எனும் இணைய தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது கோவிட்-19 தொற்றினால் தனது பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமே இழந்த குழந்தைகள் மீதான நிகழ்நேரக் கண்காணிப்பிற்கான ஒரு இணைய கண்காணிப்புத் தளமாகும்.
- தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையமானது (National Commission for Protection of Child Rights – NCPCR) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஓர் அமைப்பாகும்.
- NCPCR ஆனது, 2015 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் இந்தியாவின் அனைத்து குழந்தைகளின் உரிமை குறித்து கண்காணிப்பு அதிகாரம் உடைய ஒரு அமைப்பாகும்.

## மாதிரி வாடகைச் சட்டம்

- அனைத்து மாநிலங்களுக்கும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் மாதிரி வாடகைச் சட்டத்தை வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு மாதிரி வாடகைச் சட்டமானது வாடகைச் சந்தைகளை மறுசீரமைப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- இந்தச் சட்டத்தை உருவாக்குவது குறித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 2019 ஆம் ஆண்டு நிகழ்த்திய நிதிநிலை அறிக்கை உரையில் அறிவித்தார்.
- இந்தியாவிலுள்ள பழமையான வாடகைச் சட்டங்களை மாற்றி அமைக்கவும் வீடு கிடைப்பதில் உள்ள சிரமங்களைக் களையவும் இந்தச் சட்டம் முனைகிறது.
- "2022 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீட்டு வசதி" எனும் இலக்கை அடைய இந்தச் சட்டம் உதவும்.

## நிலையான நகர மேம்பாடு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- ❖ இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையேயான நிலையான நகர மேம்பாடு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஒத்துழைப்பிற்கான திட்டங்களை அமல்படுத்தவும் அதற்கான மூலோபாயங்களைக் கண்டறியவும் வேண்டி ஒரு கூட்டு செயற்குழு அமைக்கப் படும்.
- ❖ இந்தக் கூட்டுச் செயற்குழுவின் சந்திப்பானது வருடத்திற்கு ஒரு முறை ஜப்பானிலும் இந்தியாவிலும் என மாறி மாறி நடைபெறும்.
- ❖ இந்த ஒப்பந்தத்தின் கீழான ஒத்துழைப்பு ஆனது 5 ஆண்டுகள் வரை தொடரும், அதன் பிறகு 5 ஆண்டுகளுக்கு அது தானாகவே புதுப்பிக்கப்படும்.
- ❖ இது நகரத் திட்டமிடல், மலிவான வீட்டுவசதி, வாடகை வீட்டு வசதி, பொலிவுறு நகரங்கள் மேம்பாடு போன்ற பல நிலையான நகர மேம்பாட்டுப் பிரிவுகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## வெகுஜன ஊடக ஒத்துழைப்பு மீதான சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதல்

- ❖ சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shangai Cooperation Organisation – SCO) அனைத்து உறுப்பினர் நாடுகளுக்கும் இடையிலான வெகுஜன ஊடக ஒத்துழைப்பு மீதான ஒரு ஒப்பந்தத்திற்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ❖ சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது இந்தியா, சீனா, கிர்கிஸ்தான் குடியரசு, கசகஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், ரஷ்யா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய எட்டு நாடுகளை உறுப்பினராகக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- ❖ இந்த ஒப்பந்தமானது,
    - ○ வெகுஜன ஊடகத் துறையின் சிறந்த நடைமுறைகளையும் புதிய கண்டுபிடிப்புகளையும் உறுப்பினர் நாடுகள் பகிர்ந்து கொள்ளவும்,
    - ○ வெகுஜன ஊடகத் துறையின் கூட்டமைப்புகளுக்கு இடையில் சமமான மற்றும் பரஸ்பர ரீதியிலான நன்மையை வழங்கும் ஒத்துழைப்பினை ஊக்குவிக்கவும் உறுப்பினர் நாடுகளுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கும்.

## 'ஒரே தேசம், ஒரே தர அளவு திட்டத்தில்' இணையும் RDSO

- ❖ மத்திய அரசின் 'ஒரே தேசம், ஒரே தர அளவு' திட்டத்தில் இணையும் நாட்டின் முதல் தர நிலை அமைப்பாக ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிலை அமைப்பானது (Research Design and Stands Organisation - RDSO) உருவெடுத்துள்ளது.
- ❖ இரயில்வே அமைச்சகத்தின் முதன்மை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவான RDSO இந்திய இரயில்வே துறைக்கான தரநிலைகளை நிர்ணயிக்கிறது.
- ❖ தற்போது RDSO அமைப்பினை மூன்று ஆண்டு காலத்திற்கு ஒரு தரநிலை மேம்பாட்டு அமைப்பாக நிர்ணயித்து இந்தியத் தரநிர்ணய வாரியம் ஒரு அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது.

*குறிப்பு*

- இந்தியத் தரநிர்ணய வாரியமானது (Bureau of Indian Standards – BIS) 'ஒரே தேசம், ஒரே தர அளவு' என்ற திட்டத்தினை அமல்படுத்தும் ஒரு நிறுவனமாகும்.
- தற்போது இரயில்வே துறையின் சரக்கு மற்றும் சேவைகளின் தரத்தினை உறுதி செய்வதற்கான பரிமாணங்களை RDSO மற்றும் BIS ஆகியவை இணைந்து வரையறுக்கும்.
- 'ஒரே தேசம், ஒரே தர அளவு' திட்டமானது 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- நாட்டின் உற்பத்திப் பொருளுக்குப் பல்வேறு நிறுவனங்கள் தர நிர்ணயம் செய்வதற்குப் பதிலாக ஒரே ஒரு தர நிர்ணயத்தை மட்டும் உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இது 'இந்தியத் தரம்' எனும் ஓர் அடையாளத்தைப் பிற்காலத்தில் நிலைநிறுத்த உதவும்.

## மாநிலங்களவையின் உறுப்பினர்கள் நியமனம் (பரிந்துரை)

- ஒரு மூத்த வழக்கறிஞரான மகேஷ் ஜெத்மலானி அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் புகழ்பெற்ற பத்திரிக்கையாளரான ஸ்வபன் தாஸ்குப்தா என்பவரை மாநிலங்களவையின் உறுப்பினராக நியமனம் (பரிந்துரை) செய்துள்ளார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர், மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை நியமனம் செய்யலாம்.
- மேலவையின் உறுப்பினராக நியமிக்கப்படுபவர்கள் இலக்கியம், கலை, விளையாட்டு, அறிவியல் மற்றும் சமூக சேவை போன்ற துறைகளிலிருந்து தேர்வு செய்யப் படுவர்.

## நிதி ஆயோக்கின் நிலையான மேம்பாட்டுக் குறியீடு 2020-2021




GOAL-WISE TOP STATES

| Goal | Top States |
|---|---|
| No poverty | Tamil Nadu |
| Zero hunger | Kerala |
| Good health and well-being | Gujarat |
| Quality education | Kerala |
| Gender equality | Chhattisgarh |
| Clean water and sanitation | Goa |
| Decent work and economic growth | Himachal Pradesh |
| Industry, innovation and infrastructure | Gujarat |
| Reduced inequality | Meghalaya |
| Sustainable cities and communities | Punjab |
| Responsible consumption and production | Tripura |
| Climate action | Odisha |
| Life below water | Odisha |
| Life on land | Arunachal Pradesh |
| Peace, justice and strong institutions | Uttarakhand |

- நிதி ஆயோக் அமைப்பானது, தனது 3வது நிலையான மேம்பாட்டுக் குறியீட்டினை (2020-2021) வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீடு இந்தியாவில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.
- சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பரிமாணங்கள் ரீதியில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் எந்த அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை இந்தக் குறியீடானது மதிப்பிடுகிறது.
- 75 எனும் மதிப்புடன் கேரள மாநிலமானது தனது முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.
- 74 எனும் மதிப்புடன் இமாச்சலப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை தங்களது இரண்டாம் இடத்தைத் தக்க வைத்துள்ளன.
- பீகார் மாநிலமானது மோசமான வளர்ச்சி கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## PanBio COVID-19 சோதனைக் கருவி

- "PanBio COVID-19" எனப் பெயரிடப்பட்ட வீட்டிலேயே பயன்படுத்தக் கூடிய வகையிலான இரண்டாவது விரைவு ஆன்டிஜன் சோதனைக் கருவிக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்த சோதனைக் கருவியானது சிகாகோவிலுள்ள அபோட் ரேபிட் டயக்னஸ்டிக்ஸ் டிவிசன் (Abbott Rapid Diagnostics Division) எனும் அமைப்பினால் உருவாக்கப்பட்டதாகும்.
- இதற்கு முன்பு, கோவிசெல்ப் எனும் சோதனைக் கருவிக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது ஒப்புதல் வழங்கி இருந்தது.
- அது பூனாவில் அமைந்துள்ள மைலேப் டிஸ்கவரி சல்யூசன்ஸ் எனும் ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.

## 'மாறும் மூலதன நிறுவனங்கள்' மீதான அறிக்கை

- 'மாறும் மூலதன நிறுவனங்கள்' மீதான டாக்டர் K.P. கிருஷ்ணன் குழுவானது சர்வதேச நிதி சேவை மைய ஆணையத்திடம் (International Financial Services Centres Authority – IFSCA) தனது அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவிலுள்ள சர்வதேச நிதி சேவை மையங்களில் "மாறும் மூலதன நிறுவனங்களின்" செயலாக்கம் குறித்ததாகும்.
- மாறும் மூலதன நிறுவனங்கள் என்பது ஒரு பரந்த அளவிலான அல்லது குறுகிய அளவிலான மாற்று மற்றும் பாரம்பரிய நிதி உத்திகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய ஒரு மாற்று வகையிலான பெருநிறுவன சாதனமாகும்.
- இது நெகிழ்திறனுடைய மூலதனத்தைக் கொண்ட ஒரு பெருநிறுவன சாதனமாகும்.
- ஏனெனில் இதன் மூலம் முதலீடுகள் செய்யப் படும் போது உருவாக்கப்படும் பங்குகள் பங்குதாரர்களால் உடனடியாக மீட்டெடுக்கக் கூடிய வகையில் ஆனதாகும்.
- இது நிதி மேலாண்மை தொழில்துறைக்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

## மினிகிட் திட்டம்

- ❖ மத்திய வேளாண் அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அவர்கள் அதிக மகசூல் தரக் கூடிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளின் விதைகள் அடங்கிய சிறு தொகுப்பினை விவசாயிகளுக்கு வழங்கிடுவதற்கான திட்டமான மினிகிட் என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- ❖ 74000 நிலக்கடலை விதைகளின் சிறுதொகுப்பு மற்றும் 8 லட்சம் அளவிலான சோயா அவரை விதைகளின் சிறுதொகுப்பு மற்றும் 20,27,318 பருப்பு வகை விதைகளின் சிறு தொகுப்பு போன்றவை தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நேரடியாக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.
- ❖ இந்தச் சிறு தொகுப்புகளானது (மினிகிட்) தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பு, தேசிய விதைகள் கூட்டுறவு கழகம் மற்றும் குஜராத் மாநில விதைகள் கழகம் ஆகியவற்றால் வழங்கப்படுகின்றன.
- ❖ இந்தத் திட்டத்திற்கு தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசு முழு நிதி உதவியினை வழங்குகிறது.

## 30 கோடி கோவிட்-19 தடுப்பு மருந்துகள் – பயோலாஜிகல் இ

- ❖ ஹைதராபாத்திலுள்ள தொற்று தடுப்பு மருந்து உற்பத்தியாளரான பயோலாஜிகல் இ எனும் நிறுவனத்திடமிருந்து 30 கோடி கோவிட்-19 தடுப்பு மருந்துகளைப் பெறுவதற்கான (கோர்ப்வாக்ஸ்) ஏற்பாடுகளை சுகாதார அமைச்சகம் நிறைவு செய்துள்ளது.
- ❖ இதற்காக மத்திய அரசானது பயோலாஜிகல் இ நிறுவனத்திற்கு 1,500 கோடி ரூபாயை முன்பணமாக செலுத்த உள்ளது.
- ❖ பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சினை அடுத்து இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப் படும் இரண்டாவது தடுப்பு மருந்து இதுவாகும்.




## தூய ஆற்றல் சார்ந்த புத்தாக்கத்திற்கான உலகளாவிய முன்னெடுப்பு

- ❖ இந்திய நாடானது தூய ஆற்றல் தொழில்நுட்பப் புத்தாக்கப் பரிமாற்றத் திட்டத்தினை (Mission Innovation CleanTech Exchange) தொடங்கியுள்ளது.
- ❖ இது தூய ஆற்றலில் புத்தாக்கம் படைப்பதைத் துரிதப்படுத்துவதற்காக உறுப்பினர் நாடுகளில் ஒரு தொழில் தொடங்குநர் பிணையத்தை உருவாக்குவதற்கான ஓர் உலகளாவிய முன்னெடுப்பாகும்.

- இந்தத் திட்டமானது சிலி நாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட "2021 ஆம் ஆண்டு புத்தாக்கம் முதல் நிகர சுழியம் வரை" எனும் ஒரு உச்சி மாநாட்டில் காணொலி வாயிலாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

## AmB மாத்திரைகள்

- ஹைதராபாத்திலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது நானோ இழை அடிப்படையிலான AmB எனப்படுகின்ற வாய் வழியே உட்கொள்ளக் கூடிய ஆம்போடெரிசின் பி வகை மாத்திரைகளை உருவாக்கியுள்ளது.
- ஹைதராபாத்தின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் இந்த தொழில்நுட்பத்தை அறிவுசார் சொத்துரிமை இல்லாத ஒரு தொழில் நுட்பமாகவே வைத்திருக்க முடிவு செய்துள்ளனர்.
- இந்த மருந்தானது விலை மலிவானதாக இருப்பதோடு, அதிகளவு AmB மூலக் கூற்றை உட்கிரக்கக் கூடிய வகையிலும் சிறுநீரகத்திற்கு அதிக பாதிப்பை உண்டாக்காத வகையிலும் உள்ள ஒரு மருந்தாகும்.
- இதற்கு முன்பு AmB மருந்தானது ஊசிகள் மூலமாக மட்டுமே செலுத்தப்பட்டு வந்தது.
- இது கோவிட் தொற்றுக்குப் பிந்தைய பூஞ்சை நோய்த் தொற்று பாதிப்புகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப் படுகின்றது.

## கருப்பு மிளகின் நுண்ணூட்டத்திற்கான காப்புரிமை

- இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகமானது கருப்பு மிளகினுடைய இலைவழி நுண்ணூட்ட செயல்முறைக்கான காப்புரிமையைப் பெற்றுள்ளது.
- இதற்கான விண்ணப்பமானது 2013 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.
- இந்த செயல்முறையானது டாக்டர் V. சீனிவாசன், டாக்டர் S. ஹம்சா மற்றும் டாக்டர் R. தினேஷ் ஆகிய மூன்று அறிவியலாளர்கள் அடங்கிய ஒரு குழுவினால் உருவாக்கப் பட்டதாகும்.

## ஐ.என்.எஸ் சந்தாயக்

- இது ஒரு நீரியல் வரைவு ஆய்வுக் கப்பலாகும்.
- இது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட முதல் வகை கப்பலாகும்.
- 40 ஆண்டு கால சேவையை முடித்துக் கொண்ட இந்தக் கப்பல் ஆனது சமீபத்தில் ஓய்வு பெற்றது.
- இந்தக் கப்பலானது சுமார் 200 பெரிய நீரியல் வரைவு ஆய்வுகளையும் ஏராளமான சிறு ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது.
- மேலும் இந்தக் கப்பல்
    - ஆபரேஷன் பவன் – 1987 ஆம் ஆண்டு இலங்கையில் இந்திய அமைதிகாப்புப் படைக்கு உதவியாக அனுப்பப்பட்ட படை.

- ஆபரேஷன் வானவில் – 2004 ஆம் ஆண்டு சுனாமிக்குப் பிந்தைய மனிதாபிமான நடவடிக்கைகள்
- இந்திய – அமெரிக்க நாடுகளின் முதல் கூட்டுப் பயிற்சியான ‘டைகர்-டிரையம்ப்’ எனப்படும் மனிதாபிமான மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கை

போன்ற பயிற்சிகளில் பங்கேற்றது.

## ஐக்கிய நாடுகளின் சிஇஓ வாட்டர் மேன்டேட் முன்னெடுப்பு - NTPC நிறுவனம்

- NTPC நிறுவனமானது ஐக்கிய நாடுகளின் சிஇஓ வாட்டர் மேம்டேட் எனும் முன்னெடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- தேசிய அனல்மின் நிலையக் கழகமானது (National Thermal Power Corporation Ltd – NTPC) இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி மையமாகும்.
- சிஇஓ மேன்டேட் என்பது செயல்மிகு நீர் மேலாண்மையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களின் உயர் அதிகாரம் உடைய ஒரு கூட்டமைப்பாகும்.
- NTPC நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருமான குர்தீப் சிங் அவர்கள் வணிகத் தலைவர்களின் ஒரு தேர்வுக் குழுவில் இணைந்துள்ளார்.

## ASPAGNII

- தேசிய நோயெதிர்ப்பியல் நிறுவனத்தின் உயிரித் தொழில்நுட்பத் துறையானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது கழலை எதிர்ப் பொருள் மருந்தான (ஆன்டிஜென்) SPAG9 எனும் தனது மருந்திற்காக வேண்டி ASPAGNII என்ற வர்த்தக முத்திரையைப் பெற்றுள்ளது.
- SPAG9 ஆனது 1998 ஆம் ஆண்டில் டாக்டர் அனில் சூரி என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.
- தற்போது வரை கர்ப்பப்பை வாய், கருப்பைப் புற்றுநோய் போன்றவற்றிற்கான டென்ட்ரிக் செல் அடிப்படையிலான நோயெதிர்ப்பு சிகிச்சையில் பயன்படுத்தப்பட்டு வரும் ASPAGNII மருந்தானது மார்பகப் புற்றுநோய் சிகிச்சையிலும் பயன்படுத்தப்பட உள்ளது.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் - இரண்டு இடங்கள் பின்தங்கிய இந்தியா

- இந்த தரவரிசையில் கடந்த ஆண்டின் நிலையிலிருந்து இரண்டு இடங்கள் பின்தங்கி இந்தியா 117வது இடத்தில் உள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் 193 உறுப்பினர் நாடுகளால் ஏற்றுக் கொள்ளப் பட்ட 2030 செயல்பாட்டு நிரல்களின் அங்கமான 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals – SDG) அமல்படுத்துவதில் இந்தியா இந்த நிலையில் உள்ளது.




- பூடான், நேபாளம், இலங்கை மற்றும் வங்காளதேசம் ஆகிய நான்கு தெற்காசிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் ஒட்டுமொத்த SDG மதிப்பானது நூற்றுக்கு 61.9 ஆகும்.
- ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகியவை 2030 ஆம் ஆண்டுக்குள் SDG இலக்குகளை அடைவதற்கு குறைந்தபட்ச அளவிலான தயார்நிலையிலேயே உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 180 நாடுகளை மதிப்பிடும் சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் இந்தியா 168வது இடத்தில் உள்ளது எனவும் இந்த அறிக்கை கூறுகிறது.

## ஓய்வு பெற்ற அதிகாரிகளை நியமனம் செய்வதற்கான விதிமுறைகள்

- ஓய்வு பெற்ற அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையிலோ (அ) ஆலோசனை சேவை (சுயவேலை) அடிப்படையிலோ நியமனம் செய்வதற்கு முன்னர் ஊழல் தடுப்புப் பிரிவின் நற்சான்றிதழைப் பெறுவதற்கான ஒரு வரையறுக்கப்பட்ட செயல்முறையை மத்திய ஊழல் தடுப்பு ஆணையமானது (Central Vigilance Commission – CVC) வகுத்து உள்ளது.

***செயல்முறை***

- ஒருவரை நியமனம் செய்வதற்கு முன் அவர் எந்த வேலை நியமன அமைப்பிலிருந்து ஓய்வு பெற்றாரோ அந்த அமைப்பிலிருந்து நற்சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.
- ஓய்வு பெற்ற அதிகாரி, ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் பணியாற்றியிருந்தால், அவர் ஓய்வு பெறுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பணியமர்த்தப்பட்ட அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் நற்சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.
- அவற்றை வேண்டுவது தொடர்பான ஒரு தகவல் தொடர்பும் CVC அமைப்பிற்கு அனுப்பப் பட வேண்டும்.

- அந்த அதிகாரி ஏதேனும் ஒரு ஊழல் சார்ந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் (அ) ஊழல் தடுப்பு ஆணையத்தினால் அதிலிருந்து விடுதலை செய்யப் படாதிருந்தால் பின்னர் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முந்தைய வேலை நியமன அமைப்பே பொறுப்பேற்க வேண்டும்.

## ஆட்சிப்பணியாளர்களின் ஓய்வூதிய விதிகள் திருத்தம் – மத்திய அரசு

- பணியாளர், பொது மக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை அமைச்சகம் ஆனது 1972 ஆம் ஆண்டு மத்திய ஆட்சிப்பணி (ஓய்வூதியம்) விதிகள் திருத்தப்பட உள்ளதாக அறிவித்துள்ளது.
- பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை அமைப்புகளில் ஓய்வு பெற்ற எந்தவொரு அதிகாரியும் அவர்களின் அனுபவங்கள் பற்றியும் அந்த நிறுவனங்களில் அவர்கள் பெற்ற நிபுணத்துவம் உள்ளிட்ட தகவல்களையும் அந்த நிறுவனத்தின் தலைவருடைய அனுமதியின்றி வெளியிடக் கூடாது என புதிதாக திருத்தப்பட்ட ஆட்சிப் பணி ஓய்வூதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது.
- இந்த விதிகளை கடைப்பிடிக்கத் தவறினால் அவர்களது ஓய்வூதியம் நிறுத்தப்படலாம் அல்லது முழுவதும் திரும்பப் பெறப்படலாம்.

## குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான குழு

- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகமானது குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கும் குறைந்தபட்ச ஊதியத்திற்கான தேசிய அளவிலான ஒரு வரம்பினை நிர்ணயிப்பதற்கும் வேண்டி ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இக்குழுவிற்குப் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநரான பேராசிரியர் அஜித் மிஷ்ரா அவர்கள் தலைமை தாங்குவார்.
- இந்த முடிவானது மத்திய அரசின் 2019 ஆம் ஆண்டு ஊதிய விதிகளை அமல்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகும்.
- 2019 ஆம் ஆண்டு ஊதிய விதிகளானது சட்டரீதியிலான தேசிய ஊதிய வரம்பினை கட்டாயமாக்குகிறது.

## E-100 எத்தனால் திட்டம்

- பிரதமர் மோடி அவர்கள் E-100 திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் எத்தனால் உற்பத்தி மற்றும் வழங்கீடு போன்றவற்றிற்கான ஒரு பிணையத்தை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- மேலும் இந்தியாவில் எத்தனால் கலவை திட்டத்திற்கான செயல்திட்டம் மீதான நிபுணர் குழுவின் அறிக்கையினையும் (2020-2025) பிரதமர் வெளியிட்டார்.
- இது உலக சுற்றுச்சூழல் தினத்தின் கருத்துருவான "சிறப்பான சுற்றுச்சூழலுக்காக வேண்டி உயிரி எரிபொருட்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல்" என்பதற்கு இணங்க வெளியிடப் பட்டுள்ளது.

*குறிப்பு*

- மேலும் பூனாவின் மூன்று இடங்களில் எத்தனால் வழங்கீட்டு மையங்களை அமைப்பதற்காக E-100 எனும் முதன்மைத் திட்டத்தினையும் பிரதமர் மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் பெட்ரோலுடன் 20 சதவீதம் எத்தனாலைக் கலந்து பயன்படுத்துவதற்கான ஒரு இலக்கினை அரசு மாற்றியமைத்துள்ளது.
- இதற்கு முன்பாக இந்த இலக்கை அடைவதற்கான கால நிர்ணயமானது 2030 ஆம் ஆண்டாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

## யூன்டேப் திட்டம்

- லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் மாணாக்கர்களிடையே டிஜிட்டல் அல்லது இணைய வழி மூலமான கற்றலை ஊக்குவிப்பதற்காக Yountab (யூன்டேப் திட்டம்) எனும் திட்டத்தை லடாக்கின் துணைநிலை ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இது பள்ளிக் கல்வித் துறையின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இத்திட்டத்தின் கீழ் முன்பே பதிவேற்றப்பட்ட ஆன்லைன் (இணையதள) மற்றும் ஆஃப்லைன் (அணைவரி) உள்ளடக்கங்களுடன் கூடிய 12,300 வரைபட்டிகைகள் (tablets) மாணாக்கர்களுக்கு வழங்கப்படும்.
- இதில் பாடப்புத்தகங்கள், காணொலி வாயிலான பாடங்கள் மற்றும் இணையதள வகுப்புச் செயலிகள் போன்றவையும் இடம் பெற்றிருக்கும்.
- இது அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களான 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வழங்கப்படும்.




## செயல்திறன் தரக் குறியீடு

- கல்வி அமைச்சகமானது 2019-20 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் தரக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இது பள்ளிக் கல்வி தொடர்பான 70 குறிகாட்டிகள் ரீதியாக அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை தரநிலைப்படுத்தும் ஒரு செயல்முறையாகும்.
- இது 2017-18 ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டில் முதன்முதலாக வெளியிடப்பட்டது.

**HOW THE REGION FARED**

The states and UTs were scored on 70 parameters under five main heads

| State (Rank) | Learning outcomes, quality (180) | Access (80) | Infra and facilities (150) | Equity (230) | Governance processes (360) | Total (1000) |
|---|---|---|---|---|---|---|
| **Punjab (1)** | 126 | 79 | 150 | 228 | 346 | 929 |
| Delhi (6) | 124 | 77 | 149 | 224 | 324 | 898 |
| Haryana (11) | 134 | 75 | 131 | 217 | 305 | 862 |
| HP (13) | 140 | 77 | 131 | 220 | 271 | 839 |
| J&K (26) | 132 | 55 | 114 | 208 | 254 | 763 |

***முக்கியத் தகவல்கள்***

- பஞ்சாப், சண்டிகர், அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் மற்றும் கேரளா ஆகியவை 2019-20 ஆம் ஆண்டு குறியீட்டில் A++ எனும் உயர்தரப் பிரிவில் இடம் பெற்றுள்ளன.
- டெல்லி, குஜராத், ஹரியானா, இராஜஸ்தான், புதுச்சேரி, தாத்ரா & நகர் ஹவேலி ஆகியவை A+ எனும் பிரிவில் இடம்பெற்றுள்ளன.
- பஞ்சாப் மாநிலமானது ஆளுகை மற்றும் மேலாண்மை ரீதியாக அதிக மதிப்புகளைப் பெற்றுள்ளது.
- பீகார் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்கள் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் என்ற அடிப்படையில் குறைவான மதிப்பினையே பெற்றுள்ளன.




## ரைமோனா காப்புக் காடு

- கோக்ரஜ்ஹர் மாவட்டத்திலுள்ள ரைமோனா காப்புக் காடானது அசாமின் 6வது தேசியப் பூங்காவாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்தக் காடானது பூடான் நாட்டின் எல்லையினூடே அமைந்த போடோலாந்து என்ற ஒரு பிராந்தியப் பகுதியின் எல்லைக்கு உட்பட்டதாகும்.

- அசாமில் ஏற்கனவே ஐந்து தேசியப் பூங்காக்கள் உள்ளன.அவையாவன
    - காசிரங்கா தேசியப் பூங்கா,
    - மனாஸ் தேசியப் பூங்கா,
    - நமேரி தேசியப் பூங்கா,
    - ஒராங் தேசியப் பூங்கா மற்றும்
    - திப்ரூ சைக்கோவா தேசியப் பூங்கா




## அனீமியா முக்த் பாரத் குறியீடு 2020-21

- 2020-21 ஆம் ஆண்டிற்கான இரத்தசோகை இல்லாத பாரதத்திற்கான குறியீடு (அனீமியா முக்த் பாரத் குறியீடு) எனும் ஒரு தேசிய அளவிலான தரவரிசையில் இமாச்சலப் பிரதேச மாநிலமானது மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்த மாநிலம் பெற்ற மதிப்பு 57.1 ஆகும்.
- 64.1 எனும் மதிப்புடன் மத்தியப் பிரதேச மாநிலம் ஆனது முதலிடத்தில் உள்ளது.
- இதனையடுத்து 59.3 மதிப்புடன் ஒடிசா மாநிலம் இடம் பெற்றுள்ளது.



## சுரக்சித் ஹம் சுரக்சித் தும் அபியான்




- ❖ நிதி ஆயோக் மற்றும் பிரமல் அறக்கட்டளை ஆகியவை இணைந்து 'சுரக்சித் ஹம் சுரக்சித் தும் அபியான்' எனும் ஒரு இயக்கத்தைத் தொடங்கியுள்ளன.
- ❖ அறிகுறிகளற்ற அல்லது லேசான அறிகுறிகளுடன் கூடிய கோவிட்-19 நோயாளிகளுக்கு வீட்டிலேயே இருந்து குணமடைவதற்கு வேண்டிய சிகிச்சை முறையிலான உதவிகளை வழங்குவதற்காக என்று இந்த இயக்கமானது தொடங்கப் பட்டு உள்ளது.
- ❖ இது 112 உயர் லட்சிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த இயக்கத்திற்கு பிரமல் அறக்கட்டளையால் உதவிகள் வழங்கப் பட உள்ளது.
- ❖ இந்த நிறுவனமானது அரசு சாரா நிறுவனங்கள் (தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்) மற்றும் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி மாவட்ட ஆட்சியர்களுடன் இணைந்து பணியாற்றும்.

## இந்தியக் காற்றாலை ஆற்றல் சந்தை கண்ணோட்ட அறிக்கை

- ❖ இந்த அறிக்கையானது உலகளாவிய காற்று ஆற்றல் மன்றத்தினால் வெளியிடப் படுகிறது.
- ❖ இந்தியாவின் மத்திய மற்றும் மாநில அளவிலான சந்தைகளில் 10.3 ஜிகாவாட் அளவிலான திட்டங்கள் நடப்பில் செயல்படுத்தப்படுவதாக இந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.
- ❖ இது காற்றாலை ஆற்றல் திட்டங்களை நிறுவும் நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லும்.
- ❖ 2021-25 ஆம் ஆண்டுகளுக்குள் 20 GW திறன் கொண்ட காற்றாலை மின்னாற்றல் நிலையங்களை இந்திய நாடு நிறுவும் என இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதம் வரையிலான காலத்தில் இந்தியாவில் ஒட்டு மொத்த நிறுவப் பட்ட காற்றாலை உற்பத்தித் திறன் 38 ஜிகா வாட் ஆகும்.
- ❖ உலகளவில் இந்தியா நான்காவது மிக அதிக அளவிலான நிறுவப் பட்ட காற்றாலை உற்பத்தித் திறனைக் கொண்டு இருக்கின்றது.
- ❖ ஐரோப்பிய ஒன்றியம் 48 ஜிகாவாட் என்ற நிறுவப் பட்ட உற்பத்தித் திறனைக் கொண்டு காற்றாலை மின்சாரத்தில் முன்னணிச் சந்தையாக இருக்கின்றது.

## குறைந்தபட்ச ஆதரவு விலையில் உயர்வு




- நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் மோட்டா தானியங்கள் ஆகியவற்றிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையினை மத்திய அரசு உயர்த்தி உள்ளது.
- இந்த முடிவானது பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவினால் மேற்கொள்ளப் பட்டது.

*குறிப்பு*

- 2018-19 ஆம் நிதி ஆண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் குறைந்த பட்ச ஆதரவு விலையானது உற்பத்திச் செலவில் 1.5 மடங்கு அளவில் கடைபிடிக்கப் படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது.
- வேளாண் செலவினம் மற்றும் விலை தொடர்பான ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் ஆண்டிற்கு இரண்டு முறை குறைந்தபட்ச ஆதரவு விலையானது நிர்ணயிக்கப் படுகிறது.
- வேளாண் செலவினம் மற்றும் விலை தொடர்பான ஆணையம் ஆனது கரீஃப் மற்றும் ராபி பருவப் பயிர்களுக்கு விலையினைப் பரிந்துரை செய்வதற்காக வேண்டி தனி அறிக்கையைச் சமர்ப்பிக்கும் ஒரு சட்டப் பூர்வ அமைப்பாகும்.

## பசுமை விமான நிலையங்கள் அங்கீகாரம்

- GMR ஏர்போர்ட்ஸ் நிறுவனத்தினால் இயக்கப்படும் டெல்லி மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்களுக்கு சர்வதேச விமான நிலையங்கள் மன்றத்தினுடைய (Airports Council International – ACI) 2021 ஆம் ஆண்டிற்கான பசுமை விமான நிலையங்கள் எனும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- இந்த விமான நிலையங்கள் மேற்கொண்ட நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த முன்னெடுப்புகளுக்காக இந்த அங்கீகாரமானது வழங்கப்பட்டுள்ளது.
- டெல்லி சர்வதேச விமான நிலைய நிறுவனத்திற்கு 'ஆண்டுக்கு 25 பில்லியன் பயணிகளுக்கு மேல் எனும்' பிரிவில் பிளாட்டின அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- ஹைதராபாத் சர்வதேச விமான நிலைய நிறுவனத்திற்கு 'ஆண்டுக்கு 25 மில்லியன் பயணிகளுக்கு கீழ்' எனும் பிரிவில் தங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் நோக்கம்,
  - வான்வழிப் போக்குவரத்தினால் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக வேண்டி சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறப்பான நடைமுறைகளை மேம்படுத்துவது,
  - சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்களில் சிறப்பாக செயலாற்றிய விமான நிலையப் பணியாளர்களுக்கு அங்கீகாரம் அளிப்பது போன்றவையாகும்.
- ACI அமைப்பின் 2021 ஆம் ஆண்டு பசுமை விமான நிலையங்கள் அங்கீகாரத் திட்டத்தின் கருத்துரு, 'காற்றுத் தர மேலாண்மை' (Air Quality Management) என்பதாகும்.




## உயர்கல்வி குறித்த அனைத்திந்தியக் கணக்கெடுப்பு

- கல்வி அமைச்சகமானது 2019-2020 ஆம் ஆண்டிற்கான "உயர்கல்வி குறித்த அனைத்திந்தியக் கணக்கெடுப்பு" என்ற ஆய்வு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் 75 ஆக இருந்த தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 135 ஆக உயர்ந்துள்ளது என இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
- 2015-16 ஆம் ஆண்டு முதல் 2019-20 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மாணாக்கர் சேர்க்கையானது 11.4 சதவீதம் உயர்ந்துள்ளது.
- இதே காலகட்டத்தில் மாணவிகளின் சேர்க்கை வீதமானது 18.2 சதவீதம் உயர்ந்து உள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் உயர்கல்வியின் மொத்த சேர்க்கையானது 3.85 கோடியாகும் (3.04% உயர்ந்துள்ளது).

- இது 2018-19 ஆம் ஆண்டில் 3.74 கோடியாகவும் 2014-15 ஆம் ஆண்டில் 3.42 கோடியாகவும் இருந்தது.
- பாலின சமத்துவக் குறியீடும் 1.01 என்ற அளவில் மேம்பட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டு முதல் முனைவர் பட்டதாரி படிப்புகளுக்கான சேர்க்கையின் எண்ணிக்கையும் 60% உயர்ந்துள்ளது.

*தமிழ்நாடு*

- 51.4 சதவீத மொத்த மாணவர் சேர்க்கையுடன் தமிழ்நாடானது தேசிய சராசரியை விட இருமடங்கு அதிகளவில் மாணவர் சேர்க்கை உயர்வினைக் கண்டுள்ளது.
- தமிழகத்தின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது, 2030 ஆம் ஆண்டுக்குள் 50% மொத்த மாணவர் சேர்க்கையை எட்ட வேண்டும் என்ற தேசிய கல்விக் கொள்கையின் இலக்கையும் விஞ்சியுள்ளது.
- 2010-11 ஆம் ஆண்டில் 32.9% ஆக இருந்த மாநிலத்தின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது 2019-20 ஆம் ஆண்டில் 51.4% ஆக உயர்ந்துள்ளது.




## இந்தியாவில் முதன்முறையாக மின்னழுத்த மூலமாற்றி அடிப்படையிலான HVDC அமைப்பு

- இந்திய மின்சார அமைப்புக் கழகமானது (Power Grid Corportation of India Ltd – PGCIL) இந்தியாவிலேயே முதல்முறையாக மின்னழுத்த நேர்மின்னோட்ட (High Voltage Direct Current – HVDC) மின்சாரப் பரப்புகை அமைப்பின் முழுமையான செயல்பாட்டைத் தொடங்கி வைத்துள்ளது.
- இது நாட்டின் தென்பகுதியினுடைய ஆற்றல் அமைப்பினை வலுப்படுத்தும்.
- PGCIL நிறுவனமானது 320 KV, 2000 MW திறன் உடைய புகழூர் (தமிழ்நாடு) – திருச்சூர் (கேரளா) ஆகியவற்றுக்கு இடையேயான மின்னழுத்த மூல மாற்றி என்ற அடிப்படையில் அமைந்த உயர் மின்னழுத்த நேர்மின்னோட்ட அமைப்பின் மோனோ போல் – I (Monopole-I) அல்லது ஒற்றைத் துருவம் என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளது.

## பிராணா, வாயு மற்றும் ஸ்வஸ்தா

- இஸ்ரோவின் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மையமானது மூன்று வெவ்வேறு வகையிலான செயற்கை சுவாசக் கருவிகளையும் ஆக்சிஜன் செறிவூட்டி கருவி ஒன்றினையும் உருவாக்கியுள்ளது.
- அவற்றிற்குப் பிராணா, வாயு மற்றும் ஸ்வஸ்தா எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- பிராணா என்பது Amble bag எனும் உபகரணத்தின் தானியங்கு சுருக்கமுறை மூலம் நோயாளிகளுக்குச் சுவாச வாயுவை வழங்குகிறது.
- சுவஸ்தா எனும் சாதனமானது மின்சார ஆற்றலின் உதவியின்றி இயங்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- வாயு (Vau) என்பது மலிவு விலையிலான ஒரு செயற்கைச் சுவாசக் கருவியாகும்.

## மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதம் – இந்தியா

- 18 முதல் 23 வயதிற்குட்பட்ட வயது வகுப்பினரிடையே உயர்கல்விக்கான மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது கணக்கிடப்படுகிறது.
- 2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவில் உயர்கல்வியின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது 27.1% சதவீதமாகும்.
- இது கடந்த ஆண்டைவிட (26.3%) முன்னேற்றம் கண்டுள்ளது.
- இந்த விகிதமானது பட்டியலினச் சாதியினரிடையே 23.4 சதவீதமாகவும் பட்டியலினப் பழங்குடியினரிடையே 18 சதவீதமாகவும் உள்ளது.
- உயர்ந்தபட்ச மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது சிக்கிமில் (76%) பதிவாகி உள்ளது.
- இது தமிழ்நாட்டில் 51.4 சதவீதமாக உள்ளது.
- இது கர்நாடகாவில் 32 சதவீதமாகவும் உள்ளது.
- மற்ற மாநிலங்களாவன : கேரளா (39%), தெலுங்கானா (36%), ஆந்திரப் பிரதேசம் (35%) மற்றும் மகாராஷ்டிரா (32.3%).
- மாணாக்கர் சேர்க்கையில் (எண்ணிக்கையில்) உத்திரப் பிரதேச மாநிலம் முன்னிலை வகிக்கிறது.
- இது 49.1% மாணவர்களையும் 50.9% மாணவிகளையும் கொண்டுள்ளது.
- இதனையடுத்து மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- 2015-16 ஆம் ஆண்டில் 799 ஆக இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையானது 30.5% உயர்ந்து 2019-20 ஆம் ஆண்டில் 1043 ஆக உயர்ந்துள்ளது.
- நாட்டிலுள்ள 42,343 கல்லூரிகளில் 60.56% கல்லூரிகள் கிராமப்புறங்களில் அமைந்து உள்ளதோடு, அவற்றில் 10.75% கல்லூரிகள் பிரத்தியேகமாக பெண்களுக்காகவே கட்டப் பட்டுள்ளன.
- நாட்டிலுள்ள பெரும்பாலான கல்லூரிகள் (78.6%) தனியாரால் நிர்வகிக்கப் படுவதில், மாநில வாரியாக ஆந்திரப் பிரதேசம் (81%), தெலுங்கானா (80%), உத்திரப் பிரதேசம் (78.5%) மற்றும் தமிழ்நாடு (77.6%) ஆகியன உள்ளன.
- பல்கலைக்கழக மாணாக்கர் சேர்க்கையில் (துணை அலகுகள் உட்பட) 9,67,034 என்ற

கணக்குடன் மகாராஷ்டிரா முதலிடத்திலும் 9,26,490 மாணாக்கர்கள் என்ற கணக்குடன் தமிழ்நாடு மாநிலமும் 8,16,110 மாணாக்கர்கள் என்ற கணக்குடன் டெல்லியும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.




## மழைப்பொழிவு – மே 2021

- 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் கடந்த 121 ஆண்டுகளிலான இரண்டாவது அதிகபட்ச மழைப் பொழிவு பதிவாகியுள்ளதாக இந்திய வானியல் ஆராய்ச்சித் துறையானது கூறியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தியா முழுவதும் 107.9 மில்லிமீட்டர் அளவிற்கு மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.
- இது 62 மி.மீ. எனும் நீண்டகால சராசரியை விட 74% அதிகமாகும்.
- 1990 ஆம் ஆண்டில் அதிகபட்ச மழைப் பொழிவானது 110.7 மில்லிமீட்டராக பதிவானது.
- அரபிக்கடலில் உருவான டவுதே புயல் மற்றும் வங்கக் கடலில் உருவான யாஸ் புயல் ஆகியவையே இதற்கு (மே 2021) காரணமாகும்.

## இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியில் உயர்வு

- 2020-21 ஆம் ஆண்டில் இந்தியாவின் இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியானது 51% உயர்ந்துள்ளது.
- கடந்த ஆண்டில் வேளாண் ஏற்றுமதியானது 17% அதிகரித்து 41.25 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது.
- இந்தியாவில் இயற்கை வேளாண்மை முறையானது அதன் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது.
- 0.76 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான இயற்கை வேளாண்மையுடன் மத்தியப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- இது இந்தியாவின் மொத்த இயற்கைச் சாகுபடிப் பரப்பின் 27 சதவீதத்திற்குச் சமம் ஆகும்.

## நமஸ்தே யோகா

- யோகாவிற்காகவே என்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட 'நமஸ்தே யோகா' எனும் ஒரு கைபேசி செயலியானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- இது மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனத்துடன் இணைந்து ஆயுஷ் அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் வெளியிடப்பட்டது.
- நமஸ்தே யோகா செயலியானது பொதுமக்களுக்கான ஒரு தகவல் தளமாக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- யோகாவைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் பெருவாரியான சமூகத்தினர் யோகாவினை எளிதில் பெறக் கூடிய வகையில் அதனை மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த செயலி வெளியிடப் பட்டுள்ளது.

## FAME II திட்டம் – திருத்தியமைப்பு

- கனரக தொழிற் துறை அமைச்சகமானது நடப்பிலுள்ள FAME II என்ற திட்டத்தில் சில முக்கியத் திருத்தங்களை அறிவித்துள்ளது.
- இந்த அமைச்சகமானது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மின்சார இருசக்கர வாகனங்களுக்காக வேண்டி சில சலுகைகளை நிர்ணயித்துள்ளது.
- முன்னதாக மின்சார இருசக்கர வாகனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானிய வீதமானது ஒரு கிலோவாட் மின் ஆற்றல் அலகிற்கு (Kwh) ரூ. 10,000 ஆகும்.
- இது தற்போது ஒரு கிலோவாட் மின் ஆற்றல் அலகிற்கு (Kwh) ரூ.15,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

## சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தின் 44வது சந்திப்பு

- சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தின் 44வது சந்திப்பானது 2021 ஆம் ஆண்டு ஜுன் 12 அன்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- கோவிட்-19 சார்ந்த மருத்துவ வழங்கீடுகளுக்கு வரிவிலக்கு வழங்குவது பற்றி ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவின் பரிந்துரையினைச் சரக்கு மற்றும் சேவை வரி மன்றமானது (Goods and Service Tax Council) ஏற்றுக் கொண்டது.
- சரக்கு மற்றும் சேவை வரி வீதத்தில் பல (GST) மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இவை 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 வரை செயலில் இருக்கும்.
- 28 சதவீதமாக இருந்த அவசர ஊர்திகளுக்கான GST வீதமானது 12 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.
- கோவிட்-19 சோதனைக் கருவிகள், மருத்துவ ஆக்சிஜன் மற்றும் செயற்கை சுவாசக் கருவிப் போன்றவற்றிற்காக GST வீதமானது 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப் பட்டுள்ளது.
- கை சுத்திகரிப்பான் (கிருமிநாசினி) மீதான GST வீதமானது 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.
- வெப்பநிலையைப் பரிசோதிக்கும் கருவிகள் மீதான GST வீதமானது 18 சதவீதம் என்ற அளவிலிலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- ஆக்சிஜன் அளவீட்டுக் கருவிகளுக்கான (பல்ஸ் ஆக்சிமீட்டர்) GST வீதமானது (தனிநபர் இறக்குமதி உட்பட) 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டு உள்ளது.
- சில குறிப்பிட்ட அழற்சி கண்டறியும் கருவிகள் மீதான வரி வீதமானது 12 சதவீதம் என்ற

அளவிலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

❖ தகனம் செய்ய பயன்படுத்தப்படும் எரிவாயு (அ) மின்சார (அ) இதர உலைகள் மீதான (நிறுவல் செலவினம் உட்பட) GST வரி வீதமானது 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

❖ டோக்கிலிசுமாப் (Tocilizumab) மற்றும் ஆம்போடெரிசின் B (Amphotericin B) உள்ளிட்ட கோவிட்-19 சிகிச்சையுடன் தொடர்புடைய மருந்துகள் மீது GST வரி வீதம் விதிக்கப் பட மாட்டாது.

❖ முன்னதாக இதற்கான GST வரி வீதமானது 5% ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

❖ ஹெபாரின் மற்றும் ரெம்டெஸ்வீர் போன்ற இரத்த உறைவுத் தடுப்பு மருந்துகள் மீதான GST வீதமானது 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

❖ செயற்கை சுவாசக் கவசங்கள் (அ) கேனுலா (அ) தலைக்கவசம் மீது 5% GST வீதமானது விதிக்கப் படும்.

**Recommendations of 44th GST Council meeting**

| S. No. | Description | Present GST Rate | GST Rate recommended by GST Council |
|---|---|---|---|
| **A. Medicines** | | | |
| 1. | Tocilizumab | 5% | Nil |
| 2. | Amphotericin B | 5% | Nil |
| 3. | Anti-Coagulants like Heparin | 12% | 5% |
| 4. | Remdesivir | 12% | 5% |
| 5. | Any other drug recommended by Ministry of Health and Family Welfare (MoHFW) and Dept. of Pharma (DoP) for Covid treatment | Applicable Rate | 5% |
| **B. Oxygen, Oxygen generation equipment and related medical devices** | | | |
| 1. | Medical Grade Oxygen | 12% | 5% |
| 2. | Oxygen Concentrator/ Generator, including personal imports thereof | 12% | 5% |
| 3. | Ventilators | 12% | 5% |
| 4. | Ventilator masks / canula / helmet | 12% | 5% |
| 5. | BiPAP Machine | 12% | 5% |
| 6. | High flow nasal canula (HFNC) device | 12% | 5% |
| **C. Testing Kits and Machines** | | | |
| 1. | Covid Testing Kits | 12% | 5% |
| 2. | Specified Inflammatory Diagnostic Kits, namely D-Dimer, IL-6, Ferritin and LDH | 12% | 5% |
| **D. Other Covid-19 related relief material** | | | |
| 1. | Pulse Oximeters, incl personal imports thereof | 12% | 5% |
| 2. | Hand Sanitizer | 18% | 5% |
| 3. | Temperature check equipment | 18% | 5% |
| 4. | Gas/Electric/other furnaces for crematorium, including their installation, etc. | 18% | 5% |
| 5. | Ambulances | 28% | 12% |

**These rate reductions/exemptions shall remain in force up to 30th September 2021.**

## செப்புப் பட்டய வெட்டெழுத்துகள் – ஸ்ரீசைலம் ஆலயம்



- பிரம்மரம்பா மல்லிகார்ஜுன தேவஸ்தானமானது ஸ்ரீசைலம் ஆலய வளாகத்திற்கு அருகேயுள்ள காந்தா மடத்தினைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது.
- இதில் ஆறு செப்புப் பட்டய வெட்டெழுத்துகள் கண்றியப்பட்டுள்ளன.
- மேலும் அங்கு 18 செப்புத் தகடுகளும் கண்டறியப்பட்டுள்ளன.
- இது 14 மற்றும் 16 ஆகிய நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.
- இந்த ஆறு செப்புப் பட்டயங்களுள்,
    - நான்கில் சமஸ்கிருதம் மற்றும் நந்தி-நகரி எழுத்து வடிவத்தில் வெட்டெழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன.
    - மற்ற இரண்டில் தெலுங்கு எழுத்து வடிவில் வெட்டெழுத்துகள் பொறிக்கப் பட்டு உள்ளன.

## பைரோஸ்ட்ரியா லால்ஜி



- காபி குடும்ப இனத்தைச் சேர்ந்த 15 மீட்டர் உயரமான மரமொன்று அந்தமான் தீவில் கண்டறியப் பட்டுள்ளது.
- பைரோஸ்ட்ரியா லால்ஜி எனும் இந்தப் புதிய இனமானது இந்தியாவில் பைரோஸ்ட்ரியா இனத்தின் இருப்பிற்கான முதல் பதிவு ஆகும்.
- இந்த இனங்களைச் சேர்ந்த மரங்கள் பொதுவாக மடகாஸ்கர் பகுதியில் காணப் படுகின்றன.

## தங்க நகைகளின் தரக் குறியீடு




- தங்க நகைகளுக்குத் தரக்குறியிடுவதை அரசு கட்டாயமாக்கியுள்ளது.
- இந்தியத் தர நிர்ணய முகமை இதற்காகப் பணிக்கப்பட்டுள்ளது.
- தங்க நகைகளைத் தரக் குறியிடுதல் என்பது இந்த விலைமதிப்பற்ற உலோகத்தின் மீதான ஒரு தூய்மைச் சான்றிதழாகும்.
- எனவே 2021 ஆம் ஆண்டு ஜுன் 15 ஆம் தேதி முதல் நகை விற்பனையாளர்கள் 14, 18 மற்றும் 22 காரட் தங்க நகைகளை மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவர்.

## உள்நாட்டு தொழிலாளர்களை பணியமர்த்தும் ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு

- இந்தியா மற்றும் குவைத் ஆகியவை சமீபத்தில் உள்நாட்டுத் தொழிலாளர்களை பணியமர்த்துவது தொடர்பான ஒத்துழைப்பு மீதான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது வளைகுடா நாடுகளில் உள்ள இந்திய உள்நாட்டு தொழிலாளர்கள் தொடர்பான விவகாரங்களை சட்டரீதியிலான கட்டமைப்பிற்குள் கொண்டு வரும்.
- இது சட்டத்தின் கீழ் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பினை வழங்கும்.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது இந்திய தூதகர் சிபி ஜியார்ஜ் மற்றும் குவைத் நாட்டின் வெளியுறவுத் துறைத் துணை அமைச்சர் மஜ்தி அஹ்மத் அல் தஃபீரி ஆகியோரினால் கையெழுத்திடப் பட்டது.

## அரசியல் நன்கொடைகள்

- 2019-20 ஆம் ஆண்டில் சுமார் ரூ.750 கோடியைப் பெற்று தனிநபர் மற்றும் பெருநிறுவன நன்கொடை பட்டியலில் பாரதிய ஜனதா கட்சி முதலிடத்தில் உள்ளது.
- இதே காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சி பெற்ற நன்கொடையின் மதிப்பு ரூ.139 கோடி ஆகும்.
- அரசியல் நன்கொடைகள் பட்டியலில் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக பாரதிய ஜனதா கட்சி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## ஆழ்கடல் ஆய்வுத் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழுவானது 'ஆழ்கடல் ஆய்வுத் திட்டத்தை' அமல்படுத்துவதற்கு வேண்டி அதன் ஒப்புதலை வழங்கி உள்ளது.
- இந்தத் திட்டமானது புவி அறிவியல் அமைச்சகத்தினால் முன்மொழியப்பட்டதாகும்.
- இது ஆழ்கடலிலுள்ள வளங்களை ஆராய்ந்து அவற்றை நிலையான முறையில் பயன்படுத்துவதற்காக வேண்டி ஆழ்கடல் தொழில்நுட்பங்களை உருவாக்கச் செய்வதற்கான ஒரு திட்டமாகும்.
- இது ஒரு ஐந்தாண்டு காலத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் முதல் கட்டமானது 2021-2024 எனும் காலகட்டத்தின் போது மேற்கொள்ளப் படும்.
- இந்திய அரசின் நீலப் பொருளாதார முன்னெடுப்பிற்கு வேண்டிய உதவிகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- புவி அறிவியல் அமைச்சகமானது இந்தத் திட்டத்தின் முதன்மை அமைச்சமாக செயல்படும்.

## இந்தியாவில் அயல்நாட்டு மாணாக்கர்களின் எண்ணிக்கை

- 2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள அயல்நாட்டு மாணாக்கர்களின் எண்ணிக்கையானது 50000 என்ற அளவினைத் தொட்டது.
- கல்வி அமைச்சகத்தின் கணக்கெடுப்பின் படி, 2018-19 ஆம் அண்டில் 47,427 ஆகக் கணக்கிடப் பட்ட மொத்த அயல்நாட்டு மாணாக்கர்களின் எண்ணிக்கையை விட 2019-20 ஆம் ஆண்டில் அதன் எண்ணிக்கையானது சற்று உயர்ந்து 49,348 ஆக உள்ளது.
- 2,00,000 அயல்நாட்டு மாணாக்கர்கள் எனும் ஒரு இலக்குடன் அயல்நாட்டு மாணாக்கர்களை ஈர்க்கும் ஓர் இடமாகத் திகழ வேண்டும் என்ற இந்தியாவின் குறிக்கோளை அடைவதிலிருந்து அது வெகுதொலைவில் உள்ளது என்பதை இது குறிக்கிறது.
- இந்தியாவிலுள்ள அயல்நாட்டு மாணாக்கர்களில் அதிக அளவில் உள்ளவர்கள் அண்டை நாடுகளைச் சேர்ந்தவர்கள்.
    - நேபாளம் – 28.1%
    - ஆப்கானிஸ்தான் – 9.1%
    - வங்காள தேசம் – 4.6% மற்றும்

- பூடான் – 3.8%

- ❖ மாநிலங்கள் அளவில் கர்நாடகாவில் அதிகளவு அயல்நாட்டு மாணாக்கர்கள் (10,231) உள்ளனர்.
- ❖ தமிழ்நாடு (4,461) 5வது இடத்தில் உள்ளது.

## BRICS அமைப்பின் பல்கலைக்கழகங்கள் மாநாடு – 2021

- ❖ மும்பையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது காணொலி வாயிலாக நடைபெறும் மூன்று நாட்கள் நிகழ்வான "BRICS அமைப்பின் பல்கலைக் கழகங்கள் மாநாட்டினை" நடத்துகிறது.
- ❖ இந்த மாநாடானது 2021 ஆம் ஆண்டில் 13வது BRICS உச்சி மாநாட்டிற்கு இந்தியா தலைமை வகிப்பதன் ஓர் அங்கமாக நடத்தப்படுகிறது.
- ❖ இந்த மாநாட்டின் கருத்துரு, "Electric Mobility" (மின்சார இயங்குதிறன்) என்பதாகும்.




## NAFED செறிவூட்டப்பட்ட அரிசித் தவிட்டு எண்ணெய்

- ❖ உணவு மற்றும் பொது விநியோகத் துறையானது NAFED செறிவூட்டப்பட்ட அரிசித் தவிட்டு எண்ணெய்யினை இணையத்தில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ அரிசித் தவிட்டு எண்ணெய் என்பது அரிசியைச் சுற்றியுள்ள உறுதியான பழுப்பு நிறமுடைய உமி எனப்படும் தவிட்டிலிருந்து பிரித்தெடுக்கப்படும் ஒரு எண்ணெய் ஆகும்.
- ❖ தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பின் அரிசித் தவிட்டு எண்ணெயானது செறிவூட்டப் பட்டு வழங்கப் படும்.
- ❖ இதன் மூலம் இந்த எண்ணெயில் கூடுதலான ஊட்டச்சத்துகள் மற்றும் வைட்டமின்கள் இருப்பது உறுதி செய்யப்படும்.
- ❖ இந்த ஒரு முன்னெடுப்பானது வருங்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெயைச் சார்ந்திருக்கும் நமது நாட்டின் நிலையினைக் கணிசமான அளவில் குறைக்கும்.

## உலகளாவிய யோகா மாநாடு 2021

- ❖ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் 2021 ஆம் ஆண்டு உலகளாவிய யோகா மாநாட்டில் உரையாற்றினார்.

- இந்த நிகழ்வானது இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் மற்றும் இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து "மோக்சயதன் யோக் சன்சதன்" எனும் ஒரு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த நிகழ்வானது 2021 ஆம் ஆண்டின் ஜூன் 21 ஆம் தேதியில் வரும் 7வது சர்வதேச யோகா தினத்தைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## இந்தியாவின் பாலைவனமாதல் மற்றும் நிலச்சீரழிவு வரைபடம்

- இது அகமதாபாத்திலுள்ள இஸ்ரோவின் விண்வெளிச் செயல்பாட்டு மையத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த வரைபடமானது 2018-19 ஆம் ஆண்டின் காலகட்டத்தில் தரம் குறைந்த நிலங்களின் மாநில வாரியான வரைபடத்தினை வழங்குகிறது.
- இது ஜூன் 17 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்ட பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலகத் தினத்தன்று வெளியிடப்பட்டது.




## தேசியக் கடல்சார் பாரம்பரிய வளாகம்

- குஜராத்தின் லோத்தல் என்னுமிடத்தில் தேசியக் கடல்சார் பாரம்பரிய வளாகத்தை நிறுவுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பிற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகமும் கலாச்சாரத் துறை அமைச்சகமும் கையெழுத்திட்டுள்ளன.
- தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகமானது (National Maritime Heritage Complex – NMHC) ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக உருவாக்கப்பட உள்ளது.

- இங்கு பண்டைய காலம் தொடங்கி நவீன காலம் வரையிலான இந்தியாவின் கடல்சார் பாரம்பரியங்கள் காட்சிக்கு வைக்கப்படும்.
- இதன் தனித்துவம் மிக்க அம்சமானது பண்டைய கால லோத்தல் நகரை (பண்டைய சிந்து நாகரீக நகரம்) மறு உருப்பெறச் செய்து காட்சிப்படுத்துவதே ஆகும்.




## IN – EVNAVFOR

- பிரான்சு, ஸ்பெயின் மற்றும் இத்தாலிய நாட்டுக் கடற்படைகளின் போர்க் கப்பல்களை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியக் கடற்படையுடனான ஒரு கூட்டுப் பயிற்சியில் இந்தியக் கடற்படையானது முதல்முறையாக பங்கேற்றுள்ளது.
- இது ஏடன் வளைகுடாவில் நடைபெற்றது.
- இந்தியக் கடற்படையின் கப்பலான திரிகந்த் எனும் கப்பல் இந்தப் பயிற்சியில் பங்கேற்றது.



## புதிய முத்தரப்பு பேச்சுவார்த்தை – இந்தியா

- இந்தியா – இத்தாலி - ஜப்பான் ஆகியவை தமது முத்தரப்பு பேச்சுவார்த்தையை சமீபத்தில் தொடங்கி உள்ளன.
- இந்தோ-பசிபிக் பகுதியிலுள்ள சில அரசுகளினுடைய அதிகாரங்களின் அடிப்படையில் இல்லாமல் அனைத்து நாடுகளின் கருத்தின் அடிப்படையில் ஒரு வலுவான மற்றும் விதிகள் சார்ந்த சர்வதேச முறைமையை உருவாக்குவதற்காக இது தொடங்கப் பட்டுள்ளது.
- கடந்த ஆண்டில் இந்தியா - பிரான்ஸ் - ஆஸ்திரேலியா ஆகியவை ஒரு முத்தரப்புப் பேச்சு வார்த்தையைத் தொடங்கின.

## தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 79வது பிரிவு

- இந்தியாவில் டிவிட்டருக்கு வழங்கப்பட்டிருந்த சட்டப் பாதுகாப்பை அது இழந்தது.
- இந்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளில் கூறியுள்ளது படி சட்டமுறை அதிகாரிகளை அது நியமிக்கத் தவறியதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அதாவது தகவல்தொழில்நுட்பச் சட்டத்தின் 79வது பிரிவின் கீழ் டிவிட்டருக்கு இனி சட்டப் பாதுகாப்பு வழங்கப் படாது.
- டிவிட்டர் தளத்தில் வெளியாகும் தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது சட்ட விரோதமானவையாகக் கருதப்படும் அனைத்து உள்ளடக்கங்களுக்கும் அதன் நிர்வாக அதிகாரிகளே இனிமேல் பொறுப்பேற்க வேண்டும்.




## 2வது தேசிய அரிவாள் உயிரணு (செல்) மாநாடு

- பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சர் அர்ஜுன் முண்டா 2வது தேசிய அரிவாள் உயிரணு மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.

- இது இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை பங்காளர்களின் கூட்டமைப்பு, அப்போலோ மருத்துவமனை, நோவார்தீஸ், பிரமல் அறக்கட்டளை போன்றவற்றுடன் இணைந்து பழங்குடியினர் விவகார அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- இதில் அரிவாள் உயிரணு நோயிற்கான சிகிச்சையில் ஏற்பட்ட சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலப் போக்குகள் குறித்து விவாதங்கள் மேற்கொள்ளப்படும்.




## இந்தியா மற்றும் பூடான் – புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இரு நாடுகளுக்கிடையே சுற்றுச்சூழல் ரீதியிலான ஒத்துழைப்பினை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் பூடானும் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் அவர்களால் காணொலி மூலம் கையெழுத்திடப் பட்டது.
- இது பருவநிலை மாற்றம், கழிவு மேலாண்மை போன்ற பகுதிகளில் இருதரப்பு ஒப்பந்தத்தின் புதிய தளங்களை உருவாக்கும்.

## 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் : வரைபடம்

- இந்தியத் தேர்தல் ஆணையமானது சமீபத்தில் "2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் : வரைபடம்" என்ற ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- இந்த வரைபடமானது தலைமை தேர்தல் ஆணையர் சுசீல் சந்திரா மற்றும் இதர மற்ற இரு தேர்தல் ஆணையர்களான ராஜீவ் குமார் மற்றும் அனுப் சந்திரா பாண்டே ஆகியோரால் வெளியிடப்பட்டது.
- இந்த ஆவணமானது ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் பயனளிக்கக் கூடியதோடு இந்தியத் தேர்தலின் பரவலான பகுதியினை ஆராயவும் இது உதவும்.
- இந்த பொதுத் தேர்தல் வரைபடமானது 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் அனைத்துப் புள்ளி விவரங்கள் மற்றும் தரவுகளை உள்ளடக்கியதாகும்.

## கொடி சத்தியாகிரகம்

- ஜுன் 18 ஆம் தேதியன்று மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூர் எனுமிடத்தில் கொடி சத்தியாகிரகத்தினை கடைபிடிப்பதற்கான ஒரு நிகழ்வினை கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்தது.
- கொடி சத்தியாகிரகம் என்பது விடுதலைப் போராட்ட வீரர்களால் தொடங்கப்பட்டு பிரித்தானிய அரசினை கதிகலங்கச் செய்த ஒரு இயக்கமாகும்.
- மேலும் இது சுதந்திரப் போராட்டத்திற்குப் புத்துயிர் அளித்த ஓர் இயக்கமும் ஆகும்.
- இது ஜண்டா சத்தியாகிரகம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இது 1923 ஆம் ஆண்டில் ஜபல்பூர் மற்றும் நாக்பூர் ஆகிய இடங்களில் நடத்தப் பட்டது.

## அஜித் மிஸ்ரா நிபுணர் குழு

- மத்திய அரசானது பேராசிரியர் அஜித் மிஸ்ரா தலைமையின் கீழ் ஒரு நிபுணர் குழுவினை அமைத்துள்ளது.
- இவர் ஒரு புகழ்பெற்ற பொருளாதார வல்லுநராவார்.
- இந்தக் குழுவானது குறைந்தபட்ச ஊதியம் மற்றும் தேசிய ஊதிய வரம்பினை நிர்ணயிப்பதற்கான தொழில்நுட்ப உள்ளீடுகள் மற்றும் பரிந்துரைகளை அரசிற்கு வழங்கும்.

## வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு

- பெங்களூருவானது இந்தியாவில் வாழ்வதற்கு மிகவும் ஏற்ற நகரமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான வாழ்வாதார எளிமையாக்கல் குறியீட்டில் இது கூறப்பட்டு உள்ளது.
- இந்தக் குறியீடானது அறிவியல் மற்றும் பொருளாதார மையத்தினால் வெளியிடப் படுகிறது.
- 2020 ஆம் ஆண்டின் வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடானது இந்திய சுற்றுச்சூழல் நிலை 2021 எனும் அறிக்கையின் ஓர் அங்கமாகும்.
- இதில் பெங்களூருவைத் தொடர்ந்து சென்னை, சிம்லா, புவனேஷ்வர் மற்றும் மும்பை ஆகியவை உள்ளன.
- ஒவ்வொரு நகரமும் அனைத்துப் பரிமாணங்களிலும் 100 என்ற மதிப்பின் கணக்கில் மதிப்பிடப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடானது அதன் இரண்டாவது பதிப்பாகும்.
- முதல் வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடானது 2018 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.




## “ஜான் ஹை தோ ஜஹான் ஹை” விழிப்புணர்வு பிரச்சாரம்

- இது சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது நாட்டின் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் கொரோனா தடுப்பூசி செலுத்துதல் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்காகத் தொடங்கப்பட்ட தேசிய அளவிலான விழிப்புணர்வுப் பிரச்சாரமாகும்.
- நடப்பில் உள்ள தடுப்பூசி வழங்கல் இயக்கம் தொடர்பான வதந்திகளையும் அச்சங்களையும் அழித்து அவற்றைத் தடுப்பதற்காகவும் வேண்டி இது தொடங்கப் பட்டுள்ளது.

## மரவள்ளிக் கிழங்கு – உயிரி எத்தனால் உற்பத்தி

- இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் மத்திய கிழங்குப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனமானது மரவள்ளிக் கிழங்கினை உயிரி எத்தனாலை உற்பத்தி செய்வதற்கானஒரு மூலப் பொருளாகப் பயன்படுத்தலாம் எனக் கண்டறிந்துள்ளது.
- இந்தியாவின் பெட்ரோலுடன் எத்தனால் கலப்புத் திட்டத்தின் இலக்கை (2025) அடைய இது உதவும்.
- மரவள்ளிக் கிழங்கில் மாவுச்சத்து (ஸ்டார்ச்) அடங்கியுள்ளது.
- இது குறைவான பராமரிப்பு நிலைகளிலும் வளரும் தன்மை உடையது.

## நான்கு உறுப்பினர்கள் கொண்ட கையகப்படுத்துதல் குழு – SEBI

- சந்தை ஒழுங்குமுறை ஆணையமான இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (Security and Exchange Board of India – SEBI) நான்கு உறுப்பினர்கள் அடங்கிய தனது (பொறுப்பு ஏற்பு) கையகப் படுத்துதல் குழுவினை மீண்டும் நியமித்து மறு நியமனம் செய்து உள்ளது.
- சிறுபான்மை அளவிலான பங்குதாரர்களைப் பெறுவதற்கு ஒரு கையகப்படுத்தும் நிறுவனத்திற்கு தேவையான கட்டாயப் பங்குப் பரிவர்த்தனை அனுமதியிலிருந்து விலக்கு பெற அளிக்கப்பட்ட விண்ணப்பங்களை இக்குழுவானது மதிப்பிடுகிறது.
- டெலாய்ட் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான N. வெங்கட்ராமன் அவர்களை இக்குழுவின் புதிய உறுப்பினராக SEBI நியமித்துள்ளது.
- SEBI இக்குழுவினை முதன்முதலாக 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமைத்தது.
- இக்குழுவானது பாங்க் ஆஃப் பரோடாவின் முன்னாள் தலைவர் K. கண்ணன் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்டது.

## சைகோவ்-டி தடுப்பு மருந்து

- இந்திய மருந்து உற்பத்தி நிறுவனமான சைடஸ் கேடிலா ‘சைகோவ்-டி’ எனப்படும் தனது கொரோனா தடுப்பு மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு அனுமதி பெறுவதற்காக வேண்டி இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் விண்ணப்பிக்க உள்ளது.
- அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டால் இது உலகின் முதலாவது டி.என்.ஏ அடிப்படையிலான தடுப்பு மருந்தாக விளங்கும்.
- இத்துடன், நாட்டில் பயன்பாட்டிலிருக்கும் தடுப்பு மருந்துகளின் எண்ணிக்கையானது 4 ஆக உயரும்.
- சைகோவ்-டி ஆனது ஊசி வழியே அல்லாமல் ஜெட் உட்செலுத்தி எனும் ஒரு உபகரணத்தின் மூலம் உட்செலுத்தப்படும் ஒரு நோய்த் தடுப்பு மருந்தாகும்.
- இது மூன்று தவணைகளில் செலுத்தப்படும்.



## ஆசிய பசிபிக் பகுதியின் 5 முன்னணி தொழில்நுட்ப மையங்கள் – பெங்களூரு

- ❖ "புத்தாக்க வளர்ச்சி இயந்திரங்கள் : ஆசிய பசிபிக் தொழில்நுட்ப மையங்கள் ஆனது எவ்வாறு பிராந்திய வீட்டுமனை விற்பனை நிறுவனங்களை மாற்றி அமைக்கின்றது" என்று தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கை சமீபத்தில் கோலியர்ஸ் என்ற நிறுவனத்தால் வெளியிடப் பட்டது.
- ❖ ஆசிய பசிபிக் பகுதியின் 5 முன்னணி தொழில்நுட்ப மையங்களுள் ஒன்றாக பெங்களூரு உருவெடுத்துள்ளது.
- ❖ ஹைதராபாத் 10 முன்னணி மையங்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- ❖ பெய்ஜிங், சாங்காய், பெங்களூரு, சென்சன் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை ஆசிய பசிபிக் பகுதியின் 5 முன்னணி தொழில்நுட்ப மையங்களாகும்.

## நிபா வைரஸ் நோய் எதிர்பொருள் – இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் தேசிய நச்சுயிரியியல் நிறுவனம் ஆகியவை நடத்திய ஆய்வில் சில வௌவால் இனங்களிலிருந்து நிபா வைரசுக்கு எதிரான நோய் எதிர்ப் பொருள் இருக்கக் கூடிய மாதிரிகள் சேகரிக்கப் பட்டுள்ளன.
- ❖ இந்த மாதிரிகள் மகாராஷ்டிராவின் மகாபலீஸ்வரிலுள்ள ஒரு குகையிலிருந்து பெறப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஆய்வானது இந்திய வௌவால்களில் நிபா வைரஸ் காணப்படுவது பற்றி ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- ❖ இது உலக சுகாதார அமைப்பினால் கண்டறியப்பட்ட உலகளாவிய 10 முன்னணி முன்னுரிமை நோய்க் கிருமிகள் பட்டியலினைச் சேர்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.




*குறிப்பு*

- ❖ இந்தியாவில் இதுவரை நான்கு நிபா வைரஸ் பெருந்தொற்றுகள் ஏற்பட்டுள்ளன.
- ❖ சமீபத்திய நிபா தொற்றானது 2018 ஆம் ஆண்டில் கேரளாவில் ஏற்பட்டது.

- நிபா வைரசிற்கு எந்தவொரு மருந்தோ (அ) தடுப்பு மருந்தோ இல்லை என்பதாலும், இந்த வைரசால் பாதிக்கப் பட்டவர்களிடையே இறப்பு விகிதம் அதிகமாக இருப்பதாலும் இது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது.

## 9வது ஆசிய நாடுகள் அமைச்சர்களின் ஆற்றல் வட்ட மேசை மாநாடு

- 9வது ஆசிய நாடுகள் அமைச்சர்களின் ஆற்றல் வட்ட மேசை மாநாட்டினை இந்தியா அடுத்த ஆண்டில் நடத்த உள்ளது.
- சர்வதேச எரிசக்தி முகமையானது இந்த அறிவிப்பினை வெளியிட்டது.
- இந்த நிகழ்வானது 2018 ஆம் ஆண்டில் அபுதாபியில் நடைப்பெற்ற முந்தைய சந்திப்பில் மேற்கொள்ளப் பட்ட முடிவுகளை முன்னெடுத்துச் செல்லும்.
- 2018 ஆம் ஆண்டுச் சந்திப்பானது இந்தியாவினால் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டது.
- 2018 ஆம் ஆண்டுச் சந்திப்பானது மாற்றத்திற்கான காலத்தில் உலகளாவிய ஆற்றல் பாதுகாப்பின் மீது கவனம் செலுத்தியது.

## 2021 ஆம் ஆண்டிற்கான நேஷன் பில்டர்ஸ் பட்டியலில் NTPC

- NTPC நிறுவனமானது 2021 ஆம் ஆண்டிற்கான 'நேஷன் பில்டர்ஸ்' என்ற பட்டியலில் இந்தியாவின் சிறந்த வேலையளிப்பு நிறுவனமாக முதன்முதலில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது Great Place to Work (வேலை செய்வதற்கு சிறந்த இடம்) எனும் நிறுவனத்தினால் தொடர்ந்து 15வது ஆண்டாக "வேலை செய்வதற்கு சிறந்த இடம்" என அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது 38வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு இது 47வது இடத்தில் இருந்தது.
- ஒரு மகாரத்னா நிறுவனம் மற்றும் பொதுத் துறை நிறுவனமான NTPC ஆனது ஆற்றல் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.

## அதிவேக இரயில்களுக்கான பசுமை மதிப்பீட்டு முறை

- இந்தியப் பசுமைக் கட்டமைப்பு மன்றமானது தேசிய அதிவேக இரயில் கழகத்துடன் இணைந்து அதிவேக இரயில்களுக்கான பசுமை மதிப்பீட்டு முறையினைத் தொடங்கி உள்ளது.
- இந்தியப் பசுமைக் கட்டமைப்பு மன்றத்தின் இந்தப் பசுமை மதிப்பீட்டு முறையானது உலகிலேயே முதன்முறையாக கொண்டு வரப்பட்டதாகும்.
- இது அதிவேக ரயில் திட்டங்களின் நிலைத் தன்மை அம்சங்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு பிரத்தியேக முறையாகும்.
- இந்த மதிப்பீட்டு முறையானது ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளின் தேவைகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் மிகப்பெரிய சூரிய ஆற்றலூட்டப்பட்ட மகிழுந்து நிறுத்தம்

- டாடா மோட்டார்ஸ் மற்றும் டாடா பவர் நிறுவனமானது புனேவின் சிக்காலியுள்ள தனது டாடா மோட்டார்ஸ் மகிழுந்து உற்பத்தி ஆலையில் இந்தியாவின் மிகப்பெரிய சூரிய ஆற்றலூட்டப்பட்ட மகிழுந்து நிறுத்தத்தினை (carport) அமைத்துள்ளது.
- 6.2 மெகாவாட் பீக் என்ற திறனுடைய இந்த மகிழுந்து நிறுத்தமானது ஆண்டுக்கு 86.4 லட்சம் கிலோவாட்/மணி அளவிற்கு மின்சாரத்தினை உற்பத்தி செய்யும்.
- இது ஆண்டுதோறும் 7000 டன் அளவிலான கார்பன் உமிழ்வினைக் குறைக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.



## நானோ யூரியா உரத் தொழிற்சாலை

- இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு நிறுவனமானது அர்ஜென்டினாவில் நானோ யூரியா திரவ உர உற்பத்தி ஆலையினை அமைக்க உள்ளது.
- இது இரண்டு நிறுவனங்களுடன் இணைந்து அமைக்கப்பட உள்ளது. அவை,
  - இன்ஸ்டிடியூட்டோ நேஷனல் டி அசோசியேடிவிஸ்மோய் எகனாமியா சோஷியல் (Instituto Nacional de Asociativismoy Economia Social) மற்றும்
  - அர்ஜென்டினாவின் கூட்டுறவு கூட்டமைப்பான 'கூட்பெரார்' ஆகியனவாகும்.
- நானோ யூரியாவின் பயன்பாடானது
  - நிலத்தடி நீரின் தரத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.
  - உலக வெப்பமயமாதலைக் கணிசமான அளவில் குறைக்கும்.

## மத்திய இரயில்வே கிடங்கு நிறுவனம் – மத்திய கிடங்கு நிறுவனம் இணைப்பு

- மத்திய இரயில்வே கிடங்கு நிறுவனத்தினையும் (Central Railway Warehouse Company – CRWC) அதன் நிர்வாக அமைப்பான மத்தியக் கிடங்கு நிறுவனத்தினையும் (Central Warehousing Corporation) இணைப்பதற்கு மத்திய அமைச்சரவை அதன் ஒப்புதலை வழங்கி உள்ளது.
- செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் நிதிச் சேமிப்பினை அதிகரித்தல் போன்ற நோக்கங்களுடன் இந்த நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

- இதனால் இரயில்வே கிடங்கு வளாகங்களின் மேலாண்மைச் செலவினங்கள் 5 கோடி ரூபாய் வரை குறைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

*குறிப்பு*

- CRWC ஆனது மினிரத்னா அந்தஸ்தின் இரண்டாம் பிரிவினைச் சேர்ந்த ஒரு பொதுத் துறை நிறுவனமாகும்.
- இது 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டில் இணைக்கப் பட்டது.




## டாய்கானமி

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2021 ஆம் ஆண்டு டாய்கத்தான் எனும் நிகழ்வின் பங்கேற்பாளர்களுடன் காணொலி வாயிலாக உரையாடினார்.
- இந்தச் சந்திப்பின் போது இந்தியப் பொருளாதாரத்தில் பொம்மைகள் மற்றும் விளையாட்டுத் தொழில்துறையின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டுக் கூறினார்.
- பொம்மைகள் மற்றும் விளையாட்டுத் தொழில்துறையினை அவர் 'டாய்கானமி' என அழைத்தார்.

***டாய்கத்தான் – 2021***

- இது கல்வி அமைச்சகம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம், நெசவுத் தொழில்துறை அமைச்சகம், தகவல் மற்றும் ஒளிப்பரப்பு அமைச்சகம் மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 05 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது.
- இந்தியாவை ஓர் உலகளாவிய அளவிலான பொம்மைத் தயாரிப்பு மையமாக மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## இந்தியா-அமெரிக்கா கடற்படைப் பயிற்சி

- இந்தியக் கடற்படை மற்றும் விமானப் படை ஆகியவை அமெரிக்கக் கடற்படையின் ரொனால்டு ரீகன் எனும் ஒரு கடற்படை விமானந் தாங்கிக் கப்பல் அழிப்புக் குழுவுடனான இரண்டு நாள் கடற்படைப் பயிற்சியினை மேற்கொண்டன.
- இந்தப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடல் பிராந்தியப் பகுதியில் நடைபெற்றது.
- இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். கொச்சி மற்றும் தேக் (Teg) ஆகிய போர்க் கப்பல்களும் P-8I ரக நீள்வரம்புடைய கடல்சார் ரோந்து விமானம் மற்றும் MiG 29K ரக போர் விமானங்கள் ஆகியவையும் இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

## பொலிவுறு நகர விருதுகள் 2020

- பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கான பொலிவுறு நகர விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பொலிவுறு நகர விருதிற்கான பட்டியலில் உத்தரப் பிரதேச மாநிலமானது முன்னணியில் உள்ளது.
- மத்தியப் பிரதேசம் இரண்டாமிடத்திலும் தமிழ்நாடு மூன்றாம் இடத்திலும் உள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் ஆற்றிய சிறப்பான செயல்திறனுக்காக சூரத் மற்றும் இந்தோர் ஆகியவை சிறந்த பொலிவுறு நகரங்களுக்கான விருதினைப் பெற்றுள்ளன.
- சண்டிகருக்கு சிறந்த ஒன்றியப் பிரதேச விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதுகளானது மூன்று நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டதன் ஆறாம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளன.
- அவை,
  - பொலிவுறு நகரங்கள் திட்டம்,
  - நகர்ப்புற புத்துயிர்ப்பு மற்றும் மாற்றத்திற்கான அடல் திட்டம் (அம்ருத்) மற்றும்
  - பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – நகர்ப்புறத் திட்டம் ஆகியவையாகும்




## பினாகா ஏவுகணை – மேம்படுத்தப்பட்ட வடிவம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது வரம்பு அளவு மேம்படுத்தப் பட்ட பினாகா ஏவுகணையினை வெற்றிகரமாக சோதனை செய்து உள்ளது.

- இந்தச் சோதனையானது ஒடிசாவின் சந்திப்பூரிலுள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- 122 மி.மீ. உள்விட்டம் கொண்ட இந்த ஏவுகணைகளானது பல்குழாய் உள்ளக (மல்டிபேரல்) ஏவுகணை ஏவு வாகனத்தைப் பயன்படுத்தி ஏவப் படுகின்றன.
- இந்த மேம்படுத்தப்பட்ட வடிவமானது உயர் ஆற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகத்துடன் இணைந்து புனேவைச் சேர்ந்த போர்த் தளவாடங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டது.
- இவை நாக்பூரிலுள்ள எக்னாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் என்ற நிறுவனத்தின் உற்பத்தி ஆதரவினைப் பெற்றுள்ளன.
- இந்த மேம்படுத்தப்பட்ட ஏவுகணை அமைப்பானது 45 கி.மீ. தொலைவு வரையில் வைக்கப் பட்டுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடும்.

## இந்தியாவின் முதலாவது உள்நாட்டு விமானந் தாங்கிக் கப்பல்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது விமானந் தாங்கிக் கப்பலானது 2020 ஆம் ஆண்டில் படையில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- படையில் இணைக்கப் பட்ட பிறகு இந்தியாவின் முதல் விமானந் தாங்கிக் கப்பலின் நினைவாக அதற்கு ஐ.என்.எஸ். விக்ராந்த் எனப் பெயரிடப் படும்.
- இந்த உள்நாட்டு விமானந் தாங்கிக் கப்பலானது ஒரு பொது தனியார் கூட்டிணைவின் கீழ் கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ள கொச்சின் கப்பல்கட்டும் தளத்தில் கட்டமைக்கப் பட்டு வருகிறது.

## டிஜிட்டல் திறன் வாகையர் (சாம்பியன்ஸ்) திட்டம்




- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் வாட்ஸ் அப் ஆகியவை இணைந்து டிஜிட்டல் திறன் வாகையர் திட்டத்தினைத் தொடங்குவதற்கான தனது கூட்டணியைப் பற்றி அறிவித்துள்ளன.

- இது இந்திய இளைஞர்களை வேலைவாய்ப்பிற்கு ஏற்றவர்களாக மாற்றுவதற்காக அவர்களுக்கு டிஜிட்டல் திறன்களைப் பயிற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டிணைவானது வாட்ஸ்அப் டிஜிட்டல் திறன் அகாடமி, பிரதான் மந்திரி கௌசல் கேந்த்ரா மற்றும் வாட்ஸ்அப் வர்த்தக செயலிப் பயிற்சி வகுப்புகள் என்ற வகையில் ஒத்துழைப்பிற்கான இரு பரவலான பிரிவுகளை அடையாளம் காண்கிறது.

## பரிவர்த்தன் தேர்தல் அறக்கட்டளை

- பரிவர்த்தன் தேர்தல் அறக்கட்டளையானது 2019-20 ஆம் ஆண்டில் தேர்தல் பத்திரங்கள் மூலம் பிர்லா எனும் குழுமத்திடமிருந்து பெற்ற 3 கோடி ரூபாயை அநாமதேயமாக தெரிவித்துள்ளது.
- ஒரு தேர்தல் அறக்கட்டளையானது பெயர் தெரிவிக்கப்படாத அரசியல் கட்சிகளுக்குப் பெருநிறுவன நன்கொடைகளை வழங்குவதற்காக வேண்டி தேர்தல் பத்திரங்களை பயன்படுத்துவது இதுவே முதன்முறையாகும்.
- மக்களாட்சி சீர்திருத்தங்களுக்கான சங்கமானது (Association for Democratic Reforms) தேர்தல் பத்திரங்களை இதற்காகப் பயன்படுத்துவது 2013 ஆம் ஆண்டு தேர்தல் அறக்கட்டளைத் திட்டம் மற்றும் 1962 ஆம் ஆண்டு வருமான வரி விதிகள் ஆகியவற்றின் கீழ் நீதித் தன்மைக்குப் புறம்பானது எனக் குற்றம் சாட்டி உள்ளது.

### *தேர்தல் அறக்கட்டளைத் திட்டம், 2013*

- தேர்தல் அறக்கட்டளை என்பது எந்தவொரு நபரிடமிருந்தும் பெறப்படும் நன்கொடைகளைப் பெற்று ஒழுங்கான முறையில் கையாளுவதற்காக இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- இந்தத் திட்டமானது மத்திய நேரடி வரிகள் வாரியத்தினால் அறிவிக்கப்பட்டதாகும்.
- தேர்தல் அறக்கட்டளைகள் பெறும் பங்களிப்புகளை அரசியல் கட்சிகளுக்கு வழங்குவதே அதனுடைய முதன்மை நோக்கமாகும்.
- வெளிநாட்டுக் குடிமகன்கள் (அ) நிறுவனங்களிடமிருந்து நன்கொடையினைப் பெறுவதற்கு இவற்றிற்கு அனுமதி கிடையாது.
- தேர்தல் அறக்கட்டளையானது பின்வருவனவற்றின் மூலம் தன்னார்வப் பங்களிப்புகளைப் பெறலாம்.
    - இந்தியக் குடிமகன்,
    - இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும்
    - இந்தியாவிலுள்ள ஒரு நிறுவனம் (அ) இந்துக் குடும்பம் (அ) தனிநபர் சங்கம் (அ) தனிநபர் அமைப்பு

## கோவோவாக்ஸ்

- சீரம் இந்திய நிறுவனமானது கோவோவாக்ஸ் தடுப்பு மருந்தின் முதல் தொகுதியின் உற்பத்தியைத் தொடங்கி உள்ளது.
- இது நோவாவாக்ஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பு மருந்து ஆகும்.
- நோவாவாக்ஸ் என்பது ஓர் அமெரிக்க உயிரித் தொழில்நுட்ப நிறுவனமாகும்.




## கடல்பறவைத் திட்டம்

- இது இந்தியாவின் கடற்படைக்கான ஒரு மிகப்பெரிய உள்கட்டமைப்புத் திட்டமாகும்.
- இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கார்வார் (கர்நாடகம்) எனும் இடத்தில் ஒரு கடற்படைத் தளத்தினை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இதன் பணிகள் நிறைவடைந்தால் இந்தியக் கடற்படைக்கு மேற்குக் கடற்கரையில் மிகப்பெரிய ஒரு கடற்படைத் தளமானது கிடைக்கப் பெறும்.
- மேலும் சூயஸ் கால்வாயின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு மிகப்பெரிய கடற்படைத் தளமாகவும் இது விளங்கும்.




## FAME II திட்டம் – நீட்டிப்பு

- FAME அல்லது கலப்பு & மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் அவற்றைத் துரிதமாக நடைமுறைக்குக் கொண்டு வருதல் (Faster Adoption and Manufacturing of Hybrid and Electric Vehicles – FAME) திட்டத்தின் முதல் கட்டமானது 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று தொடங்கப் பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமானது (FAME – 2) 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 வரையில் நிர்ணயிக்கப்பட்டது.
- தற்போது மத்திய அரசானது இந்தத் திட்டத்தை 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நீட்டித்துள்ளது.




## அக்னி – பிரைம்

- அக்னி ரக ஏவுகணை வரிசையில் அக்னி – பிரைம் என்ற புதிய ஒரு ஏவுகணையை ஒடிசாவின் கடற்கரைப் பகுதியில் இந்தியாவானது வெற்றிகரமாகப் பரிசோதனை செய்துள்ளது.
- அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த ஏவுகணையானது முழுமையாக கலப்புப் பொருட்களால் ஆனதாகும்.
- அக்னி பிரைம் ஆனது 1000 முதல் 2000 கிலோ மீட்டர் வரை சென்று இலக்கைத் தாக்கி அழிக்க வல்லது.

## NTPC – எரிசக்திக்கான குறுகிய கால இலக்குகள்

- தேசிய அனல்மின் நிலைய நிறுவனமானது (National Thermal Power Corporation – NTPC) எரிசக்தி மீதான ஐ.நா.வின் உயர்மட்ட பேச்சுவார்த்தையின் ஓர் அங்கமாக தனது எரிசக்திக்கான குறுகிய கால இலக்குகளை அறிவித்துள்ளது.
- இந்தியாவில் இந்த அறிவிப்பினை வெளியிட்ட முதல் எரிசக்தி நிறுவனம் எனும் பெருமையை NTPC நிறுவனம் பெற்றுள்ளது.
- NTPC நிறுவனமானது ஆற்றல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியாவின் மிகப் பெரிய ஆற்றல் உற்பத்தி நிறுவனமாகும்.
- 2032 ஆம் ஆண்டிற்குள் 60 GW திறனுடைய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மையத்தை நிறுவுவதற்கு NTPC நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மேலும் 2032 ஆம் ஆண்டுக்குள் நிகர ஆற்றல் செறிவினை 10% வரை குறைப்பதையும் இந்த நிறுவனம் இலக்காகக் கொண்டுள்ளது.




## தங்கும் விடுதிகள் 50 – 2021 அறிக்கை

- பிராண்ட் பைனான்ஸ் எனும் நிறுவனமானது உலகம் முழுவதுமுள்ள தங்கும் விடுதிகளில் மிகவும் வலுவான நிறுவனம் என தாஜ் விடுதியினை மதிப்பிட்டுள்ளது.
- இந்த அறிவிப்பானது உலகின் முன்னணி மதிப்பீட்டு ஆலோசக சேவை வழங்கும் நிறுவனமான பிராண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கையான 'தங்கும் விடுதிகள் 50 – 2021' எனும் ஒரு அறிக்கையில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது உலகெங்கிலும் உள்ள மதிப்பு மிக்க மற்றும் வலுவான தங்கும் விடுதி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.
- தாஜ் விடுதியானது இந்திய தங்கும் விடுதிகள் (Indian Hotels Company Limited) நிறுவனத்தின் துணை நிறுவனமாகும.
- இந்திய தங்கும் விடுதிகள் நிறுவனமானது ஜாம்செட்ஜி டாட்டா அவர்களால் நிறுவப் பட்டதாகும்.



# சர்வதேசச் செய்திகள்

## Steadfast Defender 21 war games

- ரஷ்யாவுடனான பிரச்சினைகள் அதிகரித்து வருவதையடுத்து ஐரோப்பாவில் “Steadfast Defender 21 war games” எனும் ஒரு இராணுவப் பயிற்சியினை வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது (North Atlantic Treaty Organisation – NATO) ஏற்பாடு செய்துள்ளது.
- இதில் NATOவின் படைகள், போர்க்கப்பல்கள் மற்றும் டஜன் கணக்கான விமானங்கள் பங்கேற்கின்றன.
- அட்லாண்டிக் பெருங்கடலினூடே ஐரோப்பாவின் வழியாக கருங்கடல் பகுதி வரை இராணுவப் பயிற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.
- இந்தப் பயிற்சியானது தனது உறுப்பினர்களில் ஏதேனும் ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தப் பட்டாலும் 30 நாட்டு இராணுவ அமைப்புகளும் எதிர்த்துச் செயல்படும் என்பதை உணர்த்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## இனப்படுகொலைக்கான பொறுப்பு - ஜெர்மனி

- ஒரு நூற்றாண்டுக்கு முந்தைய தனது காலனித்துவ ஆட்சியின் போது தற்போதைய நமீபியா பகுதியில் வாழ்ந்த ஹெரேரோ மற்றும் நமா இன மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனப்படுகொலைக்கான பொறுப்பினை ஜெர்மனி முதன்முறையாக ஒப்புக் கொண்டுள்ளது.
- மேலும், நமீபியாவில் செயல்படுத்தப் படும் சமுதாயத் திட்டங்களுக்கு உதவி வழங்குவதற்காக 1.1 பில்லியன் யூரோ (1.2 பில்லியன் டாலர்) தொகையை ஜெர்மனி அறிவித்துள்ளது.
- 1904 மற்றும் 1908 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஹெரேரோ மற்றும் நமா பழங்குடியின மக்கள் ஜெர்மனிய காலனித்துவ ஆட்சியை எதிர்த்துப் போராடியதைத் தொடர்ந்து ஜெர்மனிய காலனிதத்துவ ஆட்சியர்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்று குவித்தனர்.
- வாட்டர்பெர்க் போர் என்ற இந்தப் போரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 80000 ஹெரேரோ இன மக்கள் பாலைவனத்தின் வழியே ஜெர்மனியப் படையினால் துரத்தியடிக்கப்பட்டனர்.

## கொரோனா வைரஸ்களுக்கானப் பெயர்கள்

New names proposed for Covid variants

| Country/region | Scientific name | WHO name |
|---|---|---|
| Kent, UK | B.1.1.7 | Alpha |
| South Africa | B.1.351 | Beta |
| Brazil | P.1 | Gamma |
| India | B.1.617.2 | Delta |

- உலகெங்கிலும் உருவாகி வரும் கொரோனா வைரசின் புதிய மாற்றுருக்களுக்குப் பெயரிடுவதற்காக உலக சுகாதார அமைப்பு பல பெயர்களைப் பரிந்துரைத்துள்ளது.
- முதன்முதலில் இந்தியாவில் கண்டறியப்பட்ட B.1.617.2 எனும் மாற்றுருவிற்கு 'டெல்டா' எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தியாவில் கண்டறியப்பட்ட B.1.617.1 மாற்றுருவிற்கு 'கப்பா' எனப் பெயரிடப் பட்டு உள்ளது.
- ஐக்கிய ராஜ்ஜியத்தின் மாற்றுருவிற்கு 'ஆல்பா' எனப் பெயரிடப் பட்டுள்ளது.

## 2021 ஆம் ஆண்டு BRICS வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

- 2021 ஆம் ஆண்டு BRICS வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பினை இந்தியா ஏற்பாடு செய்து அதற்குத் தலைமை தாங்கியது.
- 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து இந்திய நாடானது மூன்றாவது முறையாக இந்தச் சந்திப்பிற்குத் தலைமை தாங்குகிறது.
- இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சரான S. ஜெய்சங்கர் அவர்கள் காணொலி வாயிலாக இந்தச் சந்திப்பிற்குத் தலைமை தாங்கினார்.

## கோவிட்-19 தடுப்பு மருந்துகளை கலந்து பயன்படுத்துதல்

- ஆஸ்ட்ராசெனிகா, ஃபைசர் மற்றும் மாடெர்னா ஆகிய கோவிட்-19 தடுப்பு மருந்துகளை இரு தவணைகளில் மாற்றி மாற்றி கலந்து பயன்படுத்துவதற்கு கனடா நாடானது பரிந்துரை செய்துள்ளது.
- நோய் எதிர்ப்பு மீதான தேசிய ஆலோசனைக் குழுவானது சில குறிப்பிட்ட சமயங்களில் ஆக்ஸ்போர்டின் ஆஸ்ட்ராசெனிகா, பயோன்டெக்கின் ஃபைசர் (அ) மாடெர்னா மருந்துகளை கலந்து பயன்படுத்த கனடா மக்களுக்குப் பரிந்துரை செய்துள்ளது.
- ஆஸ்ட்ராஜெனிகா மற்றும் ஃபைசர் தடுப்பு மருந்துகளை கலந்து உபயோகிப்பது பாதுகாப்பானது எனவும் மேலும் தொற்று நோயினைத் தடுப்பதில் அது சிறந்த ஒரு செயல்திறனைக் கொண்டிருக்கும் எனவும் ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன.

- முதல் தவணையில் ஆஸ்ட்ராஜெனிகா மருந்தினை எடுத்துக் கொண்டு இரண்டாவது தவணையில் மாடெர்னா (அ) பைசர் மருந்தினை எடுத்துக் கொள்ள பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

## சைனோவாக் – உலக சுகாதார அமைப்பின் ஒப்புதல்

- சீனாவின் சைனோவாக் பயோடெக் நிறுவனத்தின் கோவிட்-19 தடுப்பு மருந்தினை உலகளவில் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பானது ஒப்புதல் வழங்கி உள்ளது.
- 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த மருந்தினை உபயோகிக்கக் கோரி உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது.
- இந்த மருந்தினை இரண்டு தவணைகளில் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் இதற்கான கால இடைவெளியானது 2 முதல் 4 வாரங்களாகும்.
- அவசரகாலப் பயன்பாட்டிற்கு உலக சுகாதார அமைப்பின் ஒப்புதல் பெற்ற மற்ற தடுப்பு மருந்துகள் பைசர் மற்றும் பயோன்டெக் SE, ஜான்சன் & ஜான்சன், ஆஸ்ட்ரா செனிகா மற்றும் மாடெர்னா ஆகிய நிறுவனங்களின் தடுப்பு மருந்துகள் ஆகும்.

## இசாக் ஹெர்சோக் – இஸ்ரேலின் அதிபர்

- இஸ்ரேலிய மூத்த அரசியல்வாதியான இசாக் ஹெர்சோக் (Isaac Herzog) அவர்கள் இஸ்ரேல் நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 60 வயதான ஹெர்சோக் இஸ்ரேலின் 11வது அதிபராவார்.
- ரியூவென் ரிவ்லின் (Reuven Rivlin) என்பவரின் ஏழு வருட ஆட்சிக் காலமானது 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முடிவடைவதைத் தொடர்ந்து இவர் அதிபராகப் பொறுப்பு ஏற்க உள்ளார்.

## ஐக்கிய நாடுகளின் நிலையான போக்குவரத்து மீதான உலகளாவிய மாநாடு

- ஐக்கிய நாடுகளின் நிலையான போக்குவரத்து மீதான 2வது உலகளாவிய மாநாடானது சீனாவிலுள்ள பெய்ஜிங்கில் நடைபெற உள்ளது.
- உலகளவில் நிலையான போக்குவரத்து எனும் ஒரு நிலையை அடைவதற்கான வாய்ப்புகள், சவால்கள் மற்றும் தீர்வுகள் குறித்த ஈடுபாட்டினைச் செலுத்துவதற்கான வாய்ப்பினை இது வழங்கும்.
- இதன் முதன் மாநாடானது 2016 ஆம் ஆண்டில் துர்க்மெனிஸ்தானிலுள்ள அஸ்காபாத் எனுமிடத்தில் நடைபெற்றது.

## உலக சுகாதார மன்றத்தின் தலைவர்

- பூடான் நாடானது முதன்முறையாக உலக சுகாதார மன்றத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளது.
- அந்நாட்டின் சுகாதார அமைச்சரான டெச்சென் வாங்மோ அவர்கள் (Dechen Wangmo) உலக சுகாதார மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- உலக சுகாதார மன்றமானது உலக சுகாதார அமைப்பின் உயரிய முடிவெடுக்கும் ஒரு அமைப்பாகும்.

## உலகின் நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு 2021

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை ஏற்றார்.
- இந்த மாநாட்டில் பூமியிலுள்ள 85% நீரானது வேளாண் துறைக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகிறது என அவர் கூறினார்.
- எனவே வேளாண் துறையில் நீர் வளங்காப்பு முறைகளைப் பயன்படுத்தி நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நீர்வளங்களை திறன்மிகு முறையில் பயன்படுத்த வேண்டும்.
- 2021 ஆம் ஆண்டு உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடானது "Redefining Our Common Future : Safe & Secure Environment For All" எனும் கருத்துருவை மையமாகக் கொண்டு நடத்தப் பட்டது.
- இது ஆற்றல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இது பல்வேறு பங்குதாரர்களை ஒரே இடத்தில் திரட்டி உலக சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையிலான தீர்வுகளை வழங்குவதற்காக நடத்தப்படும் ஒரு மாநாடாகும்.




## சிவப்புச் சுற்றுலா (செஞ்சுற்றுலா)

- இந்த ஆண்டு சீனப் பொதுவுடைமைக் கட்சியானது தனது 100வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில் அந்த நாட்டில் சிவப்புச் சுற்றுலாவின் புகழானது வெகுவாக ஓங்கியுள்ளது.
- 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த சிவப்புச் சுற்றுலா ஆனது அந்நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் வரலாற்றுடன் தொடர்புடைய கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு சுற்றுலா மேற்கொள்வதாகும்.

- இது ஒரு நவீன சீன நாட்டினை உருவக்குவதற்காக அந்நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்கள் ஆற்றிய தியாகங்களைப் பற்றி மக்களுக்கு நினைவு படுத்துகிறது.



## சர்வதேச நைட்ரஜன் முன்னெடுப்பு மாநாடு




- சமீபத்தில் 8வது சர்வதேச நைட்ரஜன் முன்னெடுப்பு மாநாடானது காணொலி வாயிலாக நடைபெற்றது.
- இது சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மீதான அறிவியல் குழு மற்றும் சர்வதேசப் புவியியல் – உயிர்க் கோளத் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியின் கீழ் 2003 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒரு நிகழ்வாகும்.
- இது வேளாண்மை, தொழில்துறை, போக்குவரத்து, மண், நீர் மற்றும் காற்று போன்றவற்றில் காணப்படும் எதிர்வினை செயல்திறனுடைய நைட்ரஜன் (reactive nitrogen) மூலக்கூறுகளை கையாளும் உலக அறிவியலாளர்களை ஒன்று திரட்டுகிறது.
- ஒரு எதிர்வினை செயல்திறனுடைய நைட்ரஜனைக் கையாள வேண்டி வருங்காலத்திற்கான முழுமையான மேலாண்மையை மேம்படுத்துவதற்காக முடிவுகள், கருத்துகள் மற்றும் நோக்கங்கள் போன்றவற்றை கொள்கை வகுப்பு அமைப்புகள் மற்றும்

அது சார்ந்த பிற பங்குதாரர்களிடையே பரிமாறிக் கொள்வதை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

- இந்தத் திட்டமானது தற்போது Future Earth அமைப்பின் நீண்டகால பங்குதாரர் ஆக உள்ளது.

## G7 சுகாதார அமைச்சர்கள் சந்திப்பு

- G7 அமைப்பின் உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் சந்திப்பு ஒன்றினை பிரிட்டன் ஏற்பாடு செய்தது.
- வளர்ந்து வரும் நாடுகளில் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் முன்னேற்றம் மீதான G7 அறிக்கையும் இந்த சந்திப்பில் வெளியிடப்பட்டது.
- இச்சந்திப்பின் போது கொரோனா தடுப்பு மருந்துகளை சமமான முறையில் பெறுதல் என்பது செயல்பாட்டு நிரலில் முதன்மையானதாக இடம் பெற்றிருந்தது.

## I - familia

- இது காணாமல் போன நபர்களைக் கண்டறிவதற்கான ஓர் உலகளாவியத் தரவுத் தளமாகும்.
- இது பன்னாட்டுக் காவலகத்தினால் (Interpol) தொடங்கப்பட்டுள்ளது.
- இது குடும்ப உறுப்பினர்களின் மரபணுவைக் கொண்டு காணாமல் போன நபர்களைக் கண்டறிய உதவுகிறது.
- மேலும், உறுப்பினர் நாடுகளில் உள்ள தீர்க்கப்படாத குற்றவியல் வழக்குகளை (Cold cases) தீர்க்கவும் வேண்டி இது காவலர்களுக்கு உதவும்.




## துல்சா படுகொலை

- 1921 ஆம் ஆண்டு நடைபெற்ற துல்சா என்ற படுகொலையைப் பதவியிலிருக்கும் போது அதிகாரப் பூர்வமாக ஒப்புக் கொண்ட முதல் அமெரிக்கத் தலைவர் அதிபர் ஜோ பைடன் ஆவார்.

- இது அமெரிக்காவின் நவீனகால வரலாற்றில் நிகழ்ந்த இனவெறி சார்ந்த மோசமான சம்பவங்களில் ஒன்றாகும்.
- துல்சா நகரமானது ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கான ஓர் அதிகாரப்பூர்வமற்றப் புகலிடமாக திகழும் நகரமாக அறியப் படுகிறது.
- இது அமெரிக்காவின் 'Black Wall Street' (கறுப்பு தடுப்புத் தெரு) எனவும் அழைக்கப் படுகிறது.

## தாவரப் பூச்சியினங்கள் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம்

- உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் தாவரப் பாதுகாப்பு உடன்படிக்கை ஆகியவை இணைந்து தாவரப் பூச்சியினங்கள் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்த அறிவியல்பூர்வ மறுசீராய்வு எனும் அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது இத்தாலியிலுள்ள துரின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மரியா லொடோவிகா மற்றும் 10 இணை ஆசிரியர்கள் ஆகியோரால் இணைந்து தயாரிக்கப் பட்டதாகும்.
- பருவநிலை மாற்றமானது தாவரப் பூச்சியினங்களில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் அதனால் தாவர ஆரோக்கியத்தில் ஏற்படும் விளைவுகள் பற்றியும் குறிப்பிட்டுக் காட்டுவதிலேயே இந்த அறிக்கை அதிக ஈடுபாடு செலுத்துகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் உலகின் 40 சதவீத வேளாண் பயிர்கள் பூச்சிகளால் அழிக்கப் படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.

## FORTUNE 500

- Fortune நாளிதழானது தனது 67வது Fortune 500 எனும் பட்டியலை அறிவித்துள்ளது.
- இது ஒவ்வொரு நிதி ஆண்டின் வருவாயைப் பொருத்து அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய நிறுவனங்களை பட்டியலிடும் ஒரு வருடாந்திரப் பட்டியல் ஆகும்.
- இப்போது 2020 ஆம் நிதியாண்டிற்கான பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.
- வால்மார்ட் நிறுவனமானது தொடர்ந்து 9வது ஆண்டாக இப்பட்டியலில் (2021 ஆம் ஆண்டு) முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அமேசான் நிறுவனமும் தனது இரண்டாமிடத்தைத் தக்க வைத்துள்ளது.
- ஆப்பிள் நிறுவனமானது மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.
- CVS ஹெல்த் நிறுவனமானது நான்காமிடத்தில் உள்ளது.
- ஒரு பெண் தலைமை நிர்வாகி (கரேன் லிஞ்ச்) அதிகாரியின் கீழ் இயக்கப் பட்டு உயர்தர வரிசையில் இடம் பெற்ற நிறுவனம் எனும் வரலாற்றை, CVS ஹெல்த் நிறுவனமானது படைத்துள்ளது.

## இயற்கைக்கான நிதி நிலை குறித்த அறிக்கை

- இந்த அறிக்கையானது இயற்கை சார்ந்த தீர்வுகளுக்கான முதலீட்டு வரவுகளை மதிப்பீடு செய்கிறது.
- மேலும், பருவநிலை மாற்றம், உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் நிலச்சீரழிவு (ரியோ

உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட மூன்று இலக்குகள்) போன்றவற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்குத் தேவையான வருங்கால முதலீடு போன்றவற்றை இது அடையாளம் கண்டறிகிறது.

- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம், உலகப் பொருளாதார மன்றம் மற்றும் நிலச் சீரழிவின் பொருளியல் (Economics of Land Degradation) எனும் அமைப்புகளால் ஒன்றிணைந்து உருவாக்கப் பட்டதாகும்.
- இயற்கை சார்ந்த தீர்வுகள் (Nature Based Solutions) என்பவை சமூக-சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்காக இயற்கையினை நிலையான முறையில் மேலாண்மை செய்தல் மற்றும் நிலையான முறையில் பயன்படுத்துதல் என்பதாகும்.




## ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர்

- மாலத்தீவு நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்துல்லா சாஹீத் ஐக்கிய நாடுகள் பொது ச்சபையின் தலைவராகத் (2021-22) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அப்துல்லா சாஹீத் அவர்கள், ஆப்கானிஸ்தானின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மாய் ரசௌல் என்பவரை எதிர்த்து வெற்றிப் பெற்றார்.
- மாலத்தீவு நாடானது முதன்முறையாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்க உள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைமைப் பொறுப்பிற்கான தேர்தலானது ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும்.

## ஓபன் ஸ்கைஸ் ஒப்பந்தம் - ரஷ்யா விலகல்

- ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அவர்கள் ஓபன் ஸ்கைஸ் ஒப்பந்தத்திலிருந்து ரஷ்யா விலகுவதை அதிகாரப்பூர்வமாக்கும் ஒரு சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

- 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க நாடானது இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஓபன் ஸ்கைஸ் ஒப்பந்தம் (திறந்த வான்வெளி) என்பது ஒப்பந்த நாடுகளுக்கு மற்றொரு நாட்டினுடைய இராணுவப் படைகளின் தகவல்களைச் சேகரிக்க அனுமதி வழங்கும் ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- இது வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- ரஷ்யா இந்த ஒப்பந்தத்தை மீறியதாக கூறி 2020 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியது.

## அடுகனுமாப்

- அடுகனுமாப் (அடுஹெல்ம்) என்பது அல்சைமர் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்காக அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புதிய மருந்தாகும்.
- இது பயோஜென் எனும் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- அல்சைமர் நோயானது மூளையிலுள்ள நியூரான்களின் சிதைவினால் ஏற்படும் சிதைவுப் பொருட்களை ஒன்று திரளச் செய்கிறது.
- இது அப்பகுதியில் வீக்கம் ஏற்பட வழிவகுக்கிறது.
- அடுகனுமாப் என்பது ஓர் ஒரின நகல் நோய் எதிர்ப் பொருளாகும்.
- இது மூளையில் வீக்கங்களை உருவாக்கச் செய்யும் அமைலாய்டு பீட்டா எனும் புரதம் இருப்பதைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## Remain in mexIco கொள்கை ரத்து

- டிரம்ப் அரசினுடைய "Remain in Mexico" என்ற கொள்கையை தற்போதைய அமெரிக்க அரசு ரத்து செய்துள்ளது.
- இந்தக் கொள்கை அமெரிக்காவில் புகலிடம் கோரும் ஆயிரக்கணக்கான மத்திய அமெரிக்க நாட்டு அகதிகளை அமெரிக்க நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்காக வேண்டி மெக்சிகோவில் காத்திருக்கச் செய்து விட்டது.

- இந்தக் கொள்கை ரத்தானதையடுத்து இதில் பதிவு செய்த 11,000 என்ற அளவிலான புலம்பெயர்ந்தோர்கள் புகலிடத்திற்கான கோரிக்கையைத் தொடர்ந்திட வேண்டி அமெரிக்காவினுள் நுழைவதற்கு அனுமதிக்கப் படுவர்.

## குழந்தைத் தொழிலாளர் குறித்த உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கை – 2020

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனிசெப் ஆகியவை இணைந்து குழந்தைத் தொழிலாளர் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- கடந்த இருபது ஆண்டுகளில் உலகளவில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- கொரோனா வைரசினால் ஏற்பட்ட நெருக்கடி நிலையினால் மேலும் பல மில்லியன் கணக்கான இளம் குழந்தைகள் தொழிலில் ஈடுபடும் நிலை உள்ளது என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு நிலவரப்படி குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 160 மில்லியனாக உள்ளது.
- நான்கு வருடங்களில் இதன் எண்ணிக்கையானது 8.4 மில்லியன் அதிகரித்துள்ளது.
- துணை சஹாரா ஆப்பிரிக்கா தான் உலகில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.
- சிறுவர்களே அதிகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குழந்தைத் தொழிலில் ஈடுபட்ட 160 மில்லியன் குழந்தைகளில் 97 மில்லியன் குழந்தைகள் சிறுவர்களாவர்.

## ஆபரேஷன் பாஞ்சியா XIV

- ஆபரேசன் பாஞ்சியா XIV எனும் ஒரு நடவடிக்கையின் கீழ் குறிப்பிட்ட அளவிலான போலியான இணையதள மருந்தகங்கள் மூடப்பட்டுள்ளன.
- இந்த நடவடிக்கையானது போலியான மற்றும் சட்டவிரோதமான மருந்துகள் மற்றும் மருத்துவ உற்பத்திப் பொருட்களின் விற்பனையை குறி வைத்து தடுக்கிறது.




- பன்னாட்டுக் காவலகத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் 92 நாடுகளைச் சேர்ந்த காவல், சுங்கம் மற்றும் சுகாதார ஒழுங்குமுறை அதிகாரிகள் ஈடுபட்டனர்.

- பன்னாட்டுக் காவலகத்தின் முதலாவது ஆபரேஷன் பாஞ்சியா நடவடிக்கையானது 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

## உலகில் வாழ்வதற்கு மிகவும் ஏதுவான நகரங்கள் குறித்த பொருளாதார வல்லுநர்களின் வருடாந்திர ஆய்வறிக்கை

- 2021 ஆம் ஆண்டிற்கான இந்த அறிக்கையின் படி கோவிட்-19 பெருந்தொற்றானது வாழ்வதற்கு ஏதுவான நகரங்களின் தரநிலையை உலுக்கியுள்ளது.
- கொரோனா பெருந்தொற்றைக் கையாள்வதில் மேற்கொண்ட வெற்றிகரமான அணுகுமுறைகளின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் மிகவும் வாழ்வதற்கு ஏதுவான நகரமாக நியுசிலாந்தின் ஆக்லாந்து திகழ்கிறது.
- இதனைத் தொடர்ந்து,
    - ஜப்பானில் ஒசாகா மற்றும் டோக்கியோ,
    - ஆஸ்திரேலியாவில் அடிலெய்ட்,
    - நியூசிலாந்தின் வெல்லிங்டன் ஆகிய நகரங்கள் இடம்பெற்றுள்ளன.
- சிரியாவின் உள்நாட்டுப் போர் காரணமாக டமாஸ்கஸ் நகரில் வாழ்க்கை நிலையானது மிகவும் கடினமானதாக உள்ளது.
- ஆஸ்திரியாவின் வியன்னா நகரமானது தற்போது 12வது இடத்திற்குச் சரிந்துள்ளது.
- அது 2018-20 ஆகிய ஆண்டுகளில் உலகில் வாழ்வதற்கு மிகவும் ஏதுவான நகரமாக திகழ்ந்தது

## 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயை ஒழிப்பதற்கான அவசர நடவடிக்கை

- 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயை ஒழிப்பதற்காக வேண்டி ஒரு அவசர நடவடிக்கைக்கான பிரகடனத்திற்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கோவிட் – 19 பெருந்தொற்றானது ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்துள்ளதாகவும் எய்ட்ஸ் நோய்க்கான மருந்துகள், சிகிச்சைகள் மற்றும் நோய்க் கண்டறிதல் போன்றவற்றினை அணுகுவதற்கான வாய்ப்புகளை தடம் மாற்றியுள்ளதாகவும் இது குறிப்பிட்டுள்ளது.
- வருடாந்திர புதிய எய்ட்ஸ் (HIV) தொற்றுக்கான எண்ணிக்கையை 3,70,000க்கும் கீழ் குறைக்குமாறு உறுப்பினர் நாடுகளுக்கு ஐ.நா. பொதுச் சபையானது அறிவுறுத்தி உள்ளது.
- மேலும் 2025 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் தொடர்பான வருடாந்திர இறப்பு எண்ணிக்கையை 2,50,000க்கும் கீழ் குறைக்குமாறும் வேண்டி இது வலியுறுத்தி உள்ளது.

## உலகளாவிய வீட்டுவிலைக் குறியீடு

- உலகளாவிய வீட்டு விலைக் குறியீட்டில் இந்தியா 12 இடங்கள் சரிந்துள்ளது.
- நைட் பிராங்க் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான உலகளாவிய வீட்டு விலைக் குறியீட்டின் படி இது கூறப்பட்டுள்ளது.
- சொத்து விலைகளின் அடிப்படையில் இந்தியா 55வது இடத்தில் உள்ளது.

- கோவிட்-19 பெருந்தொற்றுக் காலங்களில் இந்தியாவில் சொத்து மதிப்புகள் குறைந்து உள்ளன.

*குறிப்பு*

- இந்த வருடாந்திர தரவரிசையில் 32 சதவீத விலைமதிப்புடன் துருக்கி நாடானது முதலிடத்தில் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஸ்பெயின் நாடு ஆனது மோசமான நிலையில் உள்ளது.
- விலைகளில் 1.6% குறைவு ஏற்பட்டதுடன் இந்தியாவானது ஸ்பெயின் நாட்டையடுத்து இடம் பெற்றுள்ளது.

## UNCTAD அமைப்பின் பொதுச் செயலாளர்



- கோஸ்டா ரிக்கா நாட்டைச் சேர்ந்த பொருளாதார வல்லுநரான ரெபேகா கிரின்ஸ்பன் என்பவரை ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பினுடைய (UNCTAD – United Nations Conference on Trade And Development) பொதுச் செயலாளராக நியமிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- UNCTAD அமைப்பிற்குத் தலைமை தாங்க உள்ள முதல் பெண்மணியும் முதல் மத்திய அமெரிக்க குடிமகளும் இவரே ஆவார்.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டெரஸ் அவர்கள் இவரை UNCTAD அமைப்பின் பொதுச் செயலாளராக நியமனம் செய்தார்.

## இஸ்ரேலின் பிரதமர்

- நஃப்தாலி டென்னட் அவர்கள் இஸ்ரேலின் பிரதமராகப் பதவியேற்றார்.
- இவர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும், யாமினா என்ற கட்சியின் தலைவரும் ஆவார்.
- இவர் பெஞ்சமின் நெதன்யாகுவை (Benjamin Netanyahu) அடுத்து பதவி ஏற்கிறார்.
- நெதன்யாகு அவர்கள் இஸ்ரேலில் நீண்டகாலம் (12 ஆண்டுகள்) பணியாற்றிய பிரதமர் ஆவார்.

## ஃபிர்மினா – மிக நீளமான கடலடிக் கம்பிவடம்

- ஆல்பாபெட் அமைப்பின் கூகுள் நிறுவனமானது உலகின் மிக நீளமான கடலடிக் கம்பிவடத்தினை உருவாக்கத் தயாராக உள்ளது.
- இது அமெரிக்கா, பிரேசில், அர்ஜென்டினா மற்றும் உருகுவே ஆகிய நாடுகளை இணைக்கும்.
- இது இந்தப் பகுதிகளிலுள்ள இணையதள இணைப்புத் திறன்களை அதிகரிக்கும்.
- இந்தக் கடலடிக் கம்பிவடமானது ஃபிர்மினா (Firmina) என்று அழைக்கப்படுகிறது.




## புதிய அட்லாண்டிக் சாசனம்

- சமீபத்தில் அமெரிக்கா அதிபர் ஜோ பைடன் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோரின் சந்திப்பானது கார்ன்வாலில் (இங்கிலாந்து) நடைபெற்றது.
- இந்த சந்திப்பின் போது அட்லாண்டிக் சாசனம் தொடர்பான ஆவணங்கள் ஆய்வு செய்யப் பட்டு "புதிய அட்லாண்டிக் சாசனம்" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புதிய ஆவணம் கையெழுத்திடப் பட்டது.
- மக்களாட்சியின் கொள்கைகளையும் அமைப்புகளையும் பாதுகாத்தல் மற்றும் அதன் அமைப்புகளை வலுப்படுத்தி அவற்றை ஏற்றுக் கொள்தல் போன்ற நோக்குடன், புதிய அட்லாண்டிக் சாசனமானது கையெழுத்தானது.
- அட்லாண்டிக் சாசனம் என்பது 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் (இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு) கையெழுத்தான ஒரு பிரகடனமாகும்.
- இதில் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் அமெரிக்க அதிபர் ஃபிராங்ளின் ரூஸ்வெல்ட் ஆகியோர் கையெழுத்திட்டனர்.
- சமீபத்திய அட்லாண்டிக் சாசனமானது 1941 ஆம் ஆண்டு அட்லாண்டிக் சாசனத்தின் புதிய பதிப்பாகும்.

## உலகளாவிய திறன் அறிக்கை – 2021

- 2021 ஆம் ஆண்டு உலகளாவிய திறன் அறிக்கையின்படி, உலகளவில் இந்தியா 67வது இடத்தில் உள்ளது.

- இந்த அறிக்கையானது கோர்செரா எனும் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் கல்வி பயிலும் மக்கள் மேகக் கணிமை (83%) மற்றும் இயந்திர கற்றல் (52%) மற்றும் கணிதத் திறன்கள் (54%) போன்ற டிஜிட்டல் திறன்களில் அதிக தேர்ச்சியையும் கொண்டுள்ளனர்.
- தரவுப் பகுப்பாய்வு திறன் (25%) மற்றும் புள்ளிவிவர நிரலாக்கத்திறன் (15%) போன்ற டிஜிட்டல் திறன்களில் முன்னேற்றம் தேவைப்படுகிறது.
- இந்த அறிக்கையில் முன்னனியிலுள்ள நாடுகள்,
    - சுவிட்சர்லாந்து – முதலிடம்
    - லக்சம்பெர்க் – இரண்டாமிடம்
    - ஆஸ்திரியா – மூன்றாமிடம்

## பாலைவனமாக்கல், நிலச் சீரழிவு மற்றும் வறட்சி ஆகியவை தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு

- இந்த மாநாடானது 75வது பொதுச் சபை அமர்வின் தலைவரான வோல்கன் போஷ்கீர் (Volkan Bozkir) அவர்களால் கூட்டப்பட்டுள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பாலைவனமாக்கல், நிலச்சீரழிவு மற்றும் வறட்சி ஆகியவை தொடர்பான இந்த உயர்நிலை காணொலி மாநாட்டில் உரையாற்றினார்.
- பிரதமர் மோடி அவர்கள் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தில் உள்ள உறுப்பு நாடுகளின் 14வது மாநாட்டின் தலைவராக இருந்தார்.
- 2030 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்தியா 26 மில்லியன் ஹெக்டேர் அளவிலான சீரழிந்த நிலத்தைத் திரும்ப சீரமைக்க எண்ணுகின்றது.

*குறிப்பு*

- புவியின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கானது தரம் குறைந்துள்ளதாக (சீரழிந்துள்ளதாக) ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறுகிறது.

## NATOவின் பிரசெல்ஸ் உச்சிமாநாடு

- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் அரசுத் தலைவர்களின் 31வது முறைசார் சந்திப்பானது பெல்ஜியமின் தலைநகரான பிரசெல்ஸில் நடைபெற்றது.
- 2021 ஆம் ஆண்டு வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (North Atlantic Treaty Organisation – NATO) உச்சி மாநாடானது NATOவின் பிரசெல்ஸ் உச்சி மாநாடு எனவும் அழைக்கப் படுகிறது.
- சீனாவானது தொடர்ந்து பாதுகாப்பு ரீதியிலான சவாலாக திகழ்வதாகவும், உலக ஒழுங்குமுறையினைச் சீர்குலைக்கும் வகையில் அது செயல்படுவதாகவும் NATO தலைவர்கள் அறிவித்தனர்.
- NATO தலைவர்கள் சீனாவை ஓர் உலகளாவிய பாதுகாப்பிற்கான சவாலாக அறிவித்து உள்ளனர்.




## ‘Report It, Don’t Share It’ - முன்னெடுப்பு

- முகநூல் (பேஸ்புக்) ஆனது ‘Report It, Don’t Share It’ (பகிர வேண்டாம், புகார் அளியுங்கள்) எனும் புதிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது தனது தளங்களில் காணப்படும் சிறார் வன்கொடுமை தொடர்பான உள்ளீடுகளை பகிராமல் அவை பற்றிய புகார்களை அளிக்க மக்களை ஊக்குவிக்கச் செய்கிறது.
- இது ஆரம்ப் இந்தியா முன்னெடுப்பு (Aarambh India Initiative), சைபர் பீஸ் அறக்கட்டளை (Cyber Peace Foundation) மற்றும் அர்பன் (Arpan) போன்ற பொது சமூக அமைப்புகளின் ஒரு கூட்டு முயற்சியாகும்.




## வளர்ந்து வரும் சிறு தீவு நாடுகள் குறித்த அறிக்கை

- ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பின் (UNCTAD) 2021 ஆம் ஆண்டிற்கான மேம்பாடு மற்றும் உலகமயமாக்கல் உண்மைகள் மற்றும் புள்ளி விவரங்கள் அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி,
    - வளர்ந்து வரும் சிறுதீவு நாடுகளின் சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் கோவிட்-19 பெருந்தொற்றானது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

- வளர்ந்து வரும் சிறுதீவு நாடுகள் (Small Islands Developing States – SIDS) பெரும்பாலும் சுற்றுலாவையே சார்ந்திருப்பதால் கோவிட் – 19 பாதிப்பு இந்த நாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- மற்ற வளர்ந்து வரும் நாடுகளை விட SIDS நாடுகள் வெளிப்புற பொருளாதாரம் மற்றும் நிதி தாக்கங்களால் 35% அதிகம் பாதிக்கப்படக் கூடியவையாகும்.

## 5வது Viva Tech நிகழ்ச்சி

- Viva Tech என்பது ஐரோப்பாவின் மிகப்பெரிய டிஜிட்டல் மற்றும் தொடக்க நிறுவன நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும்.
- இது 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பாரீசில் நடத்தப்பட்டு வருகிறது.
- 2021 ஆம் ஆண்டு விவாடெக் (Viva Tech) நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றுவதற்காக பிரதமர் மோடி அவர்கள் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டார்.
- பிரதமர் மோடி அவர்கள் உரையாற்றும் போது, திறமை, சந்தை, மூலதனம், சூழலமைப்பு மற்றும் பரந்த கலாச்சாரம் ஆகிய ஐந்து தூண்களின் அடிப்படையில் இந்தியாவில் முதலீடு செய்யுமாறு உலக நாடுகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

## ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா வர்த்தக ஒப்பந்தம்

- ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த வர்த்தக ஒப்பந்தமானது பரந்த அளவிலான சரக்குகள் மீதான கட்டணத்தை நீக்குகிறது.
- ஐக்கிய ராஜ்ஜியம் ஆனது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஒப்பந்தமானது ஸ்காட்ச் விஸ்கி போன்ற பாரம்பரிய பிரித்தானிய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## SIPRI வருடாந்திரப் புத்தகம் 2021

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது (SIPRI – Stockholm International Peace Reaseach Institute) 2021 ஆம் ஆண்டின் SIPRI வருடாந்திரப் புத்தகம் எனும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது ஆயுதங்கள், ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு ஆகியவை குறித்த தற்போதைய நிலையினை மதிப்பிடுகிறது.
- இந்த அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்திய நாடானது 156 அணு ஆயுதங்களைக் கொண்டிருந்தது.
- பாகிஸ்தான் அரசிடம் 165 அணு ஆயுதங்கள் உள்ளன.
- சீனாவின் அணு ஆயுதக் கிடங்கில் 350 அணு ஆயுதங்கள் உள்ளன.
- ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை ஒருசேர உலகின் 90% அணு ஆயுதங்களை கொண்டுள்ளன.

| Country | Deployed warheads* | Other warheads** | Total 2021 | Total 2020 |
|---|---|---|---|---|
| USA | 1 800 | 3 750 | 5 550 | 5 800 |
| Russia | 1 625 | 4 630 | 6 255 | 6 375 |
| UK | 120 | 105 | 225 | 215 |
| France | 280 | 10 | 290 | 290 |
| China | | 350 | 350 | 320 |
| India | | 156 | 156 | 150 |
| Pakistan | | 165 | 165 | 160 |
| Israel | | 90 | 90 | 90 |
| North Korea | . . | [40–50] | [40–50] | [30–40] |
| Total | 3 825 | 9 255 | 13 080 | 13 400 |

## UNESCO அறிவியல் அறிக்கை

- UNESCO அறிவியல் அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இதற்கு "race against time for smarter development" (திறன்மிகு வளர்ச்சிக்காக வேண்டி நேரத்திற்கான பந்தயம்) எனத் தலைப்பிடப் பட்டுள்ளது.
- UNESCO அறிவியல் அறிக்கையானது UNESCO அமைப்பின் ஒரு முதன்மையான அறிக்கையாகும்.
- இது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது.
- இது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு (புத்தாக்கம்) ஆகியவை குறித்த ஒரு அறிக்கையாகும்.
- ஒவ்வொரு முறை வெளியிடப்படும் அறிக்கையிலும் இந்திய நாட்டிற்குத் தொடர்பான அத்தியாயம் ஒன்று அதில் இடம் பெற்றிருக்கும்.
- சமீபத்தில் வெளியான அறிக்கையிலுள்ள இந்தியா தொடர்பான அத்தியாயமானது பேராசிரியர் சுனில் மணி என்பவரால் எழுதப்பட்டது.
- இவர் திருவனந்தபுரத்திலுள்ள மேம்பாட்டு ஆய்வு மையத்தின் இயக்குநராவார்.

## ASEAN பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு பிளஸ்

- 8வது ASEAN பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு பிளஸ் சமீபத்தில் நடத்தப் பட்டது.
- இந்த ஆண்டு ASEAN அமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் புரூனே நாடு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தது.
- இந்தச் சந்திப்பானது ASEAN மற்றும் அதன் எட்டு பேச்சுவார்த்தை நாடுகள் தத்தம் பிராந்தியங்களில் அமைதி, உறுதித் தன்மை மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான ஒரு தளம் ஆகும்.
- ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், நியூசிலாந்து, கொரியக் குடியரசு, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை ASEAN அமைப்பின் பேச்சுவார்த்தை நாடுகளாகும் (இவை ஒரு சேர "பிளஸ் நாடுகள்" எனக் கூறப் படுகின்றன).




## ஜூன்டீன்த்

- அமெரிக்க அரசானது ஜீன்டீன்த் (அ) ஜீன் 19 ஆம் நாளை ஒரு அரசு விடுமுறையாக அங்கீகரித்துள்ளது.
- இது அமெரிக்காவில் அடிமைத் தனம் முடிவடைந்ததைத் தேசிய அளவில் கொண்டாடும் ஒரு பழமையான நினைவு நாளாகும்.
- இது விடுதலை நாள் அல்லது ஜீன்டீன்த் சுதந்திர தினம் எனவும் அழைக்கப்படுகிறது.




## தென்பெருங்கடல் – உலகின் 5வது பெருங்கடல்

- நேஷனல் ஜியோகிராஃபிக் இதழானது தென்பெருங்கடலினை உலகின் ஐந்தாவது ஒரு பெருங்கடலாக அங்கீகரித்துள்ளது.
- மற்ற மூன்று பெருங்கடல்களுடன் தொடர்புடைய ஒரே பெருங்கடல் தென்பெருங்கடல் ஆகும்.
- இதன் வடக்குப்புற எல்லையானது 60° தெற்கு அட்சரேகை ஆகும்.
- இது 34 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவான அதனுடைய அண்டார்டிக் துருவச் சுழல் நீரோட்டத்தினைக் கொண்டு வரையறுக்கப் படுகிறது.

❖ இந்த நீரோட்டமானது அண்டார்டிக்காவைச் சுற்றி மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்கிறது.




## உலகளாவிய அமைதிக் குறியீடு 2021




❖ சிட்னியின் பொருளாதார மற்றும் அமைதி நிறுவனமானது (Institute for Economics and Peace – IEP) 15வது உலகளாவிய அமைதிக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.

❖ உலகளாவிய அமைதிக் குறியீடானது உலகளாவிய அமைதியை மதிப்பிடும் உலகின் ஒரு முன்னணி மதிப்பீடாகும்.

❖ 2008 ஆம் ஆண்டிலிருந்து முதலிடத்தில் இருந்து வரும் ஐஸ்லாந்து நாடானது மிகவும் அமைதியான நாடாக திகழ்ந்து வருகிறது.

- இதனுடன் நியூசிலாந்து, டென்மார்க், போர்ச்சுக்கல் மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகளும் முதலிடத்தில் உள்ளன.
- இதில் ஆப்கானிஸ்தான் தொடர்ந்து நான்காவது ஆண்டாக உலகின் அமைதியற்ற நாடாக திகழ்கிறது.
- இதனைத் தொடர்ந்து ஏமன், சிரியா, தெற்கு சூடான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியா 135வது இடத்தில் உள்ளது.
- இந்தியா தெற்காசியப் பிராந்தியத்தில் 5வது இடத்தில் உள்ளது.
- தெற்காசிய பிராந்தியத்தில் பூடான் மற்றும் நேபாளம் ஆகியவை முறையே முதலாவது மற்றும் இரண்டாவது அமைதியான நாடுகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

## உலகப் போட்டித் தன்மை குறியீடு

- உலகப் போட்டித் தன்மை குறியீடானது மேலாண்மை மேம்பாட்டு நிறுவனத்தினால் தொகுத்து வெளியிடப்படுகிறது.
- இது உலகப் பொருளாதாரங்கள் மீது கோவிட்-19 தொற்று ஏற்படுத்திய தாக்கத்தை ஆய்வு செய்கிறது.
- 64 நாடுகளுள் இந்தியா 43வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் ஸ்விட்சர்லாந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அதனைத் தொடர்ந்து ஸ்வீடன் (2வது), டென்மார்க் (3வது), நெதர்லாந்து (4வது) மற்றும் சிங்கப்பூர் (5வது) ஆகியவை உள்ளன.




## உயர்நோக்கு லட்சிய மாவட்டங்கள் திட்டம் – UNDP

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது இந்தியாவின் உயர்நோக்கு லட்சிய மாவட்டங்கள் என்ற திட்டத்தினை "உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டிற்கான மிக வெற்றிகரமான முன்மாதிரி" எனப் பாராட்டியுள்ளது.

- இது சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு சுயமதிப்பீடு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்த மாவட்டங்களில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டமானது ஓர் ஊக்கமாகச் செயல்படுவதை ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் பகுப்பாய்வானது கண்டறிந்துள்ளது.




## அமெரிக்காவில் கோவிட்-19 இறப்புகள்

- அமெரிக்காவில் கோவிட்-19 தொற்றிற்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 6,00,000 என்ற அளவினைக் கடந்தது.
- ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் மையத்தினால் வெளியிடப்பட்டத் தரவுகளின் அடிப்படையில் இது கூறப்படுகிறது.
- அமெரிக்காவிலேயே கலிபோர்னியாவில் தான் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியுள்ளன.

## ஐக்கிய நாடுகள் வர்த்தக மன்றம் 2021

- 2021 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் வர்த்தக மன்றத்தில், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் அவர்கள் உரையாற்றிய போது பெரிய நாடுகளின் மத்தியில் இந்தியாவில் தனி நபர் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வானது மிகவும் குறைவு எனக் கூறினார்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் 450 GW திறனுடைய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்கை அடைவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2030 ஐ.நாவின் நிலையான மேம்பாட்டு இலக்குகள் மீதான 2030 ஆம் ஆண்டுச் செயல்பாட்டு நிரல்களை அடைவதில் இந்தியாவின் ஈடுபாட்டினைக் குறிப்பிடுகிறது.
- ஐக்கிய நாடுகள் வர்த்தக மன்றமானது ஒரு வளமான, உள்ளார்ந்த மற்றும் நிலையான உலகை உருவாக்க வர்த்தகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான ஒரு தளமாக நிறுவப்பட்டது.




## குழந்தைகள் மற்றும் டிஜிட்டல் குப்பைக் கிடங்கு அறிக்கை

- குழந்தைகள் மற்றும் டிஜிட்டல் குப்பைக் கிடங்கு எனத் தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கையானது உலக சுகாதார அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.

*முக்கியத் தகவல்கள்*

- குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளிலுள்ள மின்னணுக் கழிவுக் கிடங்குகளில் பணியாற்றும் 18 மில்லியனுக்கும் மேலான குழந்தைகள் மற்றும் இளம் வயதினர் இதன் மூலம் தீவிரமான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும்.
- அதிக வருமானமுடைய நாடுகளிலிருந்து கொட்டப்படும் மின்னணுக் கழிவுகளால் இந்த நாடுகள் பெரும் ஆபத்தை எதிர்கொள்கின்றன.
- முறையான பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் இல்லாத குறைவான வருமானமுடைய நாடுகளில் இந்தக் கழிவுகளின் மீதான செயல்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.




- குழந்தைகள் சிறிய மற்றும் சாமர்த்தியமான கைகளை உடையவர்கள் என்பதால் இத்தகைய குப்பைக் கிடங்குகளில் வேலை செய்வதற்கு இவர்களே அதிகம் பணியமர்த்தப் படுகின்றனர்.
- 2019 ஆம் ஆண்டில் 53.6 மில்லியன் டன் அளவிலான மின்னணுக் கழிவுகள் உருவாக்கப் பட்டன.

- இதில் 17.4 சதவீத மின்னணுக் கழிவுகள் மட்டுமே முறையான மறுசுழற்சி மையங்களில் செயல்முறைக்கு உட்படுத்தப் படுகின்றன.
- மீதமுள்ள கழிவுகள் முறைசாரா பணியாளர்கள் மூலம் சட்டவிரோதமாக செயல்முறைக்கு உட்படுத்துவதற்காக வேண்டி குறைவான (அ) நடுத்தர வருமானமுடைய நாடுகளில் கொட்டப் படுகின்றன.

## உலகளாவியப் போக்குகள் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான ஆணையத்தின் சமீபத்திய ஒரு வருடாந்திர அறிக்கையின் படி,
  - 82.4 மில்லியன் மக்கள் பலவந்தமாக புலம்பெயரச் செய்யப்பட்டுள்ளனர்.
  - ஐ.நா.வின் அகதிகளுக்கான ஆணையத்தின் உத்தரவின் கீழ் 20.7 மில்லியன் அகதிகள் (2019 ஆம் ஆண்டில் 20.4 மில்லியன்) உள்ளனர்.
  - ஐ.நா.வின் நிவாரண மற்றும் பணிகள் முகமையின் உத்தரவின் கீழ், 5.7 மில்லியன் பாலஸ்தீன அகதிகள் (2019 ஆம் ஆண்டில் 5.6 மில்லியன்) உள்ளனர்.
  - உள்நாட்டிற்குள்ளேயே புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 48.0 மில்லியன் ஆகும் (2019 ஆம் ஆண்டில் 45.7 மில்லியன்).
  - புகலிடம் கோரியவர்கள் – 4.1 மில்லியன் (2019 ஆம் ஆண்டில் 4.1 மில்லியன்) ஆகும்.
  - 3.9 மில்லியன் வெனிசுலா நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்த்தப் பட்டனர் (2019 ஆம் ஆண்டில் 3.6 மில்லியன்).




- 2020 ஆம் ஆண்டானது உலகம் முழுவதுமான கட்டாயப் புலம்பெயர்வு தங்கு தடையின்றி உயர்ந்து வரும் ஒன்பதாவது ஆண்டாகும்.
- வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற மக்களுள் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலானோர் வெறும் 5 நாடுகளை மட்டுமே சேர்ந்தவராவர்.

   - சிரியா (6.7 மில்லியன்)
   - வெனிசுலா (4.0 மில்லியன்)
   - ஆப்கானிஸ்தான் (2.6 மில்லியன்)
   - தெற்கு சூடான் (2.2 மில்லியன்) மற்றும்
   - மியான்மர் (1.1 மில்லியன்)
- தொடர்ந்து ஏழாவது ஆண்டாக துருக்கி நாடானது உலகளவில் மிக அதிக அகதிகளுக்கு இடமளித்துள்ளது (3.7 மில்லியன் அகதிகள்).

## உலக வங்கி & சர்வதேச நாணய நிதியம் – உயர்மட்ட ஆலோசனைக் குழு

- மான்டேக் சிங் அலுவாலியா (Montek Singh Ahluwalia) அவர்கள் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தினால் அமைக்கப் பட்டுள்ள ஒரு உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவராவார்.
- இக்குழுவிற்கு மாரி பங்கெஸ்து (Mari Pangestu), செய்லா பசார்பசியோக்லு (Ceyla Pazarbasioglu) மற்றும் லார்ட் நிக்கோலஸ் ஸ்டெர்ன் (Lord Nicholas Stern) ஆகியோர் இணைந்து தலைமை தாங்குவர்.
- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றால் உருவாக்கப் பட்ட இரட்டை நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக வேண்டி இந்த குழுவானது அமைக்கப் பட்டுள்ளது.

## இந்தியா-அமெரிக்கா ஹைட்ரஜன் பணிக்குழு (சிறப்புப்படை)

- மலிவான ஹைட்ரஜனைப் பெறும் நிலையை அடைவதற்கான ஒரு மன்றமாக செயல்படும் நோக்கில் அமெரிக்க இந்திய ஹைட்ரஜன் பணிக்குழுவானது அமைக்கப் பட்டுள்ளது.
- குறைவான கார்பன் (அ) கார்பனற்ற ஹைட்ரஜன் தொழில்நுட்பங்கள் மற்றும் அதன் பயன்பாடுகளை அதிகப்படுத்துவதன் மூலம் ஆற்றல் பாதுகாப்பினையும் அதன் நெகிழ்திறனையும் மேம்படுத்தச் செய்வதே இதன் நோக்கமாகும்.
- இந்தப் பணிக் குழுவானது,
   - அமெரிக்க ஆற்றல் துறை,
   - மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் மற்றும்
   - அமெரிக்க இந்திய உத்திசார் கூட்டிணைவு மன்றம் ஆகியவற்றால் உருவாக்கப் பட்டது.

## ஐ.நா.வின் மியான்மர் தீர்மானம் மீதான வாக்களிப்பினைத் தவிர்த்த இந்தியா

- ஐக்கிய நாடுகளின் தீர்மானம் மியான்மர் இராணுவத்திற்கு எதிரான உலகளாவிய எதிர்ப்பினை எடுத்துக் காட்டியதுடன் அந்த நாட்டில் மக்களாட்சி மாற்றத்தை மீட்டெடுக்கவும் கோரிக்கை விடுத்துள்ளது.

- மியான்மர் நாட்டின் மீது ஆயுதத் தடை விதிப்பதற்கான ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் இந்தத் தீர்மானம் மீதான வாக்களிப்பினை இந்தியா தவிர்த்துள்ளது.
- 119 நாடுகள் "ஆம்" எனவும் பெலாரஸ் நாடு "இல்லை" எனவும் வாக்களித்துள்ளது, 36 நாடுகள் வாக்களிப்பினைத் தவிர்த்துள்ளன.

*பின்னணி*

- இந்த ஆண்டு பிப்ரவரி 01 ஆம் தேதியன்று மியான்மர் நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இராணுவப் புரட்சியினால் பதவி நீக்கம் செய்யப் பட்டனர்.
- நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஆங் சாங் சூ கியின் ஆளுங்கட்சியானது மோசடி செய்ததாக இந்த இராணுவப் புரட்சியில் குற்றம் சாட்டப்பட்டது.
- முந்தைய தேர்தல் ஆணையமும் சர்வதேசக் கண்காணிப்பு அமைப்புகளும் இராணுவத்தின் இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளன.

## குழந்தைகள் மற்றும் ஆயுதமேந்திய மோதல்கள் குறித்த அறிக்கை

- ஐக்கிய நாடுகள் தனது குழந்தைகள் மற்றும் ஆயுதமேந்திய மோதல்கள் குறித்த பொதுச் செயலாளரின் வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிராக 26,425 கொடிய வன்முறைச் சம்பவங்கள் நடந்தேறியுள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் சுமார் 19,300 குழந்தைகள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- கடத்தல் சார்ந்த குற்றங்களும் 90% அதிகரித்துள்ளன.
- வன்புணர்வு மற்றும் இதர வகையிலான பாலியல் வன்முறைச் சம்பவங்களும் 70% அதிகரித்துள்ளன.
- அரிதான மற்றும் இதர வகை பாலியல் வன்முறைகள் போன்ற கொடிய வன்முறைகளால் பாதிக்க ப்படும் நான்கில் ஒரு குழந்தை சிறுமியராவர்.

## உலகளவிலான தற்கொலை எண்ணிக்கை – 2019

- 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகளவிலான தற்கொலை எண்ணிக்கையைப் பற்றிய ஒரு அறிக்கையானது உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, தற்போதைய நிலவரங்களின் அடிப்படையில் 38 நாடுகளில் மட்டுமே தேசியத் தற்கொலை தடுப்பு உத்திகள் கையாளப் படுகின்றன.
- 2019 ஆம் ஆண்டில் ஏற்கனவே தற்கொலை நெருக்கடி நிலை நிலவியது.
- 2019 ஆம் ஆண்டில் நூறில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்துள்ளார்.
- 58% தற்கொலைகள் 50 வயதிற்கு முற்பட்டவர்களால் மேற்கொள்ளப் பட்டவை.
- 2019 ஆம் ஆண்டில் உலகளவில் 15-29 வயதிற்குட்பட்ட இளம் பருவத்தினரின் இறப்பிற்குத் தற்கொலையானது நான்காவது முன்னணி காரணியாக விளங்குகிறது.
- 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகளாவிய தற்கொலைகளில் 77% ஆனது குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளிலேயே நிகழ்ந்துள்ளன.
- ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளின் தற்கொலை விகிதங்கள் உலக சராசரியை விட அதிகமாக உள்ளன.

- தென்கிழக்காசியாவைப் பொறுத்தவரை இந்தியாவில் தற்கொலை வீதமானது அதிகமாக உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் 9.9 ஆக இருந்த தற்கொலை வீதமானது 2018 ஆம் ஆண்டில் 10.2 ஆக உயர்ந்துள்ளது.




## எல்லை வரம்பற்ற வரி ஆய்வாளர்கள் திட்டம் – பூடான் மற்றும் இந்தியா

- இந்த திட்டமானது 24 மாதங்கள் வரை நடப்பிலிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- சர்வதேச வரிவிதிப்பு மற்றும் பரிமாற்ற விலை நிர்ணயத்தின் பிரிவில் இந்த திட்டமானது ஈடுபாடு செலுத்தும்.
- இதன்மூலம் வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கு பூடான் நாட்டிற்கு உதவுவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

## CEOS COAST

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது சமீபத்தில் CEOS COAST எனப்படும் ஒரு பன்னாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- CEOS COAST என்பது புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோள்கள், கடலோரக் கண்காணிப்பு, பயன்பாடுகள், சேவைகள் மற்றும் கருவிகள் மீதான ஒரு குழு ஆகும்.
- இந்தத் திட்டமானது அமெரிக்காவின் தேசியக் கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு மற்றும் இந்தியாவின் இஸ்ரோ நிறுவனம் ஆகியவற்றால் இணைந்து மேற்கொள்ளப் படுகிறது.
- செயற்கைக்கோள் மற்றும் நிலம் சார்ந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் கடலோரப் பகுதிகளின் தரவுகளுடைய துல்லியத் தன்மையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கருத்துருவானது கண்டங்களின் கடற்கரையோரப் பகுதிகள் மற்றும் சிறிய தீவு நாடுகளில் பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் கடலோரப் பகுதியின் எதிர்திறன் ஆகியவையாகும்.




## பெரிய வால் நட்சத்திரம் 2014 UN271

- 2014 UN271 எனும் ஒரு பெரிய வால் நட்சத்திரமானது 2031 ஆம் ஆண்டில் சனிக் கோளின் சுற்றுப்பாதைக்கு மிக அருகில் சூரியனைக் கடந்து செல்லும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தப் பெரிய வால்நட்சத்திரமானது 2014 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட கரும்பொருள் ஆற்றல் ஆய்வின் (Dark Energy Survey) வானியல் கண்டுபிடிப்புகளின் போது கண்டறியப்பட்டது.
- இது 100 முதல் 370 கி.மீ. வரையிலான அகலம் உடையதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- வால்நட்சத்திரங்கள் என்பவை சூரியக் குடும்பத்தின் உருவாக்கத்தின் போது எஞ்சிய பாறை, தூசி மற்றும் பனிக்கட்டிகளால் ஆன உறைந்த பகுதிகளாகும்.

## அப்தலா தடுப்பு மருந்து

- கொரோனா வைரசுக்கு எதிரான அப்தலா தடுப்பு மருந்தானது அதன் இறுதி கட்ட மருத்துவச் சோதனையில் 92.28% ஆற்றல் வாய்ந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளதாக கியூபா நாடு அறிவித்துள்ளது.
- இது மூன்று தவணைகளில் செலுத்தப்படும் ஒரு தடுப்பு மருந்தாகும்.
- இது கியூபாவிலுள்ள மரபணுப் பொறியியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தினால் உருவாக்கப்பட்டது.




## ஸ்ட்ராபெரி மூன்

- ஸ்ட்ராபெரி நிலவானது வசந்த காலத்தின் ஒரு கடைசி முழு நிலவாகும்.
- மேலும் இது கோடை காலத்தின் முதல் முழுநிலவாகும்.
- இந்த வானியல் நிகழ்வானது இரண்டு காரணங்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்தது. அவை,
    - இது ஸ்ட்ராபெரி மூன் மற்றும்
    - சூப்பர் மூன் ஆகியனவாகும்.
- இந்த வானியல் நிகழ்வானது ஜுன் 24 அன்று ஏற்பட்டது.

## விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் மற்றும் ஜப்பான்




- ஜப்பான் நாடானது சமீபத்தில், விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்திற்கு (Regional Comprehensive Economic Partnership – RCEP) அதன் ஒப்புதலை அளித்துள்ளது.

- இது ஆஸ்திரேலியா, சீனா மற்றும் தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு (ASEAN - Association of Southeast Asian Nations) ஆகியவற்றிற்கிடையேயான தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள மூன்றாவது நாடு ஜப்பான் ஆகும்.
- இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் சீனா மற்றும் சிங்கப்பூர் ஆகியவை அதற்கான ஒப்புதலை வழங்கும் செயல்முறைகளையும் நிறைவு செய்துள்ளன.
- RCEP ஒப்பந்த அமைப்பில் இணைவதால் இது சீனா மற்றும் தென் கொரியா ஆகியவற்றுடனான ஜப்பானின் முதலாவது வர்த்தக ஒப்பந்தமாக உள்ளது.

## திபெத்தில் முதன்முறையாக மின்சார ரயில் – சீனா

- சீனா, திபெத்தின் தொலைதூர இமாலயப் பகுதிகளில் முதன்முறையாக மின்சார இரயிலினை இயக்க உள்ளது.
- இந்த மின்சார இரயிலானது அந்த மாகாணத்தின் தலைநகரான லாசாவை நியிங்க்சி என்ற நகரத்துடன் இணைக்கும்.
- நியிங்க்சியானது அருணாச்சலப் பிரதேசத்தின் எல்லையருகே யுக்திசார் ரீதியில் அமைந்துள்ள ஒரு திபெத்திய எல்லை நகரம் ஆகும்.




## புதிய மனித இனம் – இஸ்ரேல்

- சர்வதேச தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று இஸ்ரேலில் ஒரு புதிய மனித இனத்தைக் கண்டறிந்துள்ளது.
- நெசேர் ரம்லா எனப்படும் இஸ்ரேலிய நாட்டின் ஒரு தளத்தில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அங்கு ஒரு மண்டை ஓட்டினைக் கண்டெடுத்து உள்ளனர்.
- அந்த மனித இனம் சுமார் 4,20,000 முதல் 1,20,000 ஆண்டுகளுக்கு முன்பு வரையில் அங்கு வாழ்ந்திருக்கலாம் என கூறப்படுகிறது.
- இந்தத் தாடைப் பகுதியானது ஒரு முழு ஹோமோசேப்பியன்ஸ் இனத்தினையும் சேர்ந்ததல்ல, நியான்டர்தால் இனத்தையும் சேர்ந்ததல்ல என அந்தப் பகுப்பாய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

## சர்வதேச சூரிய ஒளி சக்தி கூட்டிணைவு ஒப்பந்தம் – டென்மார்க்

- டென்மார்க் சர்வதேச சூரிய ஒளி சக்தி கூட்டிணைவு ஒப்பந்தம் மற்றும் இந்தியாவுடனான உறுதி ஏற்பு ஒப்பந்தம் ஆகியவற்றில் கையெழுத்திட்டுள்ளது.
- சர்வதேச சூரிய ஒளி சக்தி கூட்டிணைவு ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்த பிறகு இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதலை வழங்கியுள்ள முதல் நாடு டென்மார்க் ஆகும்.

*குறிப்பு*

- புதைபடிம எரிபொருட்கள் மீதான சார்பு நிலையைக் குறைப்பதற்கான முயற்சியில் சூரிய ஒளி சக்தியை திறம்படப் பயன்படுத்துவதற்கான ஒரு செயல்பாட்டை மேற்கொள்ளச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தமானது உருவாக்கப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெம்ப்லே அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் ஆற்றிய உரையில் முதன்முதலாக இந்த முன்னெடுப்பினை அவர் முன்மொழிந்தார்.
- மேலும் அவர் சூரிய ஒளியைப் பெறும் நாடுகளை 'சூரியப் புத்திரர்' எனவும் குறிப்பிட்டார்.

ISA INTERNATIONAL SOLAR ALLIANCE

INTERNATIONAL SOLAR ALLIANCE

## உலக போதைப் பொருள் அறிக்கை 2021

- 2021 ஆம் ஆண்டு உலக போதைப் பொருள் அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 275 மில்லியன் எண்ணிக்கையிலான மக்கள் போதைப் பொருளை உபயோகித்துள்ளனர் என இந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.
- 36 மில்லியன் மக்கள் போதைப் பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் கோளாறுகளால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- போதைப் பொருளானது தீங்கு எனக் கருதி வந்த இளைஞர்களின் சதவீதமானது 40 சதவீதமாக குறைந்துள்ளது.




## வின்டோஸ் 11




- மைக்ரோசாஃப்ட் நிறுவனமானது 'வின்டோஸ் 11' எனப்படும் தனது புதிய வின்டோஸ் இயங்குதள அமைப்பினை வெளியிட்டுள்ளது.
- இது வின்டொஸ் மென்பொருளின் "அடுத்த தலைமுறை" என அழைக்கப்படுகிறது.
- இதற்கு முந்தைய வின்டோஸ் இயங்குதள அமைப்பான வின்டோஸ் 10 ஆனது 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டது.
- எனினும் இன்டெல்லினுடைய 6வது மற்றும் 7வது தலைமுறைச் செயலகங்களைக் கொண்டுள்ள கணிப்பொறிகளில் வின்டோஸ் 11 மென்பொருள் அமைப்பைப் பயன்படுத்த இயலாது.

## கியூபாவிற்கு எதிரான பொருளாதாரத் தடை – அமெரிக்கா

- கியூபா மீது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஐ.நா. பொதுச் சபையின் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா உட்பட 183 நாடுகள் வாக்களித்துள்ளன.
- அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியவை மட்டும் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளன.

- கொலம்பியா, உக்ரைன் மற்றும் பிரேசில் ஆகியவை இந்த வாக்களிப்பினைத் தவிர்த்து விட்டன.
- கியூபா மீதான பொருளாதாரத் தடையானது 1960 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டது.
- அமெரிக்கக் குடிமக்கள் மற்றும் அமெரிக்கப் பெருநிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைத் தேசியமயமாக்குதல் மற்றும் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சி ஆகியவற்றைத் தொடர்ந்து இந்தத் தடையானது விதிக்கப் பட்டது.




## ஆப்பிள் டெய்லி தினசரி இதழின் கடைசி அச்சு பதிப்பு

- ஆப்பிள் டெய்லி எனப்படும் தினசரிப் பத்திரிக்கையினுடைய கடைசி அச்சு பதிப்பின் 1 மில்லியன் இதழ்கள் ஹாங்காங்கில் விற்கப்பட்டன.
- ஹாங்காங் காவல் துறையினர் அதன் அலுவலகத்தினை ஆய்வு செய்து அதன் 5 முன்னணி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளைக் கைது செய்து, 2.3 மில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துகளை முடக்கியதைத் தொடர்ந்து அந்த நாளிதழ் நிறுவனமானது தனது இயக்கத்தை (பணிகளை) நிறுத்தப் போவதாக கூறி உள்ளது.
- இந்தப் பத்திரிக்கை தேசியப் பாதுகாப்பிற்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளிநாட்டு தொடர்புகளைக் கொண்டு இருப்பதாக ஹாங்காங் காவல் துறையினர் குற்றம் சாட்டுகின்றனர்.
- சமீப ஆண்டுகளாக இந்தப் பத்திரிக்கையானது ஹாங்காங் நகர மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சீனா மற்றும் ஹாங்காங் அதிகாரிகள் பற்றி விமர்சனங்களைத் தெரிவிக்கும் வகையில் பெருமளவில் வெளிப்படையாக இயங்கி வந்தது.

## நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழு – சாம்பல் நிறப் பட்டியல்

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவானது (Financial Action Task Force – FATF) ஹைத்தி, மால்டா, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்கு சூடான் ஆகியவற்றைச் சாம்பல் நிறப் பட்டியலில் சேர்த்துள்ளது.
- இந்த பட்டியலிலிருந்து கானா நாடு விலக்கப் பட்டுள்ளது.

***FATF***

- இந்த அமைப்பானது G7 நாடுகளின் முன்னெடுப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது 1989 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது பாரீசை மையமாக கொண்டுள்ள ஒரு அமைப்பாகும்.
- இது பணமோசடித் தடுப்புச் சட்டத்திற்கு வேண்டிய தரநிலைகளை நிர்ணயிக்கிறது.
- சாம்பல் நிறப் பட்டியலில் தற்போது 22 நாடுகள்/பிராந்தியங்கள் இடம் பெற்றுள்ளன.

## பைஹெட்டன் நீர்மின் நிலையம்

- உலகின் இரண்டாவது மிகப்பெரிய நீர்மின் நிலையத்தினை (பைஹெட்டன் நீர்மின் நிலையம்) சீனா இயக்கத் தொடங்கி உள்ளது.
- பைஹெட்டன் நீர்மின் நிலையமானது மொத்தமாக 16,000 மெகாவாட் திறனுடன் நிறுவப் பட்டுள்ளது.
- இது யாங்சே நதியின் உயர் மட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.
- யாங்சே நதியானது சீனாவின் நீளமான நதியாகும்.
- திரீ கார்ஜஸ் அணை (சீனா) ஆனது மின் உற்பத்தியின் அளவில் உலகின் மிகப்பெரிய நீர்மின் நிலையமாகும்.



## வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு செலவுமிக்க நகரம் – அஸ்காபாத்

- வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு மிகவும் செலவுமிக்க நகரமாக அஸ்காபாத் நகரம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.
- இது துருக்மெனிஸ்தானின் தலைநகர் ஆகும்.
- இந்த நகரமானது மெர்சர் எனப்படும் ஆலோசக நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான வாழ்க்கைச் செலவினக் கணக்கெடுப்பில் முதலிடத்தைப் பெற்றது.
- இதில் ஹாங்காங் நகரம் இரண்டாமிடத்தில் உள்ளது.

- இதனையடுத்து லெபனானின் பெய்ரூட் மற்றும் ஜப்பானின் டோக்கியோ ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.




| Rank out of 209 cities | City | Country |
|---|---|---|
| 40 | Dhaka | Bangladesh |
| 78 | Mumbai | India |
| 117 | New Delhi | India |
| 158 | Chennai | India |
| 170 | Bengaluru | India |
| 181 | Kolkata | India |
| 185 | Colombo | Sri Lanka |
| 199 | Islamabad | Pakistan |
| 201 | Karachi | Pakistan |

| RANK | CITY | COUNTRY |
|---|---|---|
| 1 | Ashgabat | Turkmenistan |
| 2 | Hong Kong | Hong Kong |
| 3 | Beirut | Lebanon |
| 4 | Tokyo | Japan |
| 5 | Zurich | Switzerland |

| RANK | CITY | COUNTRY |
|---|---|---|
| 209 | Bishkek | Kyrgyzstan |
| 208 | Lusaka | Zambia |
| 207 | Tbilisi | Georgia |
| 206 | Tunis | Tunisia |
| 205 | Brasilia | Brazil |

## டிராகன் மனிதன்

- சீனாவின் ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய மனித இனத்தைச் சேர்ந்த ஒரு பழங்கால மனிதனின் மண்டை ஓட்டினைக் கண்டெடுத்துள்ளதாகக் கூறியுள்ளனர்.
- இந்த மண்டை ஓடானது வடகிழக்குச் சீனாவின் ஹார்பின் எனும் நகரில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- இது “டிராகன் மனிதன்” (அ) ஹோமோ லோங்கி என அழைக்கப் படுகிறது.
- இந்தப் பெயரானது ஹார்பின் நகரம் அமைந்துள்ள சீனாவின் ஹீலோங்ஜியாங் மாகாணத்தில் (Heilongjiang province) உள்ள லோங் ஜியாங் அல்லது டிராகன் நதியின் பெயரிலிருந்துப் பெறப்பட்டதாகும்.
- இந்த மண்டை ஓடானது சுமார் 1,46,000 ஆண்டுகள் வரையில் பழமையானதாக இருக்கலாம்.



# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை – 2021

- இந்திய ரிசர்வ் வங்கியானது (Reserver Bank of India – RBI) தனது வருடாந்திர அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அதில் வங்கிகளின் சொத்துத் தரத்தினையும் வரவிருக்கும் காலாண்டிற்கான அதிகபட்ச நிதி வழங்குவதற்குத் தேவையான அவற்றின் தயார் நிலையையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

*முக்கிய தகவல்கள்*

- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வாராக் கடன்களின் வகைப்பாடு மீது விதிக்கப் பட்ட இடைக்காலத் தடையை உச்சநீதிமன்றம் நீக்கியதையடுத்து வாராக் கடன்கள் பற்றிய உண்மையான தகவல்களை வங்கிகள் வழங்க வேண்டும் என RBI எச்சரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஆகஸ்டு வரையிலான தற்காலிக கடன் தவணை சலுகையைத் தேர்ந்தெடுத்த அனைத்து கடன் கணக்குகளின் மீதான கூட்டு வட்டியை தள்ளுபடி செய்வது வங்கிகளின் நிதிநிலையின் மீது நெருக்கடியை திணிக்கும் என இந்த அறிக்கை கூறுகிறது.
- வங்கிகளின் மொத்த வாராக்கடன் விகிதமானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்த 8.2 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 6.8% ஆக குறைந்து உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 66.6% ஆக இருந்த வங்கிகளின் நிதிப்பரவல் விகிதமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 75.5% ஆக குறைந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 14.8% ஆக இருந்த வங்கிகளின் இடர் உண்டாக்கும் சொத்துக்களின் விகிதமானது டிசம்பர் மாதத்தில் 15.9% ஆக உயர்ந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 6.8% ஆக இருந்த வங்கிசாரா நிதி நிறுவனங்களின் மொத்த வாராக் கடன் விகிதமானது டிசம்பர் மாதத்தில் 5.7% ஆக உயர்ந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 23.7% ஆக இருந்த வங்கிசாரா நிதி நிறுவனங்களின் நிதி நிலைப்பாடு விகிதமானது (CAR) டிசம்பர் மாதத்தில் 24.8% ஆக உயர்ந்துள்ளது.

## புதிய கடன் வசதிகள்

- கோவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்களைத் தணிக்கும் வகையில் சில நடவடிக்கைகளையும் புதிய கடன் வசதிகளையும் பொதுத் துறை வங்கிகள் அறிவித்துள்ளன.
- பொதுத்துறை வங்கிகளானது பிணையமும் இன்றி ஒரு தனிநபருக்கு 5 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்க உள்ளது.
- இந்தக் கடன் தொகையினை அவருடைய மற்றும் அவரது குடும்பத்தினருடைய மருத்துவச் செலவிற்கு உபயோகித்து கொள்ளலாம்.
- இந்திய வங்கிகள் கூட்டமைப்பும் பாரத ஸ்டேட் வங்கியும் மும்பையில் மூன்று புதிய கடன் வசதிகளை அறிவித்துள்ளன.
- ஒரு கடன் வசதியில் தடுப்பூசி உற்பத்தியாளர்கள், மருத்துவமனைகள் (அ) மருந்தகங்கள்,

ஆக்சிஜன் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள், நோயியல் ஆய்வகங்கள், செயற்கை சுவாசக் கருவிகள், தடுப்பு மருந்து இறக்குமதியாளர்கள், கோவிட் மருந்து தளவாட நிறுவனங்கள் மற்றும் கொரோனா நோயாளிகளின் சிகிச்சை போன்றவற்றிற்கு கடன்களை வழங்கும்.

- மற்ற இரு கடன் வசதிகளுள் 2 கோடி ரூபாய் வரையிலான சுகாதார நல வர்த்தக கடனும், 1000 கோடி ரூபாய் வரையிலான சுகாதார நல வசதிகளுக்கான வர்த்தக கடனும் அடங்கும்.

## வணிக நம்பிக்கை ஆய்வு

- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைப் பங்காளர்களின் கூட்டமைப்பானது தனது காலாண்டு "வணிக நம்பிக்கை ஆய்வு" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- மே மாதத்தில் இந்திய நிறுவனங்களின் வணிக நம்பிக்கையானது மூன்று காலாண்டுகளில் இருந்ததை விட குறைந்துள்ளது என இந்த அறிக்கை கூறுகிறது.
- முந்தைய ஆய்வில் வணிக நம்பிக்கையானது கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமாக இருந்தது.
- தற்போதைய சூழ்நிலைகளின் காரணமாக பங்கேற்பு நிறுவனங்களின் நம்பிக்கையில் சரிவு ஏற்பட்டதனால் வணிக நம்பிக்கை குறியீடும் குறைந்துள்ளது.
- முந்தைய ஆய்வில் 74.2 என்ற நிலையினை அடைந்த வணிக நம்பிக்கை குறியீடானது சமீபத்திய ஆய்வில் 51.5 என்ற நிலையிலேயே உள்ளது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவு




- 2020-21 ஆம் நிதியாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவுகளை மத்தியப் புள்ளி விவர அலுவலகம் (Central Stastical Office – CSO) வெளியிட்டுள்ளது.

- கோவிட்-19 தொற்றின் இரண்டாம் அலைக்கு முன்பு, 2020 – 21 ஆம் நிதி ஆண்டின் நான்காவது காலாண்டில் (ஜனவரி-மார்ச்) இந்தியாவின் GDP ஆனது 1.6% வளர்ந்தது.
- இருப்பினும் அனைத்துக் காலாண்டுகளையும் சேர்த்து மொத்தமாக GDPயின் அளவு 7.3% சரிந்துள்ளது.

## சந்தை மூலதனத்தில் ரூ.3 டிரில்லியன் - விப்ரோ நிறுவனம்

- விப்ரோ நிறுவனமானது முதன்முறையாக சந்தை மூலதனத்தில் ரூ.3 டிரில்லியனை எட்டியுள்ளது.
- டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் மற்றும் இன்போசிஸ் ஆகிய நிறுவனங்களை அடுத்து இந்த நிலையை அடைந்த மூன்றாவது இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இதுவாகும்.
- ரூ. 3 டிரில்லியன் மதிப்பிலான சந்தை மூலதனத்தை எட்டிய 13 நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன.
- தற்போது விப்ரோ நிறுவனமானது 14வது நிறுவனமாக இந்தப் பட்டியலில் இணைந்து உள்ளது.
- ரூ. 14.05 டிரில்லியன் மதிப்பிலான சந்தை மூலதனத்துடன் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது இந்தியாவின் செல்வாக்குமிக்க நிறுவனமாக திகழ்கிறது.
- இதனையடுத்து டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட் (ரூ.11.58 டிரில்லியன்) மற்றும் HDFC வங்கி (ரூ.8.33 டிரில்லியன்) ஆகியவை உள்ளன.




| | Mkt Cap (₹cr) |
|---|---|
| RIL | 14,00,541 |
| TCS | 11,62,038 |
| HDFC Bank | 8,38,853 |
| Infosys | 5,92,085 |
| HUL | 5,54,949 |
| HDFC | 66,332 |
| ICICI Bank | 4,50,086 |
| SBI | 3,92,371 |
| Kotak Mahindra Bank | 3,59,754 |
| Bajaj Finance | 3,56,220 |
| Wipro* | 2,95,330 |

* At ₹2.95 lakh crore, Wipro became the 11th most valuable company on the BSE

## தொடக்கப் பொதுப் பங்கு வெளியீடு – பேடிஎம்

- பேடிஎம் நிறுவனமானது இந்த ஆண்டின் பிற்பகுதியில் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான தொடக்கப் பொதுப் பங்கு வெளியீட்டினை கொண்டு வர உள்ளதாக அறிவித்துள்ளது.
- தனது வளர்ச்சியைப் பெருக்குவதற்காக நிதி திரட்ட வேண்டி சில நிறுவனங்கள் தங்களது பங்குகளின் ஒரு பகுதியைப் பங்குச் சந்தையில் விற்பனை செய்யும்.

- இத்தகைய முறையானது தொடக்கப் பொதுப் பங்கு வழங்கீடு என அழைக்கப் படுகிறது.
- இதன் காரணமாக பழுப்பு நிறச் சந்தையில் (க்ரே மார்கெட்) பேடிஎம் நிறுவனப் பங்குகளின் விலை அதிகரித்துள்ளது.
- க்ரே மார்கெட் என்பது இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் வரம்பிற்கு வெளியே செயல்படும் ஒரு முறைசாரா சந்தையாகும்.
- இங்கு மேற்கொள்ளப்படும் அனைத்துப் பரிவர்த்தனைகளும் நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப் படும் அதே நேரத்தில் அவை எதிரிணை ஆபத்துகளையும் கொண்டுள்ளன.

## இந்திய ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கை

- இந்திய ரிசர்வ் வங்கியானது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடும் தனது நாணயக் கொள்கையை வெளியிட்டுள்ளது.
- இதில் வட்டி விகிதங்கள் எதுவும் மாற்றப்படவில்லை.

### *முக்கிய தகவல்கள்*

- தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலா போன்ற மனிதத் தொடர்புகள் அதிகமுள்ள துறைகளுக்காக 15,000 கோடி ரூபாய் கொண்ட ஒரு ரொக்க வசதியை இக்கொள்கை வழங்கி உள்ளது.
- மேலும் ரொக்க வசதியை அதிகரிக்கும் வகையில் வளர்ச்சியைப் புதுப்பிப்பதற்காக வேண்டி G-SAP 1.0 திட்டத்தின் கீழ் செப்டம்பர் மாதத்தில் 1.2 லட்சம் கோடி ரூபாய் என்ற அளவிலும் ஜுன் மாத காலாண்டில் 40,000 கோடி ரூபாய் என்ற அளவிலும் காப்புப் பத்திரங்களை வாங்க உள்ளதாகவும் அது அறிவித்துள்ளது.
- மறுகொள்முதல் விகிதமானது 4 சதவீதமாகவும், நேர் மாற்று மறுகொள்முதல் விகிதமானது 3.35 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- G-SAP 2.0 திட்டமானது 1.2 மில்லியன் மதிப்பிலான பத்திரங்களை வாங்குவதற்காகத் தொடங்கப் பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், மாநில அரசுகள் வழங்கும் பத்திரங்களையும் இந்திய ரிசர்வ் வங்கி வாங்க உள்ளது.

### *குறிப்பு*

- G-SAP 1.0 என்பது இந்திய ரிசர்வ் வங்கியினால் அறிவிக்கப்பட்ட அரசுப் பிணையங்களை கையகப்படுத்தும் ஒரு திட்டமாகும்.
- இது 2022 ஆம் நிதி ஆண்டில் முறையான வளர்ச்சியைக் கொண்டு வருவதற்காக வேண்டி தொடங்கப் பட்டதாகும்.

## SWIFT gpi உடனடி பணம் வழங்கும் வசதி

- வெளிநாட்டுப் பங்குதாரர் வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களின் சார்பாக இந்தியாவில் உள்ள பயனாளிகளுக்கு உடனடியாக பணம் அனுப்ப உதவும் ஒரு வசதியை வழங்குவதற்காக SWIFT என்ற நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தினைச் செய்துள்ளதாக ஐசிஐசிஐ வங்கி அறிவித்துள்ளது.

- பயனாளிகள் இதன்மூலம் தமது வங்கிக் கணக்கில் உடனடியாகப் பணம் பெற இயலும்.
- எல்லை கடந்த உள்நாட்டுப் பணப் பரிவர்த்தனைகளுக்காக SWIFT gpi எனும் உடனடி பணம் வழங்கும் ஒரு வசதியை வழங்குவதில் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் முதல் வங்கியும், உலகளவில் இரண்டாவது வங்கியும் ஐசிஐசிஐ வங்கியே ஆகும்.
- 2 லட்சம் வரையிலான தனிப்பட்ட பண வழங்கீடு ஆனது SWIFT gpi வசதி மூலம் அனுப்பப் படும்.
- இது உடனடியாக செயல்படுத்தப்பட்டு இந்தியாவிலுள்ள எந்தவொரு வங்கியிலும் உள்ள பயனாளியின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.
- இது IMPS பிணையம் வாயிலாக செலுத்தப்படுகிறது.

## உலக ஆற்றல் முதலீட்டு அறிக்கை 2021

- சர்வதேச எரிசக்தி முகமையானது 2021 ஆம் ஆண்டிற்கான உலக ஆற்றல் முதலீட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய ஆற்றல் முதலீடானது இந்த ஆண்டு முதல் மீண்டும் எழுச்சி பெற்று ஆண்டுக்கு 10% என்ற அளவிற்கு அதிகரித்து 1.9 டிரில்லியன் டாலராக இருக்கும் என எதிர்பார்க்கப் படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- பெரும்பாலான முதலீடுகள் வழக்கமான புதைபடிம எரிபொருள் உற்பத்தித் துறையிலிருந்து மடை மாற்றப் பட்டு ஆற்றல் மற்றும் உற்பத்திப் பயன்பாடு போன்ற துறைகளில் மேற்கொள்ளப் படும்.
- உலகளாவிய ஆற்றல் தேவையானது 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட குறைவினை ஈடு கட்டும் வகையில் 2021 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 4.6% எனும் வீதத்தில் உயரும் என கணிக்கப் பட்டுள்ளது.
- புதைபடிம எரிபொருள்களின் விலையானது ஒரு தடைக் கல்லாக நிலவினாலும் ஆற்றல் செயல்திறன் துறையானது அதன் முதலீட்டில் 10% உயர்வினைக் காணும்.




## உலகளாவியப் பெருநிறுவன வரி ஒப்பந்தம்

- செல்வச் சிறப்புமிக்க G7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் குழுமமானது ஒரு புதிய உலகளாவியப் பெருநிறுவன வரி ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- ஜூலை மாதத்தில் நடைபெற உள்ள G20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் சந்திப்பில் இந்த ஒப்பந்தம் குறித்து விரிவாக விவாதிக்கப் படும்.
- பெருநிறுவனங்கள் தாம் வணிகம் செய்யும் நாடுகளில் மேற்கொள்ளும் வரி ஏய்ப்பினைத் தடுத்து அந்த நிறுவனங்களை வரி செலுத்தச் செய்வதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- ஒவ்வொரு நாடும் தமக்கிடையே வரி வீதத்தைக் குறைக்கச் செய்து கொள்வதை தவிர்ப்பதற்காக இந்த ஒப்பந்தத்தில் உலகளாவிய குறைந்தபட்ச பெருநிறுவன வரி வீதம் ஆனது 15 சதவீதமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை – உலக வங்கி

- இந்த அறிக்கையின்படி 2021 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரமானது 5.6% வரை வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- சில பெரிய நாடுகளின் வலிமையான மீட்சியின் காரணமாக, கடந்த 80 ஆண்டுகளில் இல்லாத அளவிலான மந்த நிலைக்குப் பிந்தைய விரைவான வளர்ச்சி இதுவாக இருக்கும்.
- 2021 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியானது 6.8% ஆக இருக்குமென கணிக்கப் பட்டுள்ளது.
- சீனாவின் வளர்ச்சி 8.5% ஆக இருக்கும்.
- வளர்ந்து வரும் நாடுகளின் குழுமத்தில் சீனாவைத் தவிர மற்ற நாடுகளின் வளர்ச்சியானது 4.4% என்ற அளவிலான மீட்சியினைப் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்புகள்

- இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பானது முதன்முறையாக 600 டாலர்களை விஞ்சியுள்ளது.
- இதன் மூலம் உலகளவில் அதிக இருப்பினை வைத்துள்ள நான்காவது நாடான ரஷ்யாவிற்கு இணையான நிலையில் இந்தியா உள்ளது.




- அந்நியச் செலாவணி என்பது வெளிநாட்டுப் பணமதிப்பில் ஒரு நாட்டின் மத்திய வங்கி இருப்பில் வைத்திருக்கும் சொத்துகள் ஆகும்.

- பத்திரங்கள், கருவூலப் பத்திரங்கள் மற்றும் இதர அரசுப் பத்திரங்களும் இதில் அடங்கும்.
- பெரும்பாலான அந்நியச் செலாவணி இருப்புகள் அமெரிக்க டாலர் மதிப்பிலேயே உள்ளன.

## DBS வங்கி – 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த வங்கி

- ஃபோர்ப்ஸ் (Forbes) வர்த்தக இதழின் 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த வங்கிகள் பட்டியலில் DBS வங்கியானது இடம் பெற்றுள்ளது.
- தொடர்ந்து இரண்டாவது வருடமாக DBS வங்கியானது இந்தியாவிலுள்ள 30 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளுள் முதல் இடத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இது உலகின் சிறந்த வங்கிகளுக்கான போர்ப்ஸ் இதழின் 3வது பதிப்பாகும்.
- இது சந்தை ஆய்வு நிறுவனமான ஸ்டேட்டிஸ்டா (Statista) என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப் பட்டது.
- சமீபத்தில் DBS வங்கியானது ஆசியா மணி என்ற இதழினால் ‘2021 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சிறந்த சர்வதேச வங்கி’ என அங்கீகரிக்கப்பட்டது.
- DBS வங்கியானது 2020 ஆம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த வர்த்தக இதழான குளோபல் பைனான்சினுடைய உலகின் பாதுகாப்பான வங்கிகள் பட்டியலில் தொடர்ந்து 12வது ஆண்டாக இடம் பெற்றது.
- மேலும் அதே ஆண்டில் DBS வங்கியானது உலகின் சிறந்த வங்கியாகவும் குளோபல் பைனான்ஸ் என்ற இதழினால் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இதற்கு முன்பாக DBS வங்கியானது 2019 ஆம் ஆண்டில் யூரோமணி எனப்படும் முன்னணி நிதி இதழினால் ‘உலகின் சிறந்த வங்கி’ எனப் பட்டியலிடப்பட்டது.
- DBS வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி பியூஷ் குப்தா என்பவராவார்.
- இதன் தலைமையகம் சிங்கப்பூரில் அமைந்துள்ளது.
- இதன் முழக்கம் “Make Banking Joyful” என்பதாகும்.

## பிட்காயின் முதலீட்டு இலாபம் - 2020

- 2020 ஆம் ஆண்டில் பிட்காயின் முதலீட்டு இலாபத்தில் 4.1 பில்லியன் டாலர் இலாபத்துடன் அமெரிக்க வர்த்தகர்களே அதிக லாபம் அடைந்துள்ளனர்.
- இது செயின் அனாலிசிஸ் எனும் நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.
- 1.1 பில்லியன் டாலர் இலாபத்துடன் சீன வர்த்தகர்கள் இரண்டாமிடத்தில் உள்ளனர்.
- 241 மில்லியன் டாலர் இலாபத்துடன் இதில் இந்தியா 18வது இடத்தைப் பெற்றுள்ளது.

## உணவு விலைக் குறியீடு – மே மாதம்

- தொடர்ந்து 12 ஆவது மாதமாக மே மாதத்தில் உலக உணவு விலைகளானது உயர்ந்து உள்ளதாக ஐக்கிய நாடுகள் சமீபத்தில் அறிவித்தது.

- 2011 ஆம் ஆண்டு செப்டம்பருக்குப் பிறகு ஏற்பட்ட உயர்வில் இதுவே உயர்ந்தபட்ச நிலையாகும்.
- இந்த அறிவிப்பானது உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் வெளியிடப்பட்ட உணவு விலைக் குறியீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.
- மே மாதத்தில் ஆண்டிற்கு 39.7% என்ற அளவில் விலைகள் அதிகரித்துள்ளன.
- மேலும் 2021 ஆம் ஆண்டில் உலக தானிய உற்பத்திக்கான தனது முதலாவது கணிப்பு அறிக்கையையும் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது வெளியிட்டுள்ளது.
- கிட்டத்தட்ட 2.821 மில்லியன் டன்கள் உற்பத்தியாக அது இருக்கும் என இந்த அமைப்பு கணித்துள்ளது.
- இது ஒரு புதிய சாதனையானதோடு, 2020 ஆம் ஆண்டின் உற்பத்தியை விட இது 1.9% என்ற விகிதத்தில் அதிகமாகும்.

## மத்திய வங்கியின் உபரித் தொகை பரிமாற்றத்தில் பங்கு – இந்தியாவிற்கு இரண்டாமிடம்




- 2020-21 ஆம் நிதி ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதத்தின் அடிப்படையில் அரசிற்கு பரிமாற்றம் செய்யப் பட்ட நிதி இருப்புகளின் அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி இரண்டாமிடத்தில் உள்ளது.
- இதில் துருக்கி நாடானது முதலிடத்தில் உள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியினால் பரிமாற்றம் செய்யப் பட்ட உபரி நிதித் தொகையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.44% ஆகும்.
- துருக்கி குடியரசின் மத்திய வங்கியினுடைய பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5% ஆகும்.

## வருடாந்திர வங்கிப் புள்ளி விவரங்கள் 2020

- 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர வங்கிப் புள்ளி விவரங்களானது சுவிஸ் தேசிய வங்கியினால் வெளியிடப்ப ட்டது.
- 2020 ஆம் ஆண்டில் சுவிஸ் வங்கிகளில் உள்ள வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் பண இருப்பு குறித்த ஒரு பட்டியலில் 2.55 பில்லியன் சுவிஸ் நாணயமான ஃப்ராங் என்பதின் மதிப்பில் (இந்திய ரூபாய் மதிப்பில் 20,706 கோடி) இந்திய நாடானது 51வது இடத்திலுள்ளது.

- ❖ இது 2019 ஆம் ஆண்டில் 899 மில்லியன் சுவிஸ் ஃப்ராங் என்ற அளவிலிருந்து அதிகரித்து உள்ளது.
- ❖ 377 பில்லியன் சுவிஸ் ஃப்ராங் என்ற ஒரு மதிப்புடன் ஐக்கிய ராஜ்ஜியம் முதலிடத்தில் உள்ளது.
- ❖ இதனையடுத்து அமெரிக்கா உள்ளது (152 பில்லியன் சுவிஸ் ஃப்ராங்ஸ்).




## சென்ட்ரம் நிறுவனத்திடம் PMC வங்கின் பொறுப்பு

- ❖ பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியின் (Punjab and Maharastra Bank – PMC Bank) பொறுப்பினை ஏற்பதற்கான முன்மொழிதலுக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ வங்கி அல்லாத கடன் வழங்கு நிறுவனமான சென்ட்ரம் நிதிச் சேவை நிறுவனம் மற்றும் நிதித் தொழில்நுட்பத் தொடக்க நிறுவனமான பாரத்பே ஆகியவற்றின் கூட்டமைப்பானது PMC வங்கியின் பொறுப்பினை ஏற்க உள்ளது.
- ❖ PMC வங்கியினுடைய வீழ்ச்சியின் பின்னணியில் இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டது.

***இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல்***

- ❖ ஒரு சிறு நிதியியல் வங்கியினை அமைப்பதற்காக சென்ட்ரம் நிறுவனத்திற்கு கொள்கை ரீதியிலான ஒரு ஒப்புதலை வழங்குவதற்கு ரிசர்வ் வங்கி முடிவு செய்து உள்ளது.
- ❖ இது வருடாந்திர உரிமம் வழங்கும் விதிமுறைகளின் கீழ் அமைக்கப்படும்.
- ❖ வருடாந்திர உரிமம் வழங்கும் விதிமுறை என்பது வங்கிகளுக்குப் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை உரிமம் வழங்குவதற்குப் பதிலாக தொடர் உரிமம் வழங்குவதாகும்.

## உலக முதலீட்டு அறிக்கை 2021

- 2021 ஆம் ஆண்டிற்கான உலக முதலீட்டு அறிக்கையானது ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் 2020 ஆம் ஆண்டில் இந்தியா 64 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீட்டினைப் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.
- உலகம் முழுவதிலும் உள்ள அந்நிய முதலீட்டினைப் பெறும் நாடுகளில் ஐந்தாவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- அதிகளவு அந்நிய நேரடி முதலீட்டைப் பெறும் நாடாக அமெரிக்கா உள்ளது.
- அதில் சீனா இரண்டாமிடத்தில் உள்ளது.




## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்திய வங்கிகளின் கடன் விகிதம்

- 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வங்கிகளின் கடன் விகிதமானது ஐந்தாண்டில் இல்லாத அளவிற்கு 56% ஆக உயர்ந்துள்ளது.
- இது சர்வதேச நிதித் தீர்வு வங்கியின் சமீபத்தியத் தரவுகளின் படி கூறப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 56.075% கடன் விகிதத்துடன் மொத்த நிலுவைக் கடன் ஆனது 1.52 டிரில்லியன் டாலராக உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## NGC 691

- நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது "NGC 691" எனப்படும் சுருள்வடிவ அண்டத்தின் அழகான புகைப்படம் ஒன்றை எடுத்துள்ளது.
- இது 125 மில்லியன் ஒளி ஆண்டு தொலைவிற்கு அப்பால் உள்ள ஏரீஸ் விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ள ஆய்வு செய்யப்படாத சுருள் வடிவ அண்டமாகும்.
- இது ஜெர்மனியில் பிறந்த ஒரு பிரிட்டிஷ் வானியலாளரான வில்லியம் ஹெர்செல் என்பவரால் 1786 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கண்டறியப் பட்டது.



## AmbiTAG




- ❖ ரோப்பரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது (IIT-Ropar) 'AmbiTAG' எனும் கருவியை உருவாக்கியுள்ளது.
- ❖ இது "Cold Chain" எனப்படும் வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பிற்காக வேண்டி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் வெப்பநிலை தரவுப் பதிவு அமைப்பாகும்.
- ❖ இது USB வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது தனது சுற்றுப்புறப் பகுதியின் வெப்பநிலையைத் தொடர்ந்து பதிவு செய்து கொண்டே இருக்கும்.
- ❖ ஒரு முறை மின்னேற்றப் பட்டால் எந்த நேர மண்டலத்திலும் –40° முதல் +80° வரையிலான வெப்பநிலையைக் கண்டறியும் வகையில் 90 நாட்கள் வரையில் இது தொடர்ந்து இயங்கக் கூடியதாகும்.
- ❖ உலகின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் குறிப்பிட்டப் பொருளானது இன்னும் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளதா அல்லது வெப்பநிலை மாறுபாட்டினால் சிதைந்து விட்டதா எனக் கண்டறிவதற்கு இந்த உபகரணம் உதவியாக இருக்கும்.
- ❖ கோவிட்-19 தடுப்பு மருந்துகள் போன்ற பிற தடுப்பு மருந்துகள், உடல் உறுப்புகள் மற்றும் சிகிச்சைக்கான இரத்தம் போன்றவற்றை வேறிடத்திற்கு கொண்டு செல்வதற்கு இந்த தகவலானது முக்கியமான ஒன்றாகும்.

## வஜ்ர கவசம் - தொற்றுநீக்க இயந்திரம்

- ❖ மும்பையைச் சேர்ந்த இந்திரா வாட்டர் எனும் புத்தாக்க நிறுவனமானது வஜ்ர கவசம் எனும் தொற்று நீக்க இயந்திரம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.
- ❖ கொரோனா முன்களப் போராளிகள் பயன்படுத்தும் உபகரணங்களிலுள்ள தொற்றுக்களை இது நீக்குகிறது.
- ❖ இந்த இயந்திரமானது பாதுகாப்பு கவச உடைகள், முழு உடல் கவசம், கையுறைகள், N95 முகக் கவசங்கள் மற்றும் உடைகள் போன்றவற்றில் தென்படும் தொற்றின் தடயங்களை முழுவதையும் நீக்குகிறது.




## SAWSTIIK தொழில்நுட்பம்

- ❖ பூனாவிலுள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி அமைப்பின் தேசிய வேதியியல் ஆய்வகமானது SWASTIIK தொழில்நுட்பம் எனும் புதிய ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- ❖ இது இயற்கையான எண்ணெய்களைப் பயன்படுத்தி தண்ணீரில் உள்ள தொற்றுகளை நீக்க உதவுகிறது.
- ❖ நீரின் மூலம் உண்டாகும் நோய்கள் இந்தியாவின் நோய் சுமையை உயர்த்தியதன் காரணமாக இது தொடங்கப்பட்டது.
- ❖ இந்த தொழில்நுட்பமானது தேசிய ஜல் ஜீவன் திட்டத்தின் பின்னணியின் உதவியுடன் உருவாக்கப்பட்டது.
- ❖ தேசிய ஜல் ஜீவன் திட்டமானது சமீபத்தில் கோவிட்-19 தொற்றுகள் அதிகரித்து வரும் நிலையில் தண்ணீரின் தரத்தைக் கண்காணித்து குடிநீர் வசதியை உறுதிபடுத்துவதற்கு மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளுக்கு வேண்டிய ஆலோசனையை வழங்கியது.

## டாவின்சி+ மற்றும் வெரிட்டாஸ்

- நாசா நிறுவனமானது டாவின்சி+ மற்றும் வெரிட்டாஸ் எனும் இரண்டு புதிய மனித எந்திர ஆய்வுத் திட்டங்களை அறிவித்துள்ளது.
- இவை வெள்ளிக் கிரகத்தைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட உள்ளன.
- இவை 2028 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் விண்ணில் ஏவப்படும்.
- டாவின்சி+ என்றால் "வெள்ளி கிரகத்தின் நல்லியல்பு வாயு, வேதியியல் பற்றிய ஆழ் வளிமண்டல ஆய்வு மற்றும் புகைப்படமிடல்" என்பதாகும் (Deep Atmosphere Venus Investigation of Noble gases, Chemistry and Imaging – Davinci+).
- இது வெள்ளி கிரகத்தின் வளிமண்டலத்தினை அளவிடும்.
- மேலும் வெள்ளிக் கிரகத்தில் முன்பு எப்போதாவது பெருங்கடல் இருந்ததா எனவும் இது ஆய்வு செய்ய உள்ளது.
- வெரிட்டாஸ் என்றால் "வெள்ளி கிரகத்தின் உமிழ்வுத்திறன், ரேடியோ அறிவியல், InSAR, நில அமைப்பு மற்றும் நிறப்பிரிகை பற்றிய ஆய்வு" (Venus Emissivity, Radio Science, InSAR, Topography and Spectroscopy – Veritas) என்பதாகும்.
- இது வெள்ளி கிரகத்தின் புவியியல் சார்ந்த வரலாற்றினைப் புரிந்து கொள்வதற்காக வெள்ளி கிரகத்தின் மேற்பரப்பினை வரைபடமாக்கும்.
- அங்கு எரிமலை வெடிப்புகள் மற்றும் நிலநடுக்கங்கள் இன்னும் ஏற்படுகின்றனவா என்பதையும் இது கண்டறியும்.




## மதத் மேப்

- இது மருத்துவமனை படுக்கைகளின் இருப்பு குறித்த தகவல்களை நிகழ்நேர அடிப்படையில் வழங்கும் இந்தியாவின் முதலாவது நாடு தழுவிய வரைபட தளமாகும்.
- இந்தத் தளமானது மதத் (உதவி) என்ற திட்டத்தினால் தொடங்கப்பட்டது ஆகும்.
- வாசிங்டன்னைச் சேர்ந்த டாக்டர் ராஜேஷ் அணுமோலு (Dr Rajesh Anumolu) என்பவரே 'மதத் மேப்' எனும் தளத்தின் முதன்மைக் கட்டமைப்பாளராவார்.

## எக்ஸ்–ரே சேது

- எக்ஸ்-ரே சேது என்பது மார்பக X-கதிர் விளக்கப் படத்தின் உதவியுடன் கோவிட் – 19 தொற்றினை முன்கூட்டியே கண்டறிவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நுண்ணறிவு சார்ந்த கருவியாகும்.
- இது கிராமப்புறப் பகுதிகளில் கோவிட்-19 தொற்றினைக் கண்டறிவதற்கு உதவும்.
- கிராமப்புறப் பகுதிகள் RT-PCR சோதனைகள் மற்றும் சி.டி. ஸ்கேன் போன்றவை எளிதில் கிடைக்கப் பெறாதவையாகும்
- எக்ஸ்ரே சேது வாஸ்ட்அப் மூலம் இயங்கும் ஒரு தொழில்நுட்பமாகும்.
- வாட்ஸ்அப் சாட்பாட் மூலம் அனுப்பப்படும் குறைந்தத் தெளிவுத் திறனுடைய மார்பக X-கதிர் ஆய்வுப் படங்களைக் கொண்டு இது கோவிட்-19 தொற்றுடைய நோயாளிகளைக் கண்டறியும்.
- இந்தத் தொழில்நுட்பமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தினால் நிறுவப்பட்ட ஆர்ட்பார்க் எனும் அமைப்பு, பெங்களூருவிலுள்ள சுகாதார தொழில்நுட்ப தொடக்க நிறுவனமான நிராமை மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து உருவாக்கப்பட்டதாகும்.



## “EAST” – சீனாவின் செயற்கைச் சூரியன்

- சீனாவின் EAST (Experimental Advanced Superconducting Tokamak) அணுக்கரு உலை என்பது ஒரு மேம்பட்ட அணுக்கரு இணைவு சோதனைக்கான ஆராய்ச்சிக் கருவியாகும்.
- East Tokamak என்ற உலையானது சூரியனின் ஆற்றல் உற்பத்தி செயல்முறையைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது சூரியன் மற்றும் நட்சத்திரங்களால் மேற்கொள்ளப்படும் அணுக்கரு இணைவு செயல்முறையைப் பிரதிபலிக்கின்றது.
- இது 101 விநாடிகளுக்கு 216 மில்லியன் டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலையில் (120 மில்லியன் டிகிரி செல்சியஸ்) இயங்கி ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- இது நாட்டில் தற்போது இயங்கி வரும் மூன்று உள்நாட்டு தொகாமக் (Tokamak) வகை உலைகளில் ஒன்றாகும்.
- மற்ற இரு தொகாமக் உலைகள் HL-2A உலை மற்றும் J-NEXT ஆகியவையாகும்.
- மேலும் 2020 ஆம் ஆண்டில் தென்கொரியாவின் KSTAR உலையானது 20 விநாடிகளுக்கு 100 மில்லியன் டிகிரி செல்சியஸ் பிளாஸ்மா வெப்பநிலையில் இயக்கப்பட்டு சாதனை ஒன்றைப் படைத்தது.

## குவார்க் – குளுவான் பிளாஸ்மா

- ஒளியின் வேகத்தின் உடைய 99.9999991% வேகத்தில் துகள்களை ஒன்றோடு ஒன்று மோதச் செய்வதால் பெருவெடிப்பிற்குப் பிறகு தோன்றிய முதல் பொருளானது மீண்டும் உருவாக்கப் பட்டது.
- இந்த ஆதிகாலத்திய பொருளானது குவார்க் – குளுவான் பிளாஸ்மா (Quark Gluon Plasma – QGP) எனப்படுகிறது.
- இந்தப் பொருளானது ஒரு நொடி வரை மட்டுமே நீடித்தது.
- இந்தப் புதிய ஆய்வானது டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.



## புவித்தாழ்மட்ட சுற்றுப்பாதை செயற்கைக்கோள்கள் – இணையதள இணைப்பு வசதி

- ஒன்வெப் (OneWeb) என்பது புவித்தாழ்மட்ட சுற்றுப்பாதை செயற்கைக்கோள்களுக்கு தகவல்தொடர்பு சேவை வழங்கும் ஒரு அமைப்பாகும்.
- 36 செயற்கைக்கோள்களின் அடுத்த குழுமத்தினை இது ரஷ்யாவிலிருந்து விண்ணில் ஏவியுள்ளது.
- இத்தோடு சுற்றுப்பாதையிலுள்ள ஒன்வெப் நிறுவனத்தின் மொத்த செயற்கைக் கோள்களின் எண்ணிக்கையானது 218 ஆகியுள்ளது.
- இது ஒன்வெப் அமைப்பின் 648 புவித்தாழ்மட்ட செயற்கைக் கோள் தொகுப்பின் ஓர் அங்கமாக இருக்கும்.
- ஒன்வெப் நிறுவனமானது இவற்றைப் பயன்படுத்தி ஐக்கிய ராஜ்ஜியம், அலாஸ்கா, வட ஐரோப்பா, கிரீன்லாந்து, ஆர்க்டிக் கடல் மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு இணைய தள இணைப்பு வசதியை வழங்க உள்ளது.
- இந்தத் திட்டமானது “Five to 50” சேவை என அழைக்கப் படுகிறது.
- இது 50 டிகிரி அட்ச ரேகையின் வடக்கேயுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் இணைய சேவையை வழங்குகிறது.

## கார்பன் நானோ குழாய்களிலிருந்து மின்சாரம்

- மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பொறியாளர்கள் கார்பன் நானோ (நுண்) குழாய்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் புதிய வழிமுறையைக் கண்டறிந்துள்ளனர்.
- கார்பன் நானோ குழாய்களால் (நுண் குழாய்கள்) ஆன இந்தப் புதிய சாதனமானது தனது சுற்றுப்புறச் சூழலிலுள்ள ஆற்றலைச் சேகரித்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வல்லமையைக் கொண்டது.
- இந்த நுண்ணிய கார்பன் துகள்கள் அதனைச் சுற்றியுள்ள திரவத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மின்னோட்டத்தை உருவாக்க இயலும்.
- ஒரு கரிமக் கரைப்பான் எனும் வகையிலான இந்தத் திரவமானது நானோ நுண் துகள்களிலிருந்து மின்னோட்டத்தை உருவாக்கும் எலக்ட்ரான்களை ஈர்க்கிறது.



## CAR – T செல் சிகிச்சை

- சைமரிக் ஆன்டிஜென் ஏற்பு – T செல் சிகிச்சைக்கான மருத்துவச் சோதனைகளானது உலகளவில் மேற்கொள்ளப்பட்டது.
- இது இறுதிகட்ட நிலையிலுள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கு, குறிப்பாக தீவிரமான நிண நீர்க் குழியப் புற்றுநோய் (Acute Lymphocytic Leukemia) உள்ள நோயாளிகளுக்கு நம்பிக்கை தரும் வகையில் மிகுந்த பலன்களை அளித்துள்ளது.
- முதலாவது CAR – T செல் சிகிச்சை முறையானது மும்பையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் கேன்சர் கேர் எனும் அமைப்பு ஆகியவற்றால் மேற்கொள்ளப் பட்டது.
- இது மும்பையிலுள்ள டாடா நினைவு மையத்தின் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.
- CAR – T செல் சிகிச்சை முறையானது மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினுடைய உயிரி அறிவியல் மற்றும் உயிரிப் பொறியியல் துறையினால் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.
- இதற்கு BIRAC – PACE என்ற திட்டத்தின் கீழ் உதவி வழங்கப் பட்டுள்ளது.
- தற்போது இவர்களுடைய CAR-T சிசிச்சை முறையானது தேசிய உயிரி மருந்துத் திட்டத்தின் கீழ் முதல்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட பரிசோதனைக்கு உட்படுத்தப் படும்.




## புயல் உருவாவதை முன்கூட்டியே கண்டறியும் தொழில்நுட்பம்

- கரக்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது புயல் உருவாவதை முன்கூட்டியே கண்டறியும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- இது வட இந்தியப் பெருங்கடல் பகுதியில் வெப்பமண்டலப் புயல்கள் உருவாவதை (அ) வலுப் பெறுவதை முன்கூட்டியேக் கண்டறிய உதவும்.

- இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனமானது சுழல் கண்டறியும் வகையிலான ஒரு தொழில்நுட்பத்தினை (Eddy detection technique) பயன்படுத்தி இந்த தொழில் நுட்பத்தினை உருவாக்கியுள்ளது.

## முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட வைரஸ் எதிர்ப்பு பொருள் பூசப்பட்ட முகக் கவசம்

- தின்கெர் டெக்னாலஜீஸ் இந்தியா (Thincr Technologies) எனும் தனியார் நிறுவனமானது முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட வைரஸ் எதிர்ப்பு பொருள் பூசப்பட்ட முகக் கவசத்தினை வடிவமைத்துள்ளது.
- தின்கெர் டெக்னாலஜி நிறுவனமானது பூனாவில் அமைந்துள்ள ஒரு புத்தாக்க நிறுவனமாகும்.
- இந்த முகக்கசங்களில் விருசைட்ஸ் (virucides) எனப்படும் ஒரு வைரல் எதிர்ப்புப் பொருளானது பூசப்பட்டுள்ளது.
- இந்த விலை மலிவான முகக்கவசங்கள் கோவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- இதன் உருவாக்கத் திட்டத்திற்கு தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியத்தினால் (Technology Development Board) நிதி உதவி வழங்கப்பட்டது.
- மெர்க் லைஃப் சைன்சஸ் (Merck Life Sciences) எனும் நிறுவனத்தின் உதவியுடன் இந்த முகக் கவசங்கள் உருவாக்கப்பட்டன.




## Envision

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது வெள்ளிக் கிரகத்தை ஆய்வு செய்வதற்கான தனது சொந்த ஆய்வுக் கலத்தை உருவாக்கி வருகிறது.
- இந்தத் திட்டத்திற்கு "Envision" எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இது அநேகமாக 2030 ஆம் ஆண்டின் ஆரம்பக் கட்டத்தில் விண்ணில் செலுத்தப்படும்.
- நாசாவினுடைய பங்களிப்புடன் ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது இந்த திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

## CHIME தொலைநோக்கி தகவல்கள்

- அறிவியலாளர்கள் CHIME தொலைநோக்கியைக் கொண்டு தொலைநோக்கியின் முதலாவது அதிவேக ரேடியோ வெடிப்புப் பிரிவில் மிகப்பெரிய FRB (Fast Radio Burst – FRB) என்ற ஒரு திரளினைத் திரட்டியுள்ளனர்.
- CHIME என்பது கனடா நாட்டின் ஹைட்ரஜன் செறிவு வரைபடமிடல் சார்ந்த ஒரு சோதனையாகும் (Canadian Hydrogen Intensity Mapping Experiment – CHIME).
- இது கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா எனுமிடத்தில் அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய நிலையான ரேடியோ தொலைநோக்கியாகும்.
- FRB நிகழ்வு தென்படுவது என்பது ரேடியோ வானவியல் துறையில் ஓர் அரிதான நிகழ்வாகக் கருதப்படுகிறது.
- 2007 ஆம் ஆண்டில், முதல் FRB ஏற்பட்டதிலிருந்து இன்று வரையில் ரேடியோ வானவியலாளர்கள் தங்களது தொலைநோக்கிகளின் வாயிலாக சுமார் 140 வெடிப்புகளை மட்டுமே கண்டுள்ளனர்.
- FRB என்பது சில மில்லி விநாடிகளுக்கு மட்டுமே ஒளிர்ந்து தடயமேயின்றி மறையும் ஒரு பிரகாசமான ஒளிக்கற்றையாகும்.
- இவை மின்காந்த நிறமாலையின் ரேடியோ கற்றையில் (radio band of the electromagnetic spectrum) பதிவு செய்யப்பட்டுள்ளன.

## WISA வுட்சாட்




- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது உலகின் முதலாவது மரத்தாலான செயற்கைக் கோளை புவியின் சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்துவதற்காக வேண்டி விண்ணில் செலுத்த உள்ளது.
- இது WISA வுட்சாட் என அழைக்கப் படுகிறது.
- விண்கல அமைப்புகளில் ஒட்டுப் பலகை போன்ற மரப்பொருள்களின் பொருந்தும் தன்மையைப் பரிசோதிப்பதற்காக வேண்டி இது அனுப்பப்பட உள்ளது.
- இந்த மரத்தாலான செயற்கைக் கோளானது ராக்கெட் லேப் எலக்ட்ரான் ராக்கெட்டின் உதவியுடன் விண்ணில் செலுத்தப்படும்.
- இது நியூசிலாந்திலுள்ள மாஹியா தீபகற்ப ஏவுதள வளாகத்திலிருந்து விண்ணில் ஏவப்படும்.

- இந்தச் செயற்கைக் கோளானது பின்லாந்து நாட்டினால் வடிவமைக்கப்பட்டு அதன் பின் கட்டமைக்கப் பட்டுள்ளது.

## ஷென்சோ – 12

- ஷென்சோ -12 எனும் சீன விண்கலமானது லாங் மார்ச் என்ற ராக்கெட்டின் மூலம் சீனாவின் கோபி பாலைவனத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டுள்ளது.
- இந்த விண்கலமானது மூன்று மனிதர்களை விண்வெளிக்குத் தாங்கிக் கொண்டு செல்லும்.
- விண்வெளியில் அவர்கள் மூன்று மாதங்கள் தங்கி இருப்பர்.
- 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு சீன நாடானது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவது இதுவே முதல்முறையாகும்.
- ஷென்சோ – 12 என்பதன் பொருள் தெய்வீக விண்கலம் (Divine Vessel) என்பதாகும்.

## சூரியக் குடும்பத்திற்கும் விண்மீன் இடைவெளிக்கும் இடையேயான எல்லை

- அறிவியலாளர்கள் நமது சூரியக் குடும்பத்திற்கும் அயனிச் செறிவு மண்டலம் எனப் படும் விண்மீன் இடைவெளிக்கும் இடையேயான எல்லையின் முதலாவது முப்பரிமாண வரைபடத்தினை உருவாக்கியுள்ளனர்.
- இந்த முப்பரிமாண வரைபடமானது நாசாவின் IBEX என்ற செயற்கைக் கோளின் தரவுகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.
- அயனிச் செறிவு மண்டலத்தின் எல்லையானது முதல்முறையாக வரைபடமிடப் பட்டு உள்ளது.
- இது சூரியக் காற்றும் விண்மீன் இடைவெளிப் பகுதிக் காற்றும் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதை அறிய அறிவியலாளர்களுக்கு உதவும்.
- இதற்கு முன்பாக இந்த எல்லையானது இயற்பியல் மாதிரிகளின் தேற்றங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- அறிவியலாளர்கள் இதனை அளவிட்டு ஒரு முப்பரிமாண வரைடமாக உருவாக்கியது இதுவே முதல்முறையாகும்.



## T2T – CHM13

- 30க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் ஒரு சர்வதேசக் கூட்டிணைவான டெலோமியர் – டூ – டெலோமியர் என்ற கூட்டமைப்பானது (Telomere-to-Telomere) மனிதனின் ஒரு முழுமையான மாதிரி மரபணுவினைத் தொகுத்துள்ளது.
- இந்தப் புதியத் தொகுப்பிற்கு “T2T – CHM13” எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இது மனிதனின் டி.என்.ஏ பற்றிய புதிய தகவல்களை வெளிக் கொணருகிறது.
- இது மக்களைப் பாதிக்கும் பல்வேறு வகையிலான குறைபாடுகளை புரிந்து கொள்ள உதவும்.

## மஞ்சள் தர்பூசணி

- பேயர் நிறுவனத்தின் உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளால் மஞ்சள் தர்பூசணியானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இரண்டு ஆண்டுகள் அளவிலான உள்ளூர் சோதனையைத் தொடர்ந்து இந்த மஞ்சள் தர்பூசணி வகையானது வணிகரீதியாக இந்தியாவில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- எல்லோ கோல்டு 48 எனும் இந்த வகை தர்பூசணியானது மேம்பட்ட மகசூல் திறன், சிறந்த நோய் எதிர்ப்பு மற்றும் பூச்சி எதிர்ப்பு திறன்களை கொண்டுள்ளது.
- இது அக்டோபர் முதல் பிப்ரவரி மாதம் வரையிலான காலகட்டத்தில் பயிரிட உகந்தது.
- ஏப்ரல் மாதத்திலிருந்து இதனுடைய அறுவடையினை மேற்கொள்ளலாம்.



## இன்ஜெனியூட்டி ஹெலிகாப்டர் – 8வது முறையாக செவ்வாயில் பறந்தது

- நாசாவின் செவ்வாய்க் கிரகம் மீதான சோதனை முறை ஹெலிகாப்டரான இன்ஜெனியூட்டி அதன் பரப்பில் எட்டாவது முறையாகப் பறந்துள்ளது.
- இன்ஜெனியூட்டி என்பது நாசாவின் 2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத் திட்டத்தின் கீழ், செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்டு இயங்கி வரும் ஒரு சிறிய எந்திர ஹெலிகாப்டர் ஆகும்.
- இது நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வகத்தில் கட்டமைக்கப்பட்டது.
- இது முதலில் 5 முறைகள் மட்டுமே பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது.
- இதன் நிலையான வெற்றியின் மூலம் இத்திட்டத்தினை விரிவுபடுத்தவும் மேலும் பலமுறை பறக்கச் செய்து சோதனை செய்யவும் வேண்டி அது அந்நிறுவனத்திற்கு மேலும்

நம்பிக்கை அளித்துள்ளது.




## நிர்பய்

- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது நிர்பய் எனும் ஒலியின் வேகத்தைவிட குறைவான (அ) ஒலியின் வேகத்தில் பாயும் (குறையொலி) சீர்வேக ஏவுகணையினை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ❖ இது ஒடிசாவின் பாலாசோரிலுள்ள சந்திப்பூரில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் சோதிக்கப் பட்டது.
- ❖ இது எட்டாவது முறையாக சோதிக்கப் பட்டுள்ளது.
- ❖ இது 2013 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியன்று முதன்முறையாக சோதிக்கப்பட்டது.
- ❖ இது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு DRDO அமைப்பினால் கட்டமைக்கப்பட்ட நீண்ட வரம்புடைய, அனைத்து வானிலைகளிலும் இயங்கக் கூடிய ஒரு குறையொலி சீர்வேக ஏவுகணை ஆகும்.
- ❖ இது சுமார் 1500 கி.மீ. தூரம் வரையிலான இலக்கையும் தாக்கி அழிக்கக் கூடியது.




## விரைவு ஆன்டிஜன் சோதனைக் கருவி – IIT டெல்லி

- கல்வித் துறை இணை அமைச்சர் சஞ்சய் தோத்ரே அவர்கள் கோவிட்-19 நோய்க்கான விரைவு ஆன்டிஜன் சோதனைக் கருவியினை வெளியிட்டார்.
- இது டெல்லியின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் (Indian Institute of Technology Delhi) உருவாக்கப்பட்டதாகும்.
- இந்தக் கருவியானது டாக்டர் ஹர்பால் சிங் தலைமையிலான டெல்லியின் IIT ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டது.
- இவர் டெல்லி IIT நிறுவனத்தினுடைய உயிரிமருத்துவப் பொறியியல் மையத்தில் பணி புரியும் ஒரு பேராசிரியராவார்.
- இந்தக் கருவியானது முழுமையாக டெல்லியின் IIT நிறுவனத்தினுடைய வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டதாகும்.

## வனப்பரப்பு கணக்கெடுப்பு – LiDAR

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பத்து மாநிலங்களில் உள்ள வனப்பகுதிகளில் LiDAR (ஒளி மூலம் கண்டறிதல் மற்றும் வரம்பு அளவிடல்) என்ற தொழில்நுட்பம் அடிப்படையிலான கணக்கெடுப்பினுடைய விரிவான திட்ட அறிக்கைகளை வெளியிட்டார்.
- இதில் கணக்கெடுக்கப்பட்ட மாநிலங்கள் அசாம், பீகார், சத்தீஸ்கர், கோவா, ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, மணிப்பூர், நாகலாந்து மற்றும் திரிபுரா ஆகியனவாகும்.
- வனப்பகுதி கணக்கெடுப்புப் பணிகளானது WAPCOS எனும் அமைப்பிடம் வழங்கப் பட்டுள்ளது.
- WAPCOS என்பது ஜல்சக்தி அமைச்சகத்தின் கீழான ஒரு மினிரத்னா பொதுத் துறை நிறுவனமாகும்.
- LIDAR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்தக் கணக்கெடுப்பு இந்தியாவில் முதன்முறையாக மேற்கொள்ளப்படும் ஒரு தனித்துவமிக்க ரீதியிலான செயல்முறை ஆகும்.
- இந்தக் கணக்கெடுப்பானது வனப்பகுதிகளில் நீர் மற்றும் தீவன இருப்புகளை அதிகரிக்க உதவும், இதனால் மனித-விலங்கு மோதலானது குறையும்.
- LIDAR தொழில்நுட்பமானது 90% துல்லியத் தன்மை கொண்டதாகக் கண்டறியப்பட்டு உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்கான பத்தாண்டுகள் – ஐக்கிய நாடுகளின் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆகியவை இணைந்து 2021 முதல் 2030 வரையிலான சுற்றுச் சூழல் மறுசீரமைப்புக்கான பத்தாண்டுகள் என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டு உள்ளன.
- இது 1 மில்லியன் ஹெக்டேர் அளவிலான நிலங்களை மறுசீரமைப்பதற்கான தங்களது உறுதிப்பாட்டினைப் பூர்த்தி செய்யுமாறு உலக நாடுகளை அழைப்பு விடுத்துள்ளது.
- காலநிலை மாற்றம், இயற்கையின் அழிவு மற்றும் மாசுபாடு ஆகிய மூன்று ஆபத்துகளை உலகம் சந்தித்து வருகிறது என இந்த அறிக்கை கூறுகிறது.

UNITED NATIONS DECADE ON ECOSYSTEM RESTORATION 2021-2030

## தொழில்துறை சார்ந்த ஆழ்ந்த கார்பன் நீக்க முன்னெடுப்பு

INDUSTRIAL DEEP DECARBONISATION
AN INITIATIVE OF THE CLEAN ENERGY MINISTERIAL

- இந்திய அரசானது ஐக்கிய ராஜ்ஜிய அரசுடன் இணைந்து தொழில்துறை சார்ந்த ஆழ்ந்த கார்பன் நீக்க முன்னெடுப்பினை (Industrial Deep Decarbonization Initiative) தொடங்கியுள்ளது.
- இது தூய ஆற்றல் அமைச்சகத்தின் கீழ் 12வது முதன்மை ஆற்றல் அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டது ஆகும்.
- குறைவான கார்பன் சார்ந்த தொழில்துறை பொருட்களுக்கான தேவையை ஊக்குவிப்பதற்காக செயல்படும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் கூட்டமைப்பே தொழில்துறை சார்ந்த ஆழ்ந்த கார்பன் நீக்க முன்னெடுப்பு ஆகும்.
- இது இந்தியா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தினால் இணைந்து நடத்தப்படுகின்றது.
- தற்போதைய உறுப்பினர்களாக ஜெர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகளையும் இது உள்ளடக்கியுள்ளது.

## பனிப்பாறை உருகுதல் பற்றிய ஆய்வு – உலக வங்கி




- உலக வங்கியானது இமாலயம், காரகோரம் மற்றும் இந்து குஷ் மலைத்தொடர்கள் மீதான கருப்புக் கரிமத்தின் (கருப்பு கார்பன்) தாக்கம் குறித்து ஓர் ஆய்வினை மேற்கொண்டுள்ளது.
- உலகளாவிய சராசரி பனிக்கட்டிகளை விட இந்தப் பகுதிகளில் காணப்படும் பனிப் பாறைகள் மிக வேகமாக உருகுவதாக இந்த அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கைக்கு "இமாலயத்தின் பனிப்பாறைகள், பருவநிலை மாற்றம், கருப்புக் கரிமம் மற்றும் பிராந்திய நெகிழ்திறன்" எனத் தலைப்பிடப்ப ட்டுள்ளது.

***முக்கியத் தகவல்கள்***

- மனித நடவடிக்கைகளால் உருவான கருப்புக் கரிமங்களின் படிவுகள் (Black Carbon) ஆனது இமாலயப் பகுதிகளில் பனிப்பாறை மற்றும் பனிக்கட்டிகள் உருகும் வேகத்தை துரிதப் படுத்துகின்றன.
- இமாலயம், காரகோரம் மற்றும் இந்துகுஷ் மலைத்தொடர்களில் உள்ள பனிப் பாறைகள் பின்னடையும் வீதமானது மேற்கில் ஆண்டுக்கு 0.3 மீட்டராகவும் கிழக்கில் ஆண்டுக்கு 1.0 மீட்டராகவும் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## கார்பன் டை ஆக்சைடை நடுநிலையாக்கும் சிமெண்ட் ஆலை

- ஹீடல்பெர்க் என்ற ஒரு சிமெண்ட் நிறுவனமானது 2030 ஆம் ஆண்டிற்குள் ஸ்வீடன் நாட்டின் ஸ்லைட் என்ற இடத்திலுள்ள தனது தொழிற்சாலையை கார்பன் டை ஆக்சைடை நடுநிலையாக்கச் செய்யும் முதலாவது உலகின் முதல் சிமெண்ட் ஆலையாக மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

- இது கார்பன் பிடிப்புத் தொழில்நுட்பத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.
- ஹீடல்பெர்க் சிமெண்ட் நிறுவனமானது உலகின் இரண்டாவது ஒரு பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனமாகும்.

HEIDELBERGCEMENT

## Sea snot



- துருக்கியின் மர்மரா கடலில் சீ ஸ்நாட் எனும் பெரும்படலம் ஒன்று ஏற்பட்டுள்ளது.
- மர்மரா கடல் கருங்கடலை ஏஜியான் கடலுடன் இணைக்கின்றது.
- சீ ஸ்நாட் என்பது ஒரு கடலில் உருவாகும் சாம்பல் அல்லது பச்சைக் கசடு போன்ற மெலிதான ஓர் அடுக்காகும்.
- இது கடல்சார் சூழலுக்கு பெரும் ஆபத்தினை விளைவிக்கும்.
- பாசிகளில் ஊட்டச்சத்து மிகையாகும் போது இது உருவாகிறது.

## கீலிங் வளைவு

- 2021 ஆம் ஆண்டின் மே மாதத்தில் புவியின் வளிமண்டலத்திலுள்ள கார்பனின் அளவானது நவீனகால வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிலான உச்சத்தை எட்டி உள்ளது.
- இது கீலிங் வளைவினால் குறிப்பிடப் பட்டுள்ளது.
- கீலிங் வளைவானது வளிமண்டலத்திலுள்ள கார்பனின் அளவை அளவிடுவதற்கான ஒரு உலகளாவிய அளவுகோல் ஆகும்.
- இதனை உருவாக்கிய டாக்டர் சார்லஸ் டேவிட் கீலிங் அவர்களின் நினைவாக இதற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- இது புவியின் வளிமண்டலத்திலுள்ள கார்பன் டை ஆக்சைடின் செறிவினைக் குறிப்பதற்கு வேண்டி 1958 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வரும் வரைபடம் ஆகும்.
- இதற்கான அளவீடுகளானது ஹவாயிலுள்ள மௌனா லோவா ஆய்வகத்திலிருந்து பெறப் படுகின்றன.

## நிகர சுழியம் கார்பன் உமிழ்வு – இந்திய இரயில்வே

- ❖ இந்திய ரயில்வேயானது 2030 ஆம் ஆண்டுக்கு முன் நிகர சுழியம் என்ற கார்பன் உமிழ்வு நிலையை அடைதல் (net-zero carbon emission) என்பதை நோக்கிச் செயலாற்றி வருகிறது.
- ❖ Head on Generation எனும் மின்சார வழங்கீட்டு அமைப்பு, உயிரிக் கழிப்பறைகள், LED பல்புகள் மற்றும் தானியங்கி இரயில்பெட்டி சுத்திகரிப்பு மையங்கள் போன்ற பல நவீன முறைகளை இந்திய இரயில்வே செயல்படுத்தி வருகின்றது.
- ❖ தற்போது இந்திய ரயில்வேயானது நீண்டகால மற்றும் குறைவான கார்பன் செயல்பாடு எனும் நோக்குடன் கூடிய ஒரு குறைகார்பன் பசுமைப் போக்குவரத்து பிணையம் (low carbon green transportation network) மாதிரியான ஒரு பிரத்தியேக சரக்கு வழித்தடங்களை (கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய பிரத்தியேக சரக்கு வழித்தடம்) உருவாக்கி வருகிறது.
- ❖ மேலும் இது நிலையான மேம்பாட்டு இலக்குகளைக் கருத்தில் கொண்டு கட்டமைக்கப்பட்ட இரயில் நிலையங்களுக்கு பசுமைச் சான்றிதழையும் வழங்கிடச் செய்கிறது.

## ஆபரேசன் ஒலிவியா

- ❖ ஒடிசாவின் ஆலிவ் ரெட்லி (சிற்றாமைகள்) இன ஆமைகளைப் பாதுகாப்பதற்காக கடலோரக் கடற்படையானது சில சட்டங்களை விதித்து ஆபரேஷன் ஒலிவியா எனும் நடவடிக்கையைத் தொடங்கி உள்ளது.
- ❖ ஆபரேஷன் ஒலிவியா எனும் நடவடிக்கையானது 1980களின் முற்பகுதியில் இந்தியக் கடலோரக் காவற்படையினால் தொடங்கப்பட்டதாகும்.
- ❖ ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையானது ஆலிவ் ரெட்லி ஆமைகளைப் பாதுகாப்பதில் உதவுகிறது.

## நிலையான மேம்பாட்டு அறிக்கை – 2021

- ❖ நிலையான மேம்பாட்டு அறிக்கையானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுப் பிணையத்தின் நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டது.
- ❖ இந்தக் குறியீடானது நிலையான மேம்பாட்டிற்கான 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரல்களை ஒவ்வொரு நாடும் எவ்வாறு அமல்படுத்துகின்றன என்பதை ஒப்பிடுகிறது.
- ❖ இந்த ஆண்டு பின்லாந்து நாடானது இந்தக் குறியீட்டில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- ❖ நிலையான மேம்பாட்டு இலக்குக் குறியீட்டில் ஒரு நார்டிக் குழும நாடானது முதலிடம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இந்த அறிக்கையில் இந்தியா 120வது இடத்தைப் பெற்றுள்ளது.

## மே மாதத்தில் குறைவான வெப்பநிலை பதிவாகியுள்ளது

- ❖ 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவில் மே மாதத்தின் போது மிகக் குறைவான அளவிலான சராசரி அதிகபட்ச வெப்பநிலையானது பதிவாகியுள்ளது.
- ❖ ஒட்டு மொத்த இந்தியாவிலும் பதிவான சராசரி வெப்ப நிலையானது 34.18°C என இந்திய வானியல் ஆய்வுத் துறையின் தரவுகள் கூறுகின்றன.

- இது கடந்த 44 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகக்குறைவான வெப்பநிலையாகும், மேலும் இது 1901 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவான நான்காவது குறைவான வெப்பநிலை ஆகும்.
- மே மாதத்தில் பதிவான மிகக் குறைவான சராசரி அதிகபட்ச வெப்பநிலையானது 32.68 °C (1917 ஆம் ஆண்டு) ஆகும்.

## வறட்சி குறித்த சிறப்பு அறிக்கை 2021

- "பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த உலகளாவிய அறிக்கை : வறட்சி குறித்த சிறப்பு அறிக்கை 2021" என்று தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகத்தினால் வெளியிடப் படுகிறது.
- இது உறுப்பினர்கள் மாநாடு 26 எனப்படும் முக்கியத்துவம் வாய்ந்த ஐ.நா. பருவநிலை பேச்சுவார்த்தையின் ஓர் அங்கமாகும்.
- உறுப்பினர்கள் மாநாடு 26 ஆனது 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற உள்ளது.
- வறட்சியானது, எந்த ஓர் அவசர நடவடிக்கையும் எடுக்காவிட்டால் அடுத்த பெருந் தொற்றாக மாறக் கூடிய ஒரு மறைமுகமான உலக நெருக்கடியாக திகழும் என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த நூற்றாண்டில் சுமார் 1.5 பில்லியன் மக்கள் வறட்சியினால் நேரடியாக பாதிக்கப் பட்டுள்ளனர்.
- பொருளாதார இழப்பானது தோராயமாக 124 பில்லியன் டாலராக கணக்கிடப் பட்டு உள்ளது.




## கர்நாடக கடல்சார் (கடலோர) மண்டல மேலாண்மை ஆணையம்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகமானது கர்நாடக கடல்சார் மண்டல மேலாண்மை ஆணையத்தினை அமைப்பது குறித்த ஒரு அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பானது வெளியிடப் பட்டுள்ளது.

- இந்த ஆணையமானது 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- கடலோரச் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்காகவும் வேண்டி இந்த ஆணையமானது அமைக்கப்பட உள்ளது.
- கர்நாடகாவின் கடலோரக் கட்டுப்பாட்டு மண்டலத்தின் சுற்றுச்சூழல் மாசுபாட்டினை தடுத்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவையே இதன் முதன்மைப் பணிகள் ஆகும்.
- இந்த ஆணையத்தின் உறுப்பினர்களுடைய பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்புகள்

- பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்புகள் என்பது குறித்த ஒரு இரண்டு நாள் உச்சி மாநாட்டினை இந்தியா நடத்தியது.
- இந்த உச்சி மாநாட்டில் BRICS நாடுகள் பங்கேற்றன.
- இந்த சிறப்புமிக்க ஒரு மாநாடானது அந்தந்த நாடுகளின் பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்புகள் பற்றியும் அதனை எவ்வாறு அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்லலாம் என்ற கருத்துகள் பற்றியும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளமாகும்.
- இந்த இணையதள நிகழ்வானது இந்தியாவின் மிகப்பெரிய ஆற்றல் உற்பத்தி நிறுவனமும் உலகளாவிய ஆற்றல் நிறுவனமுமான NTPC நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- பசுமை ஹைட்ரஜனானது முழுவதுமாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களிலிருந்து பெறப் படுகிறது.

## ராம்கர் விஸ்தாரி வனவிலங்குச் சரணாலயம்

- ராம்கர் விஸ்தாரி வனவிலங்குச் சரணாலயமானது இராஜஸ்தானின் 4வது புலிகள் காப்பகமாக உருவெடுத்துள்ளது.
- இது இந்தியாவின் 52வது புலிகள் காப்பகமாகும்.
- இராஜஸ்தானிலுள்ள மற்ற 3 புலிகள் காப்பகங்கள் பின்வருமாறு
  - ரந்தம்போர் புலிகள் காப்பகம் – சவாய் மதோப்பூர்,
  - சரிஸ்கா புலிகள் காப்பகம் – அல்வார் மற்றும்
  - முகுந்த்ரா மலை புலிகள் காப்பகம் – கோட்டா

*குறிப்பு*

- புலிகள் திட்டமானது 1973 ஆம் ஆண்டில் 9 புலிகள் காப்பகத்துடன் தொடங்கப்பட்டது.
- இது மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறுகின்ற மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒரு நடப்புத் திட்டமாகும்.

# மாநிலச் செய்திகள்

## அங்கூர் திட்டம்

- மத்தியப் பிரதேச அரசானது சமீபத்தில் அங்கூர் என்ற திட்டத்தினை தொடங்க உள்ளதாக அறிவித்தது.
- இத்திட்டத்தின் கீழ் பருவ காலத்தின் போது செடிகளை நடும் குடிமக்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.
- மரச்செடிகளை நடுவதற்கான முன்னெடுப்பினை மேற்கொள்ளும் மக்களுக்கு அவர்களின் பங்களிப்பிற்காக பிராண வாயு விருது வழங்கப்படும்.

## மேற்கு வங்காளத் தலைமைச் செயலாளர் பிரச்சினை

- மேற்கு வங்காளப் பணிப் பிரிவின் 1987 ஆம் ஆண்டினைச் சேர்ந்த இந்தியக் குடிமைப் பணி அதிகாரியான பந்தியோபத்யாய் என்பவர் தமக்கு 60 வயது நிரம்புவதைத் தொடர்ந்து மே 31 ஆம் தேதியன்று பணியிலிருந்து ஓய்வு பெற இருந்தார்.
- எனினும் மத்திய அரசின் ஒப்புதலோடு அவரது பதவிக் காலம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.
- கோவிட்-19 பெருந்தொற்றினை அவர் கையாண்ட அனுபவத்தைக் கருத்தில் கொண்டு அவரது பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க அனுமதி வழங்கக் கோரி பிரதமருக்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடிதம் எழுதி இருந்தார்.

### *பிரச்சினை*

- பதவி நீட்டிப்பு வழங்கப்பட்ட நான்கு நாட்களுக்குப் பிறகு மேற்கு வங்கத் தலைமைச் செயலாளர் அலபன் பந்தியோபத்யாய் அவர்களை உடனடியாக அந்தப் பதவியிலிருந்து விடுவிக்குமாறு மாநில அரசிடம் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- மேலும் புதுடெல்லியில் வடக்குப் பிரிவில் உள்ள பணியாளர் மற்றும் பயிற்சித் துறையில் துறைக்கு உடனே வரவேண்டும் என்று பந்தியோபத்யாய் அவர்களுக்கு மத்திய அரசு ஆணையிட்டுள்ளது.

## பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் மராத்தா சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு

- கல்வி சேர்க்கை மற்றும் அரசு வேலைகளில் மராத்தா சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான மகாராஷ்டிராவின் ஒரு சட்டத்தினை அரசியலமைப்பிற்குப் புறம்பானது எனக் கூறி உச்சநீதிமன்றம் அதற்குத் தடை விதித்தது.
- பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் மராத்தா சமூகத்தினர் தற்போது பயன் பெறலாம் என மகாராஷ்டிர அரசு அறிவித்துள்ளது.
- இதற்கு முன்பாக, மகாராஷ்டிர மாநிலத்தில் மராத்தா இட ஒதுக்கீடு இருந்ததனால் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினராக (SEBC - Socially and Economically Backward Class) அங்கீகரிக்கப்பட்டு இருந்த மராத்தா சமூகத்தினர் பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீட்டின் பயனைப் பெற இயலாத நிலை இருந்தது.

## திறன் மேம்பாட்டுக் கல்லூரிகள்

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் ஒரு திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகத்தையும் 30 திறன் மேம்பாட்டுக் கல்லூரிகளையும் நிறுவுவதற்கு ஆந்திரப் பிரதேச அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- 25 பாராளுமன்றத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரு கல்லூரி நிறுவப்படும்.
- மாநிலம் முழுவதுமுள்ள சர்வதேச தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (IIIT) ஒவ்வொன்றிலும் ஒரு கல்லூரி நிறுவப்படும்.
- முதலமைச்சர் Y.S. ஜகன்மோகன் ரெட்டி அவர்களின் தொகுதியான புலிவெந்துலாவில் ஒரு கல்லூரி நிறுவப்படும்.

## காப்பு அமைச்சர்கள்

- அசாமின் முதலமைச்சர் ஹீமந்தா பிஸ்வ சர்மா அவர்கள் காப்பு அமைச்சர்களை அங்கு நியமித்துள்ளார்.
- அம்மாநிலத்தின் அனைத்து 34 மாவட்டங்களிலும் அரசுக் கொள்கைகள், நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் இதர பிற நலத் திட்டங்களின் அமலாக்கத்தினை மேற்பார்வையிடுவதற்காக இவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.
- அசாமின் அனைத்து 34 மாவட்டங்களுக்கும் சேர்த்து 13 காப்பு அமைச்சர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.
- மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் முன்னுரிமைத் திட்டங்கள் ஆகியவற்றினை அமல்படுத்துவதற்கான பொறுப்பு இவர்களுக்கு வழங்கப் பட்டு உள்ளது.

## இன்டிமிமஸ் ஜெயந்தி

- சமீபத்தில் சத்தீஸ்கரின் குர்ரா குகைகளில் 'இன்டிமிமஸ் ஜெயந்தி' எனும் புதிய வகை வெட்டுக்கிளி இனமானது கண்டறியப்பட்டது.
- நாட்டின் முன்னணி குகை ஆராய்ச்சியாளர்களுள் ஒருவரான பேராசிரியர் ஜெயந்தி பிஸ்வாஸ் அவர்களின் நினைவாக இந்தப் புதிய இனத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டு உள்ளது.



- இந்தப் புதிய வெட்டுக்கிளி இனமானது அரக்கோமிமஸ் சாசர், 1897 (Arachnomimus Saussure, 1897) என்ற இனத்தினைச் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த இனமானது 'இன்டிமிமஸ்' (Indimimus) எனும் துணை இனத்தைச் சேர்ந்ததாகும்.
- இந்தப் புதிய துணை இனத்தின் ஆண் வெட்டுக்கிளிகளால் ஒலியை உருவாக்க இயலாததோடு அதன் பெண் வெட்டுக்கிளிகளுக்கு காதுகளும் கிடையாது.

## கொரோனா அற்ற கிராமங்கள் போட்டி

- மகாராஷ்டிரா அரசானது 'கொரோனா அற்ற கிராமம்' எனும் ஒரு போட்டியினைத் தொடங்கியுள்ளது.
- இதன் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலிருந்தும் மூன்று கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் படும்.
- கோவிட்-19 மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த பணிகள் மற்றும் முயற்சிகளின் அடிப்படையில் இவை தேர்ந்தெடுக்கப் படும்.
- இந்தப் போட்டியானது "கொரோனா அற்ற எனது கிராமம்" எனும் முன்னெடுப்பின் ஒரு அங்கமாகும்.

## இன்டஸ் பெஸ்ட் மெகா உணவுப் பூங்கா

- மத்திய உணவுப் பதப்படுத்தும் தொழில் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அவர்கள் சத்தீஸ்கரில் இன்டஸ் பெஸ்ட் எனும் மெகா உணவுப் பூங்கா ஒன்றினை காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.
- இந்தப் பூங்காவானது சுமார் 5000 நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கும்.
- இது முதன்மை பதப்படுத்தும் மையங்கள் மற்றும் முதல்நிலை பதப்படுத்தும் மையங்கள் உள்ள பகுதிகளில் வாழும் சுமார் 25,000 விவசாயிகளுக்கு நன்மை பயக்கும்.

## GIFT – கோவா

- கோவா அரசானது "கோவாவின் எதிர்கால மாற்றத்திற்கான நிறுவனம்" (Goa Institution for Future Transformation) என்ற ஒன்றினை நிறுவியுள்ளது.
- இந்த நிறுவனமானது நிதி ஆயோக்கின் வழிவகையின் அடிப்படையில் இயங்கும்.
- இது கொள்கை வகுப்பு, அதன் உருவாக்கம் மற்றும் அமலாக்கம் போன்றவற்றில் அரசுக்கு உதவி அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை வழங்குகிறது.
- மேலும் இது நீடித்த வளர்ச்சி இலக்குகளைக் கண்காணித்தல், மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் போன்றவற்றிலும் உதவுகிறது.
- இது தன்னாட்சியைப் பெற்றிடுவதற்காக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சட்டப் பிரிவு 309 என்பதின் கீழ் இதற்கு சட்ட ஆதரவு அளிக்கப்படும்.

## பொருளாதார அறிவுத் திட்டம் – கேரளா

- கேரளாவில் ஒரே திட்டத்தின் கீழ் கல்வி பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான முயற்சிகளை அதிகரிக்கவும் அறிவு சார்ந்த தொழிலாளர்களுக்கு உதவி வழங்கவும் வேண்டி இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- கேரள மேம்பாட்டு மற்றும் புத்தாக்க உத்தி மன்றமானது இத்திட்டத்திற்குத் தலைமை தாங்குகிறது.
- திட்டத்தின் அமலாக்கத்திற்காகவும் நிதிப் பயன்பாட்டு நோக்கங்களுக்காகவும் வேண்டி "அறிவுப் பொருளாதார நிதி" என்ற நிதியானது உருவாக்கப்படும்.

## சர்வதேச கடல்சார் சேவைத் தொகுப்பு – GIFT நகரம்

- குஜராத் கடல்சார் வாரியமானது GIFT நகரில் நாட்டின் முதலாவது சர்வதேச கடல்சார் சேவைத் தொகுப்பினை அமைக்க உள்ளது.
- இது ஒரே புவிப்பரப்பில் அருகருகே அமைந்த துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, தளவாட சேவை வழங்குநர் அமைப்பு மற்றும் அரசுக் கட்டுப்பாட்டு அமைப்பு போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு பிரத்தியேகச் சுற்றுச்சூழலமைப்பாக இருக்கும்.
- GIFT நகரமானது இந்தியாவில் செயல்பாட்டிலிருக்கும் முதலாவது பொலிவுறு நகரம் மற்றும் சர்வதேச நிதிச் சேவை மையமாகும்.

## அசாம் விருதுகள்

- சமூகத்திற்கு ஆற்றிய முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பிற்காக ஆண்டுதோறும் ஒருவருக்கு அசோம் ரத்னா விருதானது வழங்கப்பட இருக்கின்றது.
- மேலும் அசோம் பிபூசன், அசாம் பூசன் மற்றும் அசோம் ஸ்ரீ ஆகிய விருதுகளை உருவாக்குவதற்கும் அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- இந்த விருதானது ஒவ்வோர் ஆண்டும் முறையே 3 நபர், 5 நபர் மற்றும் 10 நபர்களுக்கு வழங்கப்படும்.
- இந்த விருதுகளோடு சேர்த்து பணத்தொகையும் வழங்கப்படும்.
    - அசோம் ரத்னா விருதுடன் 5 லட்சம் ரூபாய்,
    - அசோம் பிபூசன் விருதுடன் 3 லட்சம் ரூபாய்,
    - அசோம் பூசன் விருதுடன் 2 லட்சம் ரூபாய் மற்றும்
    - அசோம் ஸ்ரீ விருதுடன் 1 லட்சம் ரூபாய்.

***இதர முடிவுகள்***

- இலக்கிய எழுத்தாளர் முனைவர் ஹோமென் போர்கோஹைன் அவர்களது பிறந்த நாளன்று (டிசம்பர் 07) அவருடைய பெயரில் இலக்கிய ஓய்வூதியமானது வழங்கப் படும்.
- அர்ஜுன் போகேஷ்வர் பரூவா அவர்களின் பிறந்த நாளன்று (செப்டம்பர் 03) அவருடைய பெயரில் விளையாட்டுத் துறை ஓய்வூதியமானது வழங்கப்படும்.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 17 ஆம் தேதியன்று ஆர்டிஸ்டே விருதானது வழங்கப் படும்.

## தெஹிங் பட்காய் வனவிலங்குச் சரணாலயம்

- தெஹிங் பட்காய் வனவிலங்குச் சரணாலயத்தை அம்மாநிலத்தின் 7வது தேசியப் பூங்காவாக அறிவிப்பதற்கு அசாம் அரசு முடிவு செய்துள்ளது.
- இது தெஹிங் பட்காய் மழைக் காடுகள் எனவும் பிரபலமாக கூறப்படுகிறது.
- தற்போது அசாம் மாநிலமானது நாட்டில் அதிக எண்ணிக்கையிலான தேசியப் பூங்காக்களை (National parks) கொண்ட இரண்டாவது மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- மத்தியப் பிரதேசம் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகள் ஆகியவற்றில் தலா ஒன்பது தேசியப் பூங்காக்கள் உள்ளன.

## நிகர ஆற்றல் நடுநிலைத் தன்மை நிலை – பெங்களூரு விமான நிலையம்

- கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையமானது 2020-21 ஆம் நிதி ஆண்டில் நிகர ஆற்றல் நடுநிலைத் தன்மை நிலையை அடைந்துள்ளது.
- பெங்களூரு சர்வதேச விமான நிலையத்தினால் 2020-21 ஆம் நிதி ஆண்டில் கிட்டத்தட்ட 22 லட்சம் அலகுகள் என்ற அளவிற்கு ஆற்றலைச் சேமிக்க முடிந்தது.
- இங்கு சூரிய ஆற்றல் நிறுவப் பட்டதன் மூலம் இந்த நிலையினை அடைய முடிந்தது.

## மின்னணு அடையாள அட்டைகள்

- பஞ்சாப் அரசானது தனது அதிகாரிகள்/ஊழியர்களுக்கு மின்னணு அடையாள அட்டைகளை (eIDs) வழங்கத் தொடங்கியுள்ளது.
- மின்னணு அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் முதல் மாநிலம் இதுவேயாகும்.
- இவற்றுள் தொடர்பற்ற அருகாமைத் தகவல் தொடர்பு தொழில்நுட்பமானது (Near Field Communication – NFC) பொருத்தப் பட்டுள்ளது.

## பாரம்பரிய மரம் – திட்டம்




- மகாராஷ்டிராவில் 'பாரம்பரிய மரம்' எனும் திட்டத்தினை அமலாக்குவதற்கான செயல்திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தச் செயல்திட்டமானது ஆதித்யா தாக்கரே தலைமையிலான சுற்றுச்சூழல் துறையினால் முன்வைக்கப் பட்டது.
- இது நகர்ப்புறங்களில் உள்ள 50 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பழமையான மரங்களை பாதுகாப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த செயல்திட்டமானது 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா (நகரப்புறப்பகுதிகள்) மரப் பாதுகாப்பு மற்றும் வளங்காப்புச் சட்டத்தினைத் திருத்தி அமைக்கிறது.

## தூசிப்படலக் கருவாக்கம்

- வளிமண்டலத்தில் 3 நானோமீட்டருக்கும் குறைவான அளவிலான தூசிப்படலத் துகள்கள் அடிக்கடி உருவாவதை ஹைதராபாத் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது AIRMODUS நானோ நீர்மமாக்க உட்கரு முகப்பினை (AIRMODUS nano Condensation Nucleus Counter) கொண்டு அளவிடப்பட்டது.
- 3 நானோமீட்டர் அளவிற்கும் குறைவான அளவிலான சிறிய மூலக் கூறுகளின் தொகுப்புகள் உருவாவது தொழில்நுட்ப ரீதியாக தூசிப்படலக் கருவாக்கம் என அழைக்கப் படுகிறது.

## இராஜ பர்பா – ஒடிசா

- ஒடிசாவில் இராஜ பர்பா திருவிழா கொண்டாடப்பட்டது.
- இது தனித்துவம் வாய்ந்த மூன்று நாள் திருவிழாவாகும்.
- இது பருவமழையின் தொடக்கத்தின் போது கொண்டாடப்படுகிறது.
- இந்த சமயத்தில் தான் பூமித்தாய் (அ) பூமாதேவி அவர்களுக்கு மாதவிடாய் காலம் ஏற்படுவதாக நம்பப்படுகிறது.
- இதில் நான்காம் நாளானது ‘சுத்திகரிப்புக் குளியல்’ நாளாகும்.
- இந்தத் திருவிழாவில் பல்வேறு வகையான கேக்குகள் படையலாக்கப்படும்.

## ஜல்கான் வாழைப்பழம்

- ஜல்கான் வாழைப்பழங்கள் துபாய் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
- ஜல்கான் வாழைப்பழமானது மகாராஷ்டிராவின் ஜல்கான் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப் படும் புவிசார் குறியீடு பெற்ற ஒரு வேளாண் பொருளாகும்.
- ஜல்கான் மாவட்டமானது வேளாண் ஏற்றுமதிக் கொள்கையின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட ஒரு வாழை உற்பத்தித் தொகுப்பு ஆகும்.
- இது மகாராஷ்டிராவின் “வாழை நகரம்” எனவும் அழைக்கப்படுகிறது.

## ஸ்டைகர்க்டஸ் கேரளென்சிஸ்

- கேரளாவில் ‘ஸ்டைகர்ஸ்டஸ் கேரளென்சிஸ்’ எனும் புதிய இனமானது கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த நுண்ணிய மற்றும் கடினமான நீர்க்கரடி (டார்டிகிரேட்ஸ்) விலங்கினத்திற்கு கேரளாவின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.
- டார்டிகிரேட்ஸ் எனும் இந்த சிறிய விலங்கு இனமானது ‘நீர்க்கரடி’ மற்றும் ‘பாசிப் பன்றி’ என அழைக்கப் படுகின்றது.
- 1773 ஆம் ஆண்டில் ஜெர்மானிய விலங்கியல் நிபுணரான ஜோஹன் ஆகஸ்ட் எப்ரெய்ம் கோயஸ் என்பவர் இதனைப் பற்றி முதன்முதலில் விளக்கிக் கூறினார்.

## முதலை இனங்கள் – ஒடிசா




- ஒடிசா மாநிலமானது முதலையினத்தின் மூன்று வகை இனங்களையும் கொண்ட ஒரே மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- அவை,
  - மகாநதியின் சட்கோசியா நதியில் உள்ள நன்னீர் கங்கைநதி முதலைகள்,
  - பிதர்கனிகா தேசியப் பூங்காவிலுள்ள சதுப்பு நில முதலைகள் (மக்கர்) மற்றும்
  - பிதர்கனிகா தேசியப் பூங்காவிலுள்ள உப்புநீர் முதலைகள்
- 1975 ஆம் ஆண்டில் ஒடிசா மாநிலத்தின் ஆறுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு முதன்முதலாக கங்கை நதி முதலைகளின் (அருகி வரும் இனங்கள்) முட்டையிடும் தளங்கள் கண்டறியப் பட்டுள்ளன.

## மரபணு மாற்றப்பட்ட பருத்தி வகையின் பயன்கள் – பஞ்சாப்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண் விரிவாக்கப் பிரிவின் நிதியுதவி பெற்ற ஓர் ஆய்வினை இந்தியாவின் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் மேற்கொண்டு உள்ளனர்.
- இது "ஒருங்கிணைந்த பூச்சித் தடுப்பு மேலாண்மைத் தொழில்நுட்பத்தின் தாக்க மதிப்பீடு" எனும் கூடுதல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகும்.
- இந்த ஆய்வின்படி,
  - மிக அதிக அபாயகரமான மற்றும் ஆபத்தான பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு காலப் போக்கில் குறைந்துள்ளது.
  - பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டுடன் தொடர்புடைய செலவினங்களும் வெகுவாக குறைந்துள்ளன.
  - 2015 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 13 ஆண்டுகளில் பருத்தியின் விளைச்சல் நிலையாக உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.
- பி.டி. பருத்தி என்பது பூச்சி எதிர்ப்புத் திறனுடைய மரபணு மாற்றப்பட்ட பருத்தி வகை ஆகும்.
- பி.டி.நச்சுகள் ஆனது அந்துப் பூச்சிகள், வண்ணத்துப்பூச்சிகள், பருத்திப் பூ (பந்து) புழுக்கள், ஈக்கள் மற்றும் வண்டுகள் ஆகியவற்றிற்கு உயிர்க்கொல்லியாக செயல்படும்.

## மரபணு மாற்றப்பட்ட ரப்பர் - அசாம்

- ரப்பர் வாரியமானது அசாம் மாநிலத்தில் உலகின் முதலாவது மரபணு மாற்றப்பட்ட ரப்பர் மரத்தின் களச் சோதனையைத் தொடங்கியுள்ளது.
- இந்த மரபணு மாற்றப்பட்ட ரப்பரானது கோட்டயத்தின் புதுப்பள்ளியிலுள்ள இந்திய ரப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் உயிரித் தொழில்நுட்ப ஆய்வகத்தில் உருவாக்கப் பட்டது.
- இது குவஹாத்தியிலுள்ள ரப்பர் வாரியத்தின் சாருத்ரி ஆராய்ச்சிப் பண்ணையில் நடப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், கேரளாவில் மரபணு மாற்றப்பட்ட ரப்பரை நடுவதற்கான ஒரு களச் சோதனைக்கு கேரள அரசு அனுமதி தர மறுத்து விட்டது.

## அதிக எண்ணிக்கையிலான குழந்தைகளைப் பெறுவதற்கு சலுகை – மிசோரம்

- மிசோரம் மாநிலத்தின் விளையாட்டுத் துறை அமைச்சரான ராபர்ட் ரோமாவியா ராய்ட் அவர்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதற்கு 1 லட்சம் ரூபாயினை ஊக்கத் தொகையாக அறிவித்துள்ளார்.
- அந்த அமைச்சரின் தொகுதியில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு வாழும் பெற்றோருக்கு 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.
- மக்கள்தொகை ரீதியாக அளவில் மிகச் சிறியதாக உள்ள மிசோ சமூகத்தினரிடையே மக்கள்தொகை வளர்ச்சியை அதிகரிப்பதற்காகவே வேண்டி இந்த அறிவிப்பானது வெளியிடப் பட்டுள்ளது.

## மிருதுவான ஓடுடைய கருப்பு நிற நன்னீர் ஆமை



- ஹயகிரிவா மாதவா ஆலயக் குழுவானது (அசாம்) இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அசாம் மாநில மிருகக் காட்சி சாலை மற்றும் தாவரவியல், பூங்கா மற்றும் காமரூப் மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது அரிதான மற்றும் மிருதுவான ஓடுடைய கருப்புநிற நன்னீர்வகை ஆமையை பாதுகாப்பதற்கான ஒப்பந்தமாகும்.
- மேலும் 2030 ஆம் ஆண்டுக்குள் (நில்சோனியா நிக்ரிகன்ஸ்) இந்த ஆமைகளின்

எண்ணிக்கையை குறைந்த பட்சம் 1000 ஆக உயர்த்துவதற்கான 2030 ஆம் ஆண்டு திட்ட ஆவணமும் வெளியிடப்பட்டது.

- இந்த ஆமைகள் அசாமில் பிரம்மபுத்திரா நதியின் வடிகால் பகுதிகளிலும் வங்காளதேசம் மற்றும் வடகிழக்கு இந்தியாவின் கோயில் குளங்களிலும் காணப் படுகின்றன.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பானது 2021 ஆம் ஆண்டில் இந்த ஆமைகளை 'மிகவும் அருகி வரும் இனங்கள்' எனும் பட்டியலில் சேர்த்துள்ளது.

## நிமோகோகல் துணைத் தடுப்பு மருந்து

- ஒடிசா அரசானது அனைவருக்கும் தடுப்பூசி வழங்கல் என்ற திட்டத்தின் கீழ் நிமோகோகல் துணைத் தடுப்பு மருந்தினை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்தானது சீரம் இந்திய நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது பில் மற்றும் மெலிண்டா அறக்கட்டளையுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

## காவல் ப்ளஸ் திட்டம்

- கேரளாவின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையானது காவல் ப்ளஸ் திட்டத்தினை மேலும் 5 மாவட்டங்களில் விரிவுபடுத்துவதற்கு முடிவு செய்து உள்ளது.
- பாதுகாப்பு மற்றும் ஆதரவுத் தேவையுள்ள குழந்தைகளுக்கும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முழுமையான ஆதரவை வழங்கச் செய்வதற்காக வேண்டி இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- இதற்கு முன்பு இந்தத் திட்டமானது திருவனந்தபுரம் மற்றும் பாலக்காடு ஆகிய மாவட்டங்களில் அமல்படுத்த ப்பட்டது.
- தற்போது எர்ணாகுளம், இடுக்கி, மலப்புரம், கோழிக்கோடு மற்றும் கண்ணூர் ஆகிய மாவட்டங்களில் அமல்படுத்தப்படும்.

## ஆந்திரப் பிரதேச குடிமைப் பணி ஆணைய சீர்திருத்தம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது அம்மாநில அரசுப் பணியின் அனைத்து வருங்காலப் பணிகளுக்கும் நேர்காணல் செயல்முறைகளை நீக்குவதற்கான ஒரு அரசு முறை உத்தரவினை வெளியிட்டுள்ளது.
- இதில் நிர்வாக அதிகாரிகள் பதவிகளும் அடங்கும்.
- இருப்பினும், துணை ஆட்சியர், துணைக் காவல் கண்காணிப்பாளர், வணிக வரி அதிகாரி, வட்டாரப் போக்குவரத்து அதிகாரி போன்ற பதவிகளுக்கான எழுத்துத் தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் தக்க வைக்கப் பட்டுள்ளன.
- இந்தச் சீர்திருத்தங்களானது அதன் சிறப்புத் தலைமைச் செயலாளர் J. சத்திய நாராயணன் தலைமையிலான ஒரு உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அமல்படுத்தப் பட்டுள்ளன.

## ஹெமிஸ் திருவிழா

- லடாக்கின் லேவில் புகழ்பெற்ற இரண்டு நாள் அளவிலான ஹெமிஸ் திருவிழா கொண்டாடப் பட்டது.
- இது ஹெமிஸ் செஸ்-சூ எனவும் பிரபலமாக அழைக்கப் படுகிறது.
- இது குரு பத்மசம்பவா அவர்களுடைய பிறந்த நாளினை நினைவு கூறும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- குரு பத்மசம்பவா இமாலயம் முழுவதும் வஜ்ரயானா புத்தப் பாரம்பரியத்தை அறிமுகப் படுத்தி அதனைப் போற்றி வளர்த்தவராவார்.
- இவர் இரண்டாம் புத்தர் எனவும் பிரபலமாக அறியப்படுகிறார்.



## டிராகன் பழங்களின் ஏற்றுமதி

- டிராகன் பழங்கள் அடங்கிய முதல் சரக்குப் பெட்டகமானது சமீபத்தில் துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இந்தியாவில் டிராகன் பழமானது கமலம் எனவும் அழைக்கப் படுகிறது.
- ஏற்றுமதி செய்வதற்கான டிராகன் பழங்கள், மகாராஷ்டிராவின் சாங்கிலி மாவட்டத்திலுள்ள தாடாசர் கிராம விவசாயிகளிடமிருந்துப் பெறப்பட்டது.
- டிராகன் பழமானது தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த காட்டு கள்ளிச் செடியினத்தின் ஒரு பழமாகும்.
- இது அப்பகுதிகளில் பிட்டயா அல்லது பித்தஹாயா என அழைக்கப்படுகிறது.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 3 இந்திய அமைதிகாப்புப் படையினருக்கு மரியாதை – ஐக்கிய நாடுகள் அமைப்பு

- கார்போரல் யுவ்ராஜ் சிங், பொதுமக்கள் அமைதிகாப்புப் படைவீரர் இவான் மைக்கேல் பிகார்டோ மற்றும் மூல்சந்த் யாதவ் ஆகியோருக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் மதிக்கத் தக்க விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- கார்போரல் யுவ்ராஜ் சிங் தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதி காப்புத் திட்டப் பணியில் பணியாற்றினார் (United Nations Mission in South Sudan – UNMISS).
- இவான் மைக்கேல் பிகார்டோ அவர்கள் UNMISS அமைப்பின் பொது மக்கள் அமைதி காப்புப் படை வீரராக இருந்தார்.
- மூல்சந்த் யாதவ் ஈராக்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டத்துடன் தொடர்பு உடையவராவார்.



## உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் சிறப்பு அங்கீகார விருது




- மத்திய சுகாதார அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்களுக்கு உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் சிறப்பு அங்கீகார விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பாக அவர் ஆற்றிய சாதனைகளுக்காக இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- மின்னணு சிகரெட்டுகள் மற்றும் குறை வெப்பநிலை புகையிலைப் பொருட்களை (heated tobacco products) தடை செய்வதற்காக 2019 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தேசியச் சட்டத்தில் டாக்டர். ஹர்ஷ் வர்தன் அவர்களின் தலைமை முக்கியமான ஒன்றாகும்.

## Savarkar : A Contested Legacy (1924 – 1960)

- வரலாற்று ஆசிரியரும் நூலாசிரியருமான விக்ரம் சம்பத் என்பவர் வீர் சாவர்க்கர் அவர்களின் வாழ்வு மற்றும் சேவைகள் குறித்த புத்தகத்தின் இரண்டாம் பாகத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்தப் புத்தகத்திற்கு "Savarkar : A Contested Legacy (1924 – 1960)" எனப் பெயரிடப் பட்டு உள்ளது.
- இந்தப் புத்தகத்தினை பென்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா எனும் பதிப்பகமானது வெளியிட உள்ளது.
- "Savarkar : Echoes from a Forgotten Past" எனும் முதல் பாகமானது 2019 ஆம் ஆண்டில் வெளியானது.
- இது 1883 ஆம் ஆண்டில் அவர் பிறந்தது முதல் 1924 ஆம் ஆண்டில் சிறையிலிருந்து நிபந்தனை விடுதலை பெற்றது வரையிலான சாவர்க்கர் அவர்களின் வாழ்க்கையைப் பற்றி கூறுகிறது.
- இரண்டாம் பாகமானது 1924 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையிலான (இறந்த ஆண்டு) விநாயக் தாமோதர் சாவர்க்கர் அவர்களின் வாழ்வு மற்றும் சேவைகளைப் பற்றி வெளிக் கொணரும்.




## சர்வதேச டப்ளின் இலக்கிய விருது 2021

- மெக்சிகோவைச் சேர்ந்த எழுத்தாளரான வலேரியா லூயிசெல்லி அவர்கள் "Last Children Archieve" எனும் படைப்பிற்காக 2021 ஆம் ஆண்டின் சர்வதேச டப்ளின் இலக்கிய விருது என்ற விருதினை வென்றுள்ளார்.
- 1994 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த விருதானது உலகின் செல்வாக்கு மிக்க இலக்கிய விருதுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- மேலும் இவர் இதே புத்தகத்திற்காக 2020 ஆம் ஆண்டில் ராத்போன்ஸ் ஃ போலியோ என்ற பரிசினை வென்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.




## ஆண்டின் சிறந்த வணிகப் புத்தகத்திற்கான சர்வதேச விருது – 2021

- நிதின் ராகேஷ் மற்றும் ஜெரீ விண்ட் ஆகிய எழுத்தாளர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான "ஆண்டின் சிறந்த வணிகப் புத்தகத்திற்கான" சர்வதேச விருதினை வென்றுள்ளனர்.
- நோஷன் பிரஸ் என்ற பதிப்பகத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட 'Transformation in times of crisis' எனும் புத்தகத்திற்காக இவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- ஆண்டின் சிறந்த தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்காக கோல்டு ஸ்டீவி விருது பெற்ற எழுத்தாளர் நிதின் ராகேஷ் அவர்கள், 2017 ஆம் ஆண்டு முதல் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான mphasis என்ற நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் நிர்வாக இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார்.
- இப்புத்தகத்தின் இணை ஆசிரியர் ஜெர்ரி விண்ட் அவர்கள் சர்வதேச அளவில் ஒரு புகழ்பெற்ற கல்வியாளர் ஆவார்.



## ஜக்ஜித் பவதியா – சர்வதேசப் போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர்

- ஜக்ஜித் பவதியா அவர்கள் சர்வதேசப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் இந்தியாவின் போதைப் போருள் கட்டுப்பாட்டு ஆணையராகப் பணியாற்றிய ஓய்வு பெற்ற இந்திய வருவாய்ப் பணி அதிகாரி (சுங்கம்) ஆவார்.
- இவர் வியன்னாவில் அமைந்துள்ள இந்த அமைப்பிற்குத் தலைமை தாங்க உள்ள முதல் இந்தியர் ஆவதோடு இந்தப் பொறுப்பினை ஏற்ற இரண்டாவது பெண்மணியும் ஆவார்.
- சர்வதேசப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியமானது ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகளின் மூன்று சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டு உடன்படிக்கைகளுக்கு இணங்கி செயல்படுகின்றனவா என்பதையும் சர்வதேசப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்பாட்டினையும் சேர்த்து கண்காணிக்கிறது.



## "At Night All Blood is Black"

- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நாவலாசிரியரான டேவிட் டியூப் அவர்களுக்கு "At Night All Blood is Black" எனும் புத்தகத்திற்காக மதிப்புமிக்க "சர்வதேச புக்கர் பரிசு" வழங்கப் பட்டுள்ளது.
- பாரீசில் பிறந்த இவர் இந்தப் பரிசினை வென்ற முதல் பிரெஞ்சு நாட்டவர் ஆவார்.




- இந்தப் புத்தகமானது முதன்முறையாக 2018 ஆம் ஆண்டில் பிரஞ்சு மொழியில் வெளியானது.

- இந்தப் புத்தகத்தினை மொழிபெயர்த்த அனா மோஸ் சோவாகிஸ் அவர்களுக்கு இந்தப் பரிசுத் தொகையான 50000 யூரோக்களில் (70,850 டாலர்) பாதியளவுத் தொகையானது வழங்கப் பட்டது.

## 2021 ஆம் ஆண்டிற்கான நேச்சர் TTL புகைப்பட விருதுகள்

- கேரளாவைச் சேர்ந்த தாமஸ் விஜயன் என்பவருக்கு 2021 ஆம் ஆண்டின் நேச்சர் TTL புகைப்பட விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.
- இது அவர் புகைப்படமெடுத்த, மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒராங்குட்டான் என்ற ஒரு குரங்கின் புகைப்படத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.
- "The World is Going Upside Down" என இந்தப் புகைப்படத்திற்குத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- 8000 போட்டியாளர்களின் பட்டியலிலிருந்து விஜயன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- நேச்சர் TTL என்பது உலகின் முன்னணி இணையதள இயற்கை சார்ந்த புகைப்பட மூலாதாரத் தளமாகும்.



## M. அனந்த கிருஷ்ணன் மறைவு

- இவர் அண்ணாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் கான்பூரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினுடைய ஆளுநர் வாரியத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.



- இவர் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பில் தலைமை அறிவியல் அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.
- இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்வதற்கு திமுக அரசு மேற்கொண்ட முடிவின் பின்னணியில் இருந்த நாயகன் என்று திரு. அனந்த கிருஷ்ணன் அவர்களை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் புகழ்ந்துரைத்து உள்ளார்.

## BAFTA தொலைக்காட்சி விருதுகள் 2021

- மைக்கேலா கோயல் (Michaela Coel) என்பவர் சிறந்த நடிகைக்கான விருதினையும் 'I May Destroy You' எனும் அவரது நிகழ்ச்சிக்காக சிறந்த குறுந்தொடர் விருதினையும் வென்றுள்ளார்.
- Normal People எனும் தொடரில் நடித்ததற்காக பால் மெஸ்கல் (Paul Mescal) என்பவருக்கு சிறந்த நடிகர் விருதானது வழங்கப்பட்டது.
- BAFTA தொலைக்காட்சி விருதினை வென்றவர்களின் பெயர்ப் பட்டியலானது லண்டனில் உள்ள டெலிவிஷன் சென்டரில் (தொலைக்காட்சி ஒளிபுரப்பு மையம்) அறிவிக்கப் பட்டது.
- BAFTA தொலைக்காட்சி விருது (அ) பிரிட்டிஷ் அகாடெமி தொலைக்காட்சி விருதுகளானது 1955 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

## 2020 ஆம் ஆண்டின் 50 மிகவும் விரும்பத்தகு மகளிர் பட்டியல் - டைம்ஸ் இதழ்

- டைம்ஸ் இதழானது தனது 2020 ஆம் ஆண்டின் 50 மிகவும் விரும்பத்தகு மகளிர் பட்டியலை சமீபத்தில் வெளியிட்டது.
- இது பல்வேறு துறைகளில் திறம்படச் செயலாற்றும் 40 வயதிற்குட்பட்ட பெண்களை சில பரிமாணங்கள் அடிப்படையில் பட்டியலிடுகிறது.
- டைம்ஸ் இதழின் இந்தப் பட்டியலில் ரியா சக்கரவர்த்தி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- சுசாந்த்சிங் ராஜ்புத் என்ற நடிகரின் திடீர் மறைவு தொடர்பான சர்ச்சைகளின் காரணமாக கடந்த ஆண்டில் பெரும்பாலான செய்திகளில் இவரது பெயர் அடிபட்டுக் கொண்டு இருந்தது.
- 2020 ஆம் ஆண்டு பிரபஞ்ச அழகிப் போட்டியில் மூன்றாமிடம் பெற்ற அட்லின் கேஸ்டிலினோ அவர்கள் இப்பட்டியலில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.
- நடிகை திசா பதானி, கியாரா அத்வானி மற்றும் தீபிகா படுகோன் ஆகியோர் இதில் முறையே மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றனர்.

## PEN Pinter பரிசு

- ஜிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த நாவலாசிரியரான சிட்சி டங்கரேம்ப்கா என்பவருக்கு PEN Pinter என்ற பரிசானது வழங்கப்பட்டுள்ளது.
- கிளர்ச்சி சமயங்களில் கூட பல முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களைச் சேகரித்து அதனைப் பரப்புரை செய்த திறமைக்காக வேண்டி அவருக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.

- டங்கரேம்ப்கா 'This Mournable Body' எனும் தனது படைப்பிற்காகவும் வேண்டி 2020 ஆம் ஆண்டு புக்கர் பரிசிற்கு அவர் பரிந்துரைக்கப்பட்டார்.
- 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட PEN Printer பரிசானது நோபல் பரிசு பெற்ற நாடக கதை ஆசிரியரான ஹரோல்டு பின்டரின் நினைவாக வழங்கப்படுகிறது.

## வாட்டர் பரியல் திரைப்படத்திற்கு விருது




- அருணாச்சலப் பிரதேசத்தின் வாட்டர் பரியல் என்ற திரைப்படத்திற்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதானது வழங்கப் பட்டு உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு 67வது தேசிய விருது விழாவில் இந்தத் திரைப்படத்திற்கு இந்த விருதானது வழங்கப் பட்டது.
- இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் சாந்தனு சென் என்பவராவார்.
- இத்திரைப்படத்தின் தயாரிப்பு நிறுவனமானது ஏஎம் டெலிவிசனாகும்.
- இது சபா கோட்டா மனு (Saba Kota Manuh) எனும் ஒரு அசாமியப் புதினத்தைத் தழுவி உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதினத்தின் எழுத்தாளர் யேசீ டோர்ஜீ தோங்சி (Yeshe Dorjee Thongchi) என்பவர் ஆவார்.

## வீரேந்திர நானாவதி

- சர்வதேச நீச்சல் போட்டிக் கூட்டமைப்பினுடைய (International Swimming Federation – FINA) வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் இவரே ஆவார்.
- இவர் 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான பதவிக் காலத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இவர் தற்போது இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவராகவும் இந்திய நீச்சல் போட்டிக் கூட்டமைப்பின் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார்.

- இவர் இந்திய நீச்சல் போட்டிக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளரும் ஆவார்.
- மேலும் இவர் FINA தொழில்நுட்ப நீச்சல் போட்டிக் குழுவின் செயலாளரும் ஆவார்.
- இவர் ஆசிய நீச்சல் போட்டிக் கூட்டமைப்பின் மூத்த துணைத் தலைவரும் ஆவார்.



## 2021 ஆம் ஆண்டு ஐக்கிய ராஜ்ஜிய ஆசியத் திரைப்பட விழா

- 2021 ஆம் ஆண்டு ஐக்கிய ராஜ்ஜிய ஆசியத் திரைப்பட விழாவில் (UK Asian Film Festival - UKAFF) இந்திய நடிகை திலோத்தமா சோமே என்பவருக்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப் பட்டுள்ளது.
- 'Raahgir : The Wayfarers' எனும் திரைப்படத்தில் அவருடைய சிறந்த நடிப்பிற்காக வேண்டி அவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் கௌதம் கோசே என்பவராவார்.
- 2021 ஆம் ஆண்டு UKAFF விழாவானது அதன் 23வது வருடாந்திர நிகழ்வாகும்.
- இதில் திரைப்பட இயக்குநர் கௌதம் கோசே அவர்களுக்கு சிறந்த இயக்குநருக்கான விருதானது வழங்கப்பட்டது.

## ஆசிய பசிபிக் உற்பத்தித்திறன் சாம்பியன் விருது

- குஜராத் கூட்டுறவுப் பால்பொருள் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பின் (அமுல்) மேலாண்மை இயக்குநரான R.S. சோதி அவர்களுக்கு ஆசிய பசிபிக் உற்பத்தித்திறன் சாம்பியன் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது டோக்கியோவின் ஆசிய உற்பத்தித் திறன் அமைப்பினால் வழங்கப் பட்டது.
- மேம்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் திறன்மிகு பால் விநியோகம் போன்றவற்றை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- கடந்த 20 ஆண்டுகளில் இந்த மதிப்புமிக்க விருதைப் பெற்ற முதல் இந்தியர் இவரே ஆவார்.

## புலிட்சர் பரிசு – 2021




- 2021 ஆம் ஆண்டிற்கான புலிட்சர் பரிசு சமீபத்தில் வழங்கப்பட்டது.
- இவ்விருது செய்தித் தாள்கள், பத்திரிகை, இணையதள பத்திரிகை, இலக்கியம் மற்றும் இசைத் தொகுப்பு ஆகிய துறைகளில் அமெரிக்க நாட்டிற்கு உள்ளாகவே நிகழ்த்தப் பட்ட சாதனைகளுக்காக வழங்கப் படும் ஒன்றாகும்.
- இது 1917 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டு கொலம்பியா பலகலைக் கழகத்தினால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பத்திரிக்கையாளரான மேகா ராஜகோபாலன் என்பவர் அமெரிக்காவின் இந்த உயரியப் பத்திரிக்கையாளர் விருதினை வென்று உள்ளார்.
- இவ்விருதினை வென்ற மற்ற இரு முக்கியப் பத்திரிக்கையாளர்கள் டாம்பே பே டைம்ஸ் இதழின் நீல் பேடி மற்றும் காத்லீன் மெக்கோரி ஆகியோராவர்.

## சைலேஷ் கோவிந்த் கன்புலே

- சைலேஷ் கோவிந்த் கன்புலே என்பவருக்கு “2021 ஆம் ஆண்டு தேசியப் பாதுகாப்புப் படையின் கைவினை வெடிகுண்டு எதிர்ப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்புப் புத்தாக்க விருதானது” (NSG Counter-IED and Counter-Terrorism Innovator Award 2021) வழங்கப் பட்டு உள்ளது.
- குண்டு வெடிப்பினை தாங்கக்கூடிய தலைக்கவசத்தை உருவாக்கியதற்காக வேண்டி இவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் ரூர்க்கியின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் இயந்திரவியல் மற்றும் தொழில்துறை பொறியியல் துறையின் பேராசிரியார் ஆவார்.
- இது தேசிய பாதுகாப்புப் படையினால் வழங்கப்படும் ஒரு வருடாந்திர விருதின் இரண்டாவது பதிப்பாகும்.
- இந்த விருது வழங்கும் விழாவானது குர்கானுக்கு அருகே உள்ள மானேஷ்வரில் அமைந்துள்ள தேசியப் பாதுகாப்புப் படை வளாகத்தில் நடைபெற்றது.



## ஆசிஷ் சந்தோர்கர்

- உலக வர்த்தக அமைப்பில் இந்தியாவின் நிரந்தரத் திட்டத்தின் ஆலோசகராக ஆசிஷ் சந்தோர்கர் எனும் தனியார் துறை நபர் ஒருவரை இந்திய அரசு நியமித்துள்ளது.
- இவரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும்.
- இத்திட்டத்தில் ஒரு தனியார்துறை நபர் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- சந்தோர்கர் பெங்களூருவிலுள்ள ஒரு கொள்கை ஆலோசக அமைப்பான ஸ்மாஹி கொள்கை மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் இயக்குநராவார்.

## மில்கா சிங்




- இந்தியத் தடகள வீரரான மில்கா சிங் அவர்கள் தனது 91வது வயதில் காலமானார்.
- இவர் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நான்கு முறை தங்கப் பதக்கம் வென்றதோடு, 1958 ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளில் சாம்பியன்சிப் பட்டம் வென்றவரும் ஆவார்.

- மேலும் இவர் 1956 மற்றும் 1964 ஆகிய ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா சார்பாக பங்கேற்றவர் ஆவார்.
- இவருக்கு 1959 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- இவர் 'பறக்கும் சீக்கியர்' எனவும் அழைக்கப் பட்டார்.
- இவர் 1929 நவம்பர் 20 ஆம் தேதியன்று அப்போதைய பிரிக்கப்படாத இந்தியாவில், தற்போதைய பாகிஸ்தானின் முசாபர்பூர் மாவட்டத்தில் உள்ள கோவிந்த்புரா என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார்.
- இவர் 1947 ஆம் ஆண்டில் இந்தியப் பிரிவினையின் போது பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு குடியேறினார்.

## கோஃபி அன்னான் சேஞ்ச்மேக்கர்ஸ் 2021 முன்னெடுப்பு




- கோஃபி அன்னான் சேஞ்ச்மேக்கர்ஸ் 2021 என்ற முன்னெடுப்பிற்காக உலகின் 12 தனித்துவமிக்க இளம் தலைவர்களுள் ஒருவராக செய்னோரின் ஸ்டீபன் அங்காங் (Zeinorin Stephen Angkang) என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் ஜெனீவாவிலுள்ள கோஃபி அன்னான் பவுண்டேசனால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் மணிப்பூரின் உக்ரூல் மாவட்டத்தைச் சேர்ந்த 29 வயது பெண்மணியாவார்.
- மணிப்பூரிலுள்ள தங்குல் நாகா பழங்குடியின விவசாயிகளுடனான இவரது ஈடுபாட்டிற்காக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 2021 ஆம் ஆண்டு லேண்ட் ஃபார் லைஃப் விருது

- 2021 ஆம் ஆண்டு லேண்ட் ஃபார் லைஃப் விருதானது இராஜஸ்தானின் ஃபெமிலியல் ஃபாரஸ்ட்ரி எனும் அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- குடும்ப வனவியல் (Familial Forestry) என்பது ஒரு மரத்தினைப் பசுமை மிக்க குடும்ப உறுப்பினராகக் கருதும் ஒரு முறையாகும்.
- ஐ.நா.வின் பாலைவனமாதலை எதிர்ப்பது மீதான மாநாடானது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்த விருதினை வழங்குகிறது.

- நிலத்தினைச் சமநிலையில் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் சிறந்த மற்றும் புதிய முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக வேண்டி இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான விருதின் கருத்துரு, "Health land, Healthy lives" என்பதாகும்.
- இது நில வளங்காப்பு மற்றும் மீட்பு தொடர்பான உலகின் மிக உயரிய விருதாகக் கருதப் படுகிறது.




## கென்னத் கௌண்டா

- ஜாம்பியா நாட்டு அரசியல்வாதியான கென்னத் கௌண்டா காலமானார்.
- இவர் ஜாம்பியாவின் முதல் அதிபராகப் பணியாற்றியவராவார்.
- இவர் 1964 முதல் 1991 ஆம் ஆண்டு வரை 27 ஆண்டுகளுக்கு அந்நாட்டின் அதிபராகப் பணியாற்றி உள்ளார்.
- ஜாம்பியா நாடானது 1964 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றது.

## சுமந்த் சின்ஹா

- ஐக்கிய நாடுகளின் உலகளாவிய ஒப்பந்தம் எனும் ஒப்பந்த அமைப்பானது ரிநியூ பவர் என்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் தலைவருமான சுமந்த் சின்ஹா அவர்களை 2021 ஆம் ஆண்டிற்கான பத்து நிலையான மேம்பாட்டு இலக்குகளின் முன்னோடிகளுள் ஒருவராக அங்கீகரித்துள்ளது.
- தூய மற்றும் மலிவான ஆற்றலின் அணுகலை மேம்படுத்துதல் (நிலையான மேம்பாட்டு இலக்குகள் – 7) எனும் இலக்கை அடைய இவர் ஆற்றியப் பணிக்காக வேண்டி இவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளின் முன்னோடிகள் என்பவர்கள் ஐ.நாவின் உலகளாவிய ஒப்பந்த அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்படும் வணிகத் தலைவர்கள் ஆவர்.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்காக சிறப்பான முறையில் பணியாற்றுவதற்காக இவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

## ஓபன் சொசைட்டி விருது

- கேரளாவின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் K.K. சைலஜா அவர்களுக்கு மத்திய ஐரோப்பிய பல்கலைக்கழகத்தின் மதிப்புமிக்க ஓபன் சொசைட்டி விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- பொது சுகாதாரப் பணிகளில் இவர் ஆற்றிய சேவைக்கு ஒரு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இவ்விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ஓபன் சொசைட்டி விருதானது மத்திய ஐரோப்பிய பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படும் உயரிய ஒரு விருதாகும்.
- இந்த விருதானது சமுதாயத்திற்கு சேவை செய்யும் தனித்துவம் வாய்ந்த நபர்களுக்கு வழங்கப் படும் ஒரு வருடாந்திர விருதாகும்.
- 2020 ஆம் ஆண்டில் ஓபன் சொசைட்டி விருதானது நோபல் பரிசு பெற்ற ஸ்வேத்லனா அலெக்செய்விச் (Svetlana Alexeyevich) என்பவருக்கு வழங்கப்பட்டது.



## The Nutmeg's Curse

- அமித்வ் கோஷ் அவர்கள் "The Nutmeg's Curse : Parables for a planet in crisis" எனும் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இவர் ஞானபீட விருது பெற்றவராவார்.
- இந்தப் புத்தகமானது ஜான் முர்ரே என்ற பதிப்பகத்தினால் வெளியிடப் படுகிறது.
- இந்தப் புத்தகமானது இன்றைய உலகில் காலனித்துவத்தின் தாக்கம் குறித்த வரலாற்றினைக் கூறுகிறது.



## ஐரோப்பிய கண்டுபிடிப்பாளர் விருது – 2021

- இந்திய-அமெரிக்க வேதியியலாளரான சுமிதா மித்ரா என்பவருக்கு ஐரோப்பிய நாடுகள் சாரா காப்புரிமை அலுவல் நாடுகள் பிரிவில் 2021 ஆம் ஆண்டிற்கான ஐரோப்பிய கண்டுபிடிப்பாளர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- வலுவான மற்றும் கலையுணர்வுடன் கூடிய பல்துளை நிரப்புதலுக்கான பல்மருத்துவ பொருட்களில் முதன்முறையாக நானோ தொழில் நுட்பத்தினை வெற்றிகரமாக பயன்படுத்தியவர் இவராவார்.
- இந்த விருதானது ஐரோப்பியக் காப்புரிமை அலுவலகத்தினால் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.
- இது ஐரோப்பா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த சிறப்பான கண்டுபிடிப்பாளர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காக வழங்கப்படுகிறது.



## ஜாம்செத்ஜி நுசர்வான்ஜி டாட்டா

- ஜாம்செத்ஜி நுசர்வான்ஜி டாட்டா அவர்கள் எடெல்கிவ் ஹுருன் மனித இனப் பற்றாளர் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- ஹீருன் ஆராய்ச்சி மற்றும் எடெல்கிவ் அறக்கட்டளை அமைப்பினால் தொகுத்து வெளியிடப் படும் இந்தப் பட்டியலின் முதல் 10 இடங்களில் இடம் பெற்ற ஒரே இந்தியர் இவராவார்.
- இவர் டாடா குழுமத்தின் நிறுவனர் ஆவார்.
- இவர் ஜாம்செட்பூரில் உள்ள டாடா இரும்பு மற்றும் எஃகு ஆலையில் நிறுவனராவார்.
- ஜாம்செட்ஜி டாடா அவர்கள் “இந்தியத் தொழில்துறையின் தந்தை” என்று அழைக்கப் படுகிறார்.
- ஜவஹர்லால் நேரு அவரை “ஒற்றை மனிதத் திட்டக் குழு ஆணையம்” (One-Man Planning Commission) எனக் குறிப்பிட்டுள்ளார்.



Jamsetji Tata **tops the list of 'Philanthropist of the Century'** with donations worth $102 billion

## வில் சுமித்தின் சுயசரிதை




- நடிகர் வில் சுமித் அவர்கள் தனது சுயசரிதையான "Will" எனும் புத்தகத்தின் தலைப்பு மற்றும் அட்டைப் படத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்தப் புத்தகமானது பென்குயின் பதிப்பகத்தினால் வெளியிடப்பட உள்ளது.
- இவர் நூலாசிரியர் மார்க் மேன்சன் என்பவருடன் இணைந்து இப்புத்தகத்தை எழுதி உள்ளார்.
- இந்த புத்தகத்தின் அட்டைப் படமானது நியூ ஆர்லியன்ஸ் நகரைச் சேர்ந்த கலைஞரான பிரான்டன் "பிமைக்" ஓடம்ஸ் (Brandan "BMike" Odums) என்பவரால் வடிவமைக்கப் பட்டது.

## ஜான் டேவிட் மெக்ஆஃபி காலமானார்

- மெக்ஆஃபி வைரஸ் தடுப்பு மென்பொருளை (antivirus) உருவாக்கிய ஜான் டேவிட் மெக்ஆஃபி காலமானார்.
- பார்சிலோனாவிற்கு அருகேயுள்ள ஒரு சிறைச்சாலையில் ஜான் இறந்து கிடந்தார்.
- வரி ஏய்ப்பின் காரணமாக 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து அவர் அந்தச் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார்.

## ரஸ்கின் பாண்ட் - புதிய புத்தகம்

- இந்தியப் பிரித்தானிய நூலாசிரியரான ரஸ்கின் பாண்ட் "It's a Wonderful Life" எனும் புதிய ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இது அலெப் என்ற ஒரு புத்தக நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
- இவர் பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூசன் ஆகிய விருதுகளைப் பெற்றவராவார்.
- இவருடைய முதல் புத்தகம் "The Room on the Roof" என்பதாகும்.

## 'The Order of Polar Star'

- R.K. சபர்வால் அவர்களுக்கு மங்கோலிய நாட்டின் உயரிய குடிமை விருதான 'The Order of Polar Star' எனும் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் இன்ஜினியர்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராவார்.
- மங்கோலியாவின் முதல் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதில் அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்கு வேண்டி மங்கோலிய அதிபர் இந்த விருதை அறிவித்து உள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## UEFA சாம்பியன்ஸ் லீக் போட்டி – கால்பந்து

- 2020-21 ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் லீக்கின் இறுதிப் போட்டியில் மான்செஸ்டர் அணியினை 1 – 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி செல்சியா அணி சாம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது.
- இந்தப் போட்டியானது போர்ச்சுகல்லிலுள்ள போர்டோவின் எஸ்டாடியோ டோ டிராகாவோ எனும் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.
- காய் ஹெவெர்ட்ஸ் என்பவர் இந்தக் கால்பந்துப் போட்டியின் ஒரே ஒரு கோலை அடித்தார்.
- 2012 ஆம் ஆண்டில் பெற்ற முதல் வெற்றிக்குப் பிறகு செல்சியா அணி பெற்ற இரண்டாவது சாம்பியன்ஸ் லீக் வெற்றி இதுவாகும்.

## ஜோர்டான் கிளார்க்சன்

- உடா ஜாஸ் அணியின் வீரரான ஜோர்டான் கிளார்க்சன் அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டு கியா NBA 6வது வீரர் என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ரிசர்வ் வீரராக (Reserve Role) அவர் ஆற்றிய பங்கிற்காக வேண்டி இந்த விருது அவருக்கு வழங்கப் பட்டு உள்ளது.
- இது கிளார்க்சன் பெற்ற முதலாவது '6வது வீரர்' விருது ஆகும்.
- மேலும் இந்த விருதினைப் பெற்ற முதல் ஜாஸ் அணி வீரரும் இவரே ஆவார்.



## சுனில் சேத்ரி

- 36 வயதான இந்தியக் கால்பந்து வீரர் சுனில் சேத்ரி அர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்ஸியை முந்தியுள்ளார்.
- 74 கோல்களை அடித்து சர்வதேச நடப்பு வீரர்கள் வரிசையில் இவர் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருக்கிறார்.
- சேத்ரி தற்போது பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸியை 2 கோல்கள் என்ற கணக்கில் முந்தியிருக்கிறார்.
- 73 கோல்கள் அடித்து மூன்றாமிடத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் அலி மப்கௌத் என்பவருக்கு முந்தைய இடத்திற்கு (இரண்டாமிடத்தில்) சேத்ரி முன்னேறி உள்ளார்.
- வங்காளதேச அணிக்கு எதிரான போட்டியில் இவர் இந்த சாதனையை நிகழ்த்தினார்.
- சுனில் சேத்ரி கேப்டன் பென்டாஸ்டிக் (Captain Fantastic) எனவும் அழைக்கப் படுகிறார்.
- சர்வதேச அளவில் அதிக கோல்கள் அடித்த நடப்பு வீரர்கள் என்ற பட்டியலில் கிறிஸ்டியானோ ரொனால்டோவை அடுத்து சேத்ரி இரண்டாமிடத்தில் உள்ளார்.



## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி – 2021

- 125வது பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் 2021 போட்டியானது பிரான்சின் பாரீசிலுள்ள ஸ்டேட் ரோலண்ட் கரோஸ் என்ற அரங்கில் நடைபெற்றது.
- இது 2021 ஆம் ஆண்டின் 2வது கிராண்ட் ஸ்லாம் போட்டியாகும்.

- இது களிமண் தளத்தில் நடைபெறும் ஒரு போட்டியாகும்.
- இது சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பினால் (International Tennis Federation) ஏற்பாடு செய்யப் படுகிறது.
- நோவாக் ஜோகோவிக் (செர்பியா) அவர்கள் ஸ்டெஃபனோஸ் சிட்ஸிபாசை (கிரேக்கம்) தோற்கடித்து ஆடவர் ஒற்றையர் போட்டியில் பட்டம் வென்றார்.
- பார்போரா கிரெஜிகோவா (செக் குடியரசு) என்பவர் அனஸ்தாசியா பவிலியுன்செங்கோவாவை (ரஷ்யா) தோற்கடித்து மகளிர் ஒற்றையர் போட்டியில் பட்டம் வென்றார்.
- இது இவருடைய முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.
- பார்போரா அவருடைய சக ஆட்டக்காரர் கேடெர்லினா சினியாகோவாவுடன் (செக் குடியரசு) இணைந்து பெத்தனி மட்டெக் சான்ட்ஸ் (அமெரிக்கா) மற்றும் இகா ஸ்வெய்டெக் (போலெந்து) ஆகியோரைத் தோற்கடித்து மகளிர் இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்றனர்.
- 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பிரஞ்சு ஓபன் போட்டியில் மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்ற ஒரே வீராங்கனை பார்போரா கிரெஜிகோவா ஆவார்.
- பிரெஞ்சு நாட்டு இணை வீரர்களான பியர் – ஹியூஸ் ஹெர்பர்ட் மற்றும் நிகோலா மஹீத் ஆகியோர் 2021 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்ற முதல் பிரெஞ்சு நாட்டு இணை (ஜோடி) ஆவர்.

## ICC வாழ்த்தரங்கம்




Aubrey Faulkner of South Africa and Monty Noble of Australia for the early era (pre-1918),
Sir Learie Constantine of West Indies and Stan McCabe of Australia for the inter-war Era (1918-1945),
Ted Dexter of England and Vinoo Mankad of India for the post-war Era (1946-1970).
Desmond Haynes of the West Indies and Bob Willis of England were inducted from the ODI era (1971-1995)
Andy Flower of Zimbabwe and Kumar Sangakkara of Sri Lanka were from the modern era (1996-2016).

- சர்வதேச கிரிக்கெட் மன்றமானது தனது புகழ்பெற்ற வாழ்த்தரங்கில் இந்தியாவின் வினூ மன்காட் உள்ளிட்ட 10 விளையாட்டு வீரர்களைச் சேர்த்துள்ளது.

- இதில் ஐந்து தசாப்தத்திலிருந்து தலா இரண்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- இந்த அறிவிப்பானது உலக டெஸ்ட் சாம்பியன்சிப் இறுதிப் போட்டியின் தொடக்க விழாவுடன் ஒருங்கே அமைந்துள்ளது.
- இந்த போட்டியானது இங்கிலாந்தின் சௌதாம்ப்டனில் ஜுன் 18 அன்று இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையே நடைபெற உள்ளது.

## போலந்து ஓபன் மல்யுத்தப் போட்டி – வினேஷ் போகத்

- போலந்து ஓபன் மல்யுத்தப் போட்டியின் 53 கிலோ எடைப் பிரிவில் இந்திய மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகத் தங்கம் வென்றார்.
- இது இவர் பெற்ற மூன்றாவது வெற்றியாகும்.
- இதற்கு முன்பாக இவர் மாட்டியோ பெலிசோன் (Matteo Pellicone) போட்டி (மார்ச்) மற்றும் ஆசிய சாம்பியன்சிப் (ஏப்ரல்) ஆகியப் போட்டிகளில் தங்கம் வென்றுள்ளார்.

## லாரல் ஹப்பார்ட்

- நியூசிலாந்து நாட்டின் பளுதூக்கும் வீரரான லாரல் ஹப்பார்ட் (Laurel Hubbard) என்பவர் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க உள்ள முதல் திருநங்கை எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- இவருடைய வயது 43 ஆகும்.
- இவர் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க உள்ள நான்காவது வயதான பளுதூக்கும் வீரராவார்.
- இவர் டோக்கியோவில் நடைபெற உள்ள மகளிருக்கான 87 கிலோ + என்ற அதிக எடைப் பிரிவில் பங்கேற்க உள்ளார்.




## செல்லி ஆன் ஃபிரேசர் ஃபிரைஸ்

- ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த தடகள வீராங்கனையான செல்லி ஆன் ஃபிரேசர் ஃபிரைஸ் அவர்கள் இரண்டாவது அதிவேக பெண்மணியாக உருவெடுத்துள்ளார்.
- இவர் கிங்க்ஸ்டனில் நடைபெற்ற போட்டியில் 100 மீட்டர் தொலைவை வெறும் 10.63 விநாடிகளில் கடந்து சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

- இவர் 100 மீட்டர் தொலைவில் உலக சாதனையைப் படைத்த ஃப்ளோரென்ஸ் கிரிஃபித் ஜோய்னருக்கு அடுத்த நிலையில் உள்ளார்.
- ஃப்ளோரென்ஸ் கிரிஃபித் ஜோய்னர் 1988 ஆம் ஆண்டில் இந்தியானாபோலிஸ் நகரில் நடைபெற்ற மகளிருக்கான தடகளப் போட்டியில் 100 மீட்டர் தொலைவை 10.49 விநாடிகளில் கடந்து உலக சாதனையைப் படைத்தார்.




## ICC உலக டெஸ்ட் சாம்பியன்சிப்

- நியூசிலாந்து அணியானது இந்திய அணியை வீழ்த்தி முதல்முறையாக ICC முதலாவது உலக டெஸ்ட் சாம்பியன்சிப்பினை வென்றது.
- கைல் ஜேமீசன் என்பவர் "சிறந்த ஆட்டக்காரர்" விருதினைப் பெற்றார்.
- கேன் வில்லியம்சன் என்பவர் "போட்டித் தொடரின் சிறந்த ஆட்டக்காரர்" எனும் விருதினைப் பெற்றார்.
- இந்த இறுதிப் போட்டியானது இங்கிலாந்தின் சவுதாம்ப்டனிலுள்ள ஏகிஸ் பவுல் அரங்கில் (ரோஸ் பவுல் அரங்கம்) நடைபெற்றது.



## சௌரப் சௌத்ரி




- இந்தியாவின் துப்பாக்கிச் சுடுதல் வீரரான சௌரப் சௌத்ரி 2021 ஆம் ஆண்டு ISSF உலகக் கோப்பைப் போட்டியின் ஆண்கள் பிரிவில் 10 மீ ஏர் பிஸ்டல் துப்பாக்கிச் சுடும் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்தப் போட்டியானது 2021 ஆம் ஆண்டு ஜூன் 24 அன்று குரோசியாவின் ஒசிசெக் என்னுமிடத்தில் நடைபெற்றது.

*குறிப்பு*

- 2018 ஆம் ஆண்டு ஆசியப் போட்டிகளில் 10 மீ ஏர் பிஸ்டல் போட்டியில் தங்கம் வென்ற இந்தியாவின் இளம் விளையாட்டு வீரர் சௌத்ரி ஆவார்.
- ISSF உலக சாம்பியன்சிப், ISSF உலகக் கோப்பை, ஆசியப் போட்டிகள், ஆசிய ஏர் கன் சாம்பியன்சிப் மற்றும் இளையோர் ஒலிம்பிக் போட்டிகள் ஆகியவற்றில் தங்கம் வென்ற ஒரே இந்திய துப்பாக்கிச் சுடுதல் வீரரும் இவரே ஆவார்.

## கெய்லீ மெக்கவுன் – புதிய உலக சாதனை

- ஆஸ்திரேலிய நீச்சல் வீராங்கனையான கெய்லீ மெக்கவுன் என்பவர் 100 மீட்டர் அளவிலான பின்னோக்கி (backstroke) நீந்தும் நீச்சல் போட்டியில் முன்பு மேற்கொள்ளப் பட்ட ஒரு உலகச் சாதனையை முறியடித்துள்ளார்.



- தெற்கு ஆஸ்திரேலிய நீர்சூழ் மையத்தில் இந்தச் சாதனையானது நிகழ்த்தப்பட்டது.
- இவர் இந்தத் தொலைவை வெறும் 57.45 விநாடிகளில் நீந்தி சாதனை ஒன்றைப் படைத்து உள்ளார்.
- இதற்கு முந்தைய உலகச் சாதனையானது 2019 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ரேகன் ஸ்மித் என்பவரால் (57.57 விநாடிகளில்) நிகழ்த்தப்பட்டது.

## அலி டேயி மற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோ




- ஆசியக் கால்பந்து வீரரான அலி டேயி என்பவர் 1993 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலகட்டத்தில் ஈரான் நாட்டின் சார்பாக 149 முறை விளையாடி 109 கோல்களை அடித்தவராவார்.
- இந்தச் சாதனையானது கிறிஸ்டியானோ ரொனால்டோவினால் சமீபத்தில் சமன் செய்யப் பட்டது.
- கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்ச்சுக்கல்) தனது 109வது கோலை அடித்தப் பிறகு அதற்கு அலி டேயி வாழ்த்து தெரிவித்தார்.
- இந்தக் கோலானது பிரான்சு அணிக்கு எதிரான யுரோ 2020 போட்டியில் அடிக்கப் பட்டது.

## அபிசேக் வர்மா

- அபிசேக் வர்மா சமீபத்தில் வில்வித்தைப் போட்டியில் தனது 2வது உலகக் கோப்பை தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- தனிநபர் குழுப் போட்டியில் இரண்டு உலகக் கோப்பைத் தங்கப் பதக்கங்களை வென்ற ஒரே இந்தியர் இவராவார்.

- ❖ வர்மா இந்த தங்கப் பதக்கத்திற்கானப் போட்டியில் அமெரிக்காவின் அதிக கனம் என்ற பிரிவின் போட்டியாளர் கிரிஷ் ஸ்காஃப் என்பவரைத் தோற்கடித்தார்.

## சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் – பொக்காரோ

- ❖ ஜார்க்கண்ட் மாநில கிரிக்கெட் சங்கமானது SAIL பொக்காரோ எஃகு ஆலையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ இது பொக்காரோ நகரில் ஒரு சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கை கட்டமைப்பதற்கான ஒப்பந்தமாகும்.
- ❖ இது கட்டி முடிக்கப் பெற்றால், ஜாம்செட்பூர் மற்றும் ராஞ்சியை அடுத்து சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கத்தைக் கொண்டுள்ள ஜார்க்கண்டின் மூன்றாவது நகரமாக பொக்காரோ உருப்பெறும்.

## சஃபாலி வர்மா

- ❖ தொடக்க ஆட்டக்காரரான சஃபாலி வர்மா கிரிக்கெட்டின் அனைத்து வகைப் போட்டிகளிலும் அறிமுகமாகி களமிறங்கிய இளம் இந்திய கிரிக்கெட் வீராங்கனை எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- ❖ சஃபாலி வர்மா தனது 17 வயது மற்றும் 150 நாட்களில் தனது முதல் ஒரு நாள் (ODI) போட்டியில் அறிமுகமானார்.
- ❖ இதன் மூலம் ஆப்கானிஸ்தானின் முஜீப் உர் ரஹ்மான் முதலிடத்திலுள்ள பட்டியலில் 5வது இளம் கிரிக்கெட் வீரர் இடத்தைப் பெற்ற பெருமையை இவர் பெற்றார்.
- ❖ சஃபாலி வர்மா தனது 15 வயது மற்றும் 239 நாட்களில் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற T20 போட்டியில் அறிமுகமானார்.



# முக்கிய தினங்கள்

## உலக பால் தினம் – ஜுன் 01

- ❖ உலக பால் தினமானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் 2001 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ❖ ஒரு உலகளாவிய உணவாக விளங்கும் பாலின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுவதற்காகவும் பால் தொழில்துறையைக் கொண்டாடுவதற்காகவும் வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ 2021 ஆம் ஆண்டின் உலக பால் தினத்தினுடைய கருத்துருவானது சுற்றுச்சூழல், ஊட்டச்சத்து மற்றும் சமூக-பொருளாதாரம் தொடர்பான தகவல்களை கருத்தில் கொண்டு பால்தொழில்துறையின் நிலைத் தன்மையை நிலைநாட்டுவதில் ஈடுபாடு செலுத்தும்.

## தெலுங்கானா மாநில நிறுவன தினம் – ஜுன் 02

- ❖ 2014 ஆம் ஆண்டு ஜுன் 02 ஆம் தேதியன்று தெலுங்கானா மாநிலமானது அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- ❖ தெலுங்கானா மாநிலத்தினை உருவாக்குவதற்காக வேண்டி 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2014 என்ற சட்டமானது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.
- ❖ இது முந்தைய ஆந்திரப் பிரதேசத்தின் வடமேற்குப் பகுதியைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்




## உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் – ஜனவரி 30

- ❖ நடப்பிலிருக்கும் 74வது உலக சுகாதார மன்றமானது ஜனவரி 30 ஆம் தேதியினை உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினமாக அறிவித்துள்ளது.
- ❖ இதற்கான முன்மொழிதலை ஐக்கிய அரபு அமீரகமானது முன்வைத்தது.
- ❖ இந்த நோய்களால் நிலவும் உலகளாவிய சுமையை அங்கீகரிக்கும் இயக்கத்தில் ‘புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் மீதான லண்டன் பிரகடனம்’ ஆனது ஒரு முக்கிய மைல்கல்லாக இருந்தது.

- இந்தப் பிரகடனமானது 2012 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியன்று ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## உலக மிதிவண்டி தினம் – ஜுன் 03

- மிதிவண்டி ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் மக்களிடையே ஈர்ப்பினைக் கொண்டு வருவதற்காக வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- மிதிவண்டி ஓட்டுதலால் ஒருவரின் ஆரோக்கியம் மேம்படும் என்பது மட்டுமல்லாது அது மாசுபாடு உண்டாக்காத போக்குவரத்து முறை என்பதால் சுற்றுச்சூழலுக்கும் அது நன்மை தரும் என்பது நன்கு அறியப் பட்ட ஒரு உண்மையாகும்.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஜுன் 03 ஆம் தேதியானது உலக மிதிவண்டி தினமாக அறிவிக்கப் பட்டது.

## ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச நாள் – ஜுன் 04

- குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த ஐக்கிய நாடுகளின் முழு ஈடுபாட்டினை உறுதிபடுத்துவதற்காக வேண்டி இந்த தினமானது உலகளவில் அனுசரிக்கப் படுகிறது.
- உலகம் முழுவதுமுள்ள குழந்தைகள் அனுபவிக்கும் உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியிலான வலிகளை உலகிற்கு உணரச் செய்வதற்காக வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.

## உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 05

- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உலக சுற்றுச்சூழல் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தின் கருத்துரு 'Reimagine. Recreate. Restore' என்பதாகும்.
- இந்த வருடம் இன்றைய நாளின் உலகளாவிய தலைமைப் பொறுப்பை பாகிஸ்தான் வகிக்கிறது.
- 1974 ஆம் ஆண்டில் முதன்முறையாக "ஒரே பூமி" (Only one Earth) என்ற வாசகத்துடன் உலக சுற்றுச்சூழல் தினமானது கொண்டாடப்பட்டது.




## ஐக்கிய நாடுகளின் ரஷ்ய மொழி தினம் – ஜுன் 06

- ரஷ்ய மொழியானது ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பயன்படுத்தப்படும் 6 அலுவல் மொழிகளுள் ஒன்றாகும்.
- இந்த தினமானது 2010 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் நிறுவப்பட்டது.
- அலெக்சாண்டர் புஷ்கினுடைய பிறந்த நாளினைக் குறிப்பிடும் வகையில் இந்த தினமானது ஐக்கிய நாடுகளின் ரஷ்ய மொழி தினமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இவர் ஒரு ரஷ்ய மொழிக் கவிஞராவார்.
- இவர் நவீன ரஷ்ய மொழியின் தந்தை எனக் கருதப்படுகிறார்.




## உலகப் பூச்சிகள் தினம் – ஜுன் 06

- உலகப் பூச்சிகள் தினமானது உலகப் பூச்சிகள் விழிப்புணர்வு தினம் எனவும் அழைக்கப் படுகிறது.
- உலகப் பூச்சிகள் தினமானது சீனப் பூச்சிகள் கட்டுப்பாட்டு கூட்டமைப்பினால் தொடங்கப் பட்டதாகும்.
- முதல் உலகப் பூச்சிகள் தினமானது 2017 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.




### உலக உணவுப் பாதுகாப்பு தினம் – ஜுன் 07

- வெவ்வேறு உணவுப் பழக்கங்களால் ஏற்படும் அபாயங்கள் பற்றியும் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டு உலக உணவுப் பாதுகாப்பு தினத்தின் கருத்துரு, "ஆரோக்கியமான நாளைக்கான பாதுகாப்பான இன்றைய உணவு" என்பதாகும்.
- உலக சுகாதார அமைப்பானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் வேளாண் அமைப்புடன் இணைந்து 2017 ஆம் ஆண்டு முதல் இந்த நாளினை அனுசரிப்பதற்கான முடிவினை மேற்கொண்டது.




### BIMSTEC தினம் – ஜுன் 06

- 24வது BIMSTEC தினத்தை முன்னிட்டு பிரதமர் ஜுன் 06 அன்று தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.
- பல்துறைத் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பானது (Bay of Bengal initiative Multi-Sector Technical and Economic Cooperation – BIMSTEC) ஒரு பிராந்தியப் பலதரப்பு அமைப்பாகும்.
- இது ஏழு தெற்கு மற்றும் தெற்காசிய நாடுகளை உள்ளடக்கியதாகும்.
- இவை இந்தியா, வங்காளதேசம், நேபாளம், பூடான், இலங்கை, தாய்லாந்து மற்றும் மியான்மர் ஆகியவையாகும்.

- இந்தியாவின் தடுப்பூசி மைத்ரி முன்னெடுப்பின் கீழ், இந்திய நாடானது BIMSTEC அமைப்பில் உறுப்பினராக உள்ள தமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் உயிர் காக்கும் மருந்துகளை அனுப்பி உள்ளது.
- வங்காளதேசம், மியான்மர், நேபாளம், பூடான் மற்றும் இலங்கை உள்ளிட்ட ஐந்து BIMSTEC உறுப்பினர் நாடுகளுக்கு இந்த மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.




## உலகப் பெருங்கடல் தினம் – ஜுன் 08

- நமது வாழ்வில் பெருங்கடல்கள் கொண்டுள்ள முக்கியத்துவம் பற்றியும் அதனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் உலக மக்களிடைய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலகப் பெருங்கடல் தினத்தின் கருத்துரு, “பெருங்கடல் : வாழ்வு மற்றும் வாழ்வாதாரங்கள்” (The Ocean: Life and Livelihoods) என்பதாகும்.

- 1992 ஆம் ஆண்டில் ரியோடி ஜெனீரியோவில் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் உலகப் பெருங்கடல் தினம் எனும் ஒரு கருத்தை கனட நாட்டு அரசு முன்வைத்தது.




## உலக மூளைக்கட்டி தினம் – ஜுன் 06

- மக்களிடையே இந்த நோயினை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக மூளைக்கட்டி தினமானது அனுசரிக்கப் படுகிறது
- இந்த தினமானது 2000 ஆம் ஆண்டில் ஜெர்மானிய மூளைக்கட்டி சங்கத்தினால் தொடங்கப் பட்டது.
- தேசிய சுகாதாரத் தளத்தின் தரவுப்படி, இந்தியாவில் மூளைக்கட்டி நோய்ப் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.
- கட்டிகளை முன்பே கண்டறிந்து புற்றுநோய் உருவாவதைக் கட்டுப்படுத்துவதற்கும் அதனைத் தடுப்பதற்கும் வேண்டி தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை அரசு தொடங்கியுள்ளது.

## உலக அங்கீகார தினம் 2021 – ஜுன் 09

- வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தில் அங்கீகாரத்தின் பங்கினை மேம்படுத்தச் செய்வதற்காக உலக அங்கீகார தினமானது ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அங்கீகாரம் : நிலையான மேம்பாட்டு இலக்குகளை அமல்படுத்துவதற்கு ஆதரவு அளித்தல்" என்பதாகும்.
- இது சர்வதேச அங்கீகார மன்றம் மற்றும் சர்வதேச ஆய்வக அங்கீகார கழகம் ஆகியவற்றால் நிறுவப்பட்ட உலகளாவிய முன்னெடுப்பாகும்.




## பவள முக்கோண தினம் – ஜுன் 09

- இத்தினமானது பவள முக்கோண முன்னெடுப்பு என்ற அமைப்பினால் கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த முன்னெடுப்பு அமைப்பானது மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சாலமன் தீவுகள், பப்புவா நியூ கினியா மற்றும் தைமூர் லெஸ்தே ஆகிய ஆறு நாடுகளின் ஒரு பலதரப்பு கூட்டிணைவாகும்.
- இது கடல்சார் மற்றும் கடலோர வளங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் உணவுப் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் செயலாற்றும் ஆறு நாடுகளின் பலதரப்பு கூட்டிணைவாகும்.
- பவள முக்கோண முன்னெடுப்பானது பவளப்பாறைகள், மீன் வளம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவை மீதான பவள முக்கோண முன்னெடுப்பு எனவும் அழைக்கப் படுகிறது.



## சர்வதேச லெவல் கிராசிங் பற்றிய விழிப்புணர்வு தினம் – ஜுன் 10

- சர்வதேச இரயில்வே ஒன்றிய அமைப்பினால் இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு சர்வதேச லெவல் கிராசிங் (இரயில்பாதை – சாலை சந்திப்பு) பற்றிய விழிப்புணர்வு தினத்தின் கருத்துரு, 'கவனச் சிதறல்' (distraction) என்பதாகும்.
- இதன் முழக்கம் "கவனச் சிதறல் உயிரைப் பறிக்கும்" (Distraction kills) என்பதாகும்.
- இந்தியாவின் தெற்கு – மத்திய ரயில்வேயானது லெவல் கிராசிங் உள்ள பகுதிகளில் பொது மக்களுக்காக சில விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நிகழ்த்தி இத்தினத்தினைக் கடைபிடித்தது.
- தெற்கு மத்திய இரயில்வே மண்டலமானது இந்திய இரயில்வே அமைப்பின் 18 மண்டலங்களுள் ஒன்றாகும்.
- தெலுங்கானா, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களின் இரயில்சேவைகள் தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் வரம்பிற்கு உட்பட்டவையாகும்.
- தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் தற்போதைய தலைமையகம் செகந்திராபாத் இரயில்வே நிலையமாகும்.

## உலகக் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் 2021 – ஜுன் 12

- குழந்தைத் தொழிலின் மோசமான விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "குழந்தைத் தொழிலை ஒழிப்பதற்கு தற்போதே நடவடிக்கைகளை மேற்கொள்தல்" (Act Now: End Child Labour) என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2021 ஆம் ஆண்டினை 'குழந்தைத் தொழிலை ஒழிப்பதற்கான சர்வதேச ஆண்டாக' அறிவித்தது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது 2002 ஆம் ஆண்டில் உலகக் குழந்தைத் தொழில் எதிர்ப்பு தினத்தைத் தொடங்கியது.




## சர்வதேச (வெளிறல் நோய்) அல்பினிச விழிப்புணர்வு தினம் – ஜுன் 13

- இந்த தினமானது உலகளவில் உள்ள அல்பினிச நோயினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளைக் கொண்டாடுவதற்காக கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைத்து முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட வலிமை" (Strength beyond all odds) என்பதாகும்.

- அல்பினிசம் (வெளிறல் நோய்) என்பது முடி, தோல் மற்றும் கண்களில் உள்ள நிறமிகளின் (மெலனின்) குறைபாட்டால் ஏற்படுகிறது.




## உலக இரத்த தான தினம் – ஜுன் 14




- பாதுகாப்பான (ஆரோக்கியமான) இரத்தத்தின் தேவை பற்றியும் இரத்தமாற்று சிகிச்சைக்குத் தேவையான இரத்தத்தினுடைய உயிர்காக்கும் கூறுகள் பற்றியும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ரத்தத்தைக் கொடுங்கள், உலகத்தைத் துடிக்க வைப்போம்" (Give blood and keep the world beating) என்பதாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக இரத்த தான தினத்தை நடத்தும் நகரம் இத்தாலியின் ரோம் நகரமாகும்.
- இந்த தினமானது முதல்முறையாக 2005 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது உலக சுகாதார அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செந்நிலவு கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- கார்ல் லேண்ட்ஸ்டீனரின் பிறந்த நாளின் நினைவாக ஜுன் 14 ஆம் தேதியானது உலக இரத்த தான தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- ABO என்ற ஒரு இரத்த வகையைக் கண்டறிந்ததற்காக கார்ல் லேண்ட்ஸ்டீனெருக்கு நோபல் பரிசு வழங்கப் பட்டது.

## உலக முதியோர் கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினம் – ஜுன் 15

- கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு பாதிப்படைந்த முதியவர்களுக்காக குரல் எழுப்புவதற்காக இந்த தினமானது உலகளவில் கடைபிடிக்கப்படுகிறது.
- உலக முதியோர் கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினத்திற்கான கருத்துரு 'Access to Justice' (நீதியை அணுகுதல்) என்பதாகும்.
- இந்த தினமானது 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.
- முதியோர் கொடுமைத் தடுப்பிற்கான சர்வதேச பிணைய அமைப்பின் பரிந்துரையினைத் தொடர்ந்து இந்த அங்கீகாரமானது வழங்கப்பட்டது.




## உலகளாவிய காற்று தினம் – ஜுன் 15

- உலகளாவிய காற்று தினமானது விண்ட் யுரோப் மற்றும் உலகளாவிய காற்று ஆற்றல் மன்றம் மற்றும் நேஷனல் அசோசியேசன்ஸ் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- இந்த தினமானது பொது மக்களிடையே காற்று ஆற்றலின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அறிமுகப் படுத்தப்பட்டது.
- முதல் உலகளாவிய காற்று தினமானது 2007 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப்பட்டது.

## குடும்பத்திற்குப் பணம் அனுப்புதலின் சர்வதேச நாள் – ஜுன் 16

- இந்த தினமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது தனது சொந்த நாட்டினுள்ள குடும்ப உறுப்பினர்களுக்குப் பணம் அனுப்பும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.
- இந்த தினமானது முதன்முறையாக 2015 ஆம் ஆண்டு ஜுன் 16 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.

## ASEAN டெங்கு தினம் – ஜுன் 15

- பிராந்திய மற்றும் தேசிய அளவில் டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.
- இது தென்கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பினால் (Association of South East Asian Nations – ASEAN) அனுசரிக்கப் படுகிறது.
- இந்த தினத்திற்கான கருத்துரு, “பெருந்தொற்றின் மத்தியில் டெங்குவிற்கு எதிராக ஒன்றிணையும் ASEAN” (ASEAN Unite Against Dengue Amidst the Pandemic) என்பதாகும்.

- 2021 ஆம் ஆண்டிற்கான ASEAN தலைமையின் கருத்துரு, "We care, We prepare, We prosper" என்பதாகும்.
- 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10வது ASEAN சுகாதார அமைச்சர்கள் சந்திப்பானது ஜுன் 15 ஆம் தேதியினை ASEAN டெங்கு தினமாக அறிவித்தது.
- முதலாவது அதிகாரப் பூர்வமான ASEAN டெங்கு தினமானது 2011 ஆம் ஆண்டு ஜுன் 15 அன்று கடைபிடிக்கப் பட்டது.
- இந்தியாவானது மே 16 ஆம் தேதியன்று தேசிய டெங்கு தினத்தினை கடைபிடிக்கிறது.

## சர்வதேச ஆப்பிரிக்க குழந்தைகள் தினம் – ஜுன் 16

- ஆப்பிரிக்காவில் உள்ள குழந்தைகளுக்கான கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது 1976 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சோவெட்டோ என்ற ஒரு எழுச்சியின் பங்கேற்பாளர்களுக்கு மரியாதை செலுத்துவது மட்டுமல்லாமல் ஆப்பிரிக்கக் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான இன்றியமையாத தேவை குறித்த ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.

*குறிப்பு*

- 1976 ஆம் ஆண்டு ஜுன் 16 ஆம் தேதியன்று தென் ஆப்பிரிக்காவின் சோவெட்டோவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் செய்தனர்.
- இது ஆப்பிரிக்காவில் கருப்பர் இன மக்களை விட வெள்ளையர்களுக்குத் தரமான கல்வியை வழங்கிய ஏற்றத்தாழ்வு மிக்க கல்வி முறையை எதிர்த்த ஒரு போராட்டம் ஆகும்.




## பாலைவனமாக்கல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினம் – ஜுன் 17

- பாலைவனமாக்கல் மற்றும் வறட்சி போன்றவற்றைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாலைவனமாக்கலைத் தடுத்தல் மற்றம் வறட்சி நிலையிலிருந்து மீளுதல் ஆகியவற்றிற்கான செயல்முறைகளை முன்னிலைப்படுத்தவும் வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Restoration Land Recovery, We build back better with healthy land" என்பதாகும்.




## மதி இறுக்க நோய் பெருமித தினம் – ஜூன் 18

- மக்களிடையே மதி இறுக்க நோய் (autism) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த நோயினை உடைய மக்கள் பெருமை கொள்வதன் முக்கியத்துவத்தையும், இந்த பரந்து விரிந்த சமூகத்தில் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டு வருவதில் அதன் பங்கினையும் இந்த தினம் அங்கீகரிக்கிறது.
- இந்த தினமானது வானவில் வண்ணங்களுடன் கூடிய ஒரு முடிவிலி சின்னத்தினால் குறிப்பிடப் படுகிறது.
- மதி இறுக்க நோயுடைய மக்களிடம் இருக்கும் எண்ணற்ற சாத்தியக் கூறுகளை இந்தச் சின்னம் குறிக்கிறது.
- இந்த தினமானது ஆஸ்பிஸ் ஃபார் பீரிடம் (Aspies for Freedom) எனும் அமைப்பின் முயற்சினால் 2005 ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டில் முதன்முறையாக கடைபிடிக்கப் பட்டது.

## நிலையான அறுசுவை உணவியல் தினம் – ஜூன் 18

- நமது வாழ்வில் நிலையான அறுசுவை உணவியல் ஆற்றும் பங்கினைப் பற்றி உலக மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாளன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப்பட்டது.
- அறுசுவை உணவியல் என்பது நல்ல முறையான உணவைத் தேர்ந்தெடுத்து, சமைத்து உண்ணும் ஒரு கலை அல்லது நடைமுறையாகும்.

## உலக முதலை தினம் – ஜூன் 17

- இந்த தினமானது உலகெங்கிலும் அருகி வரும் முதலை இனங்களின் அவலநிலை குறித்து உலகத்திற்கு முன்னிலைப் படுத்துவதற்கான ஓர் உலகளாவிய விழிப்புணர்வு பிரச்சாரமாக கடைபிடிக்கப் படுகிறது.

- இந்தியாவில் மூன்று முதலை இனங்கள் உள்ளன. அவை,
  - மக்கர் (அ) சதுப்பு நிலை முதலை (க்ரோக்கோடைலஸ் பாலுஸ்ட்ரிஸ்) – IUCN எளிதில் பாதிக்கப்படக் கூடிய உயிரினம்
  - கழிமுக (அ) உப்புநீர் முதலை (க்ரோக்கோடைலஸ் போரோசஸ்) – IUCN குறைந்தபட்ச கவனம் தேவைப்படும் இனம்.
  - கங்கை நீர் முதலை (கவியாலிஸ் கேஞ்செட்டிகஸ்) – IUCN மிகவும் அருகி வரும் இனம்.




## மோதலின் போதான பாலியல் வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 19

- மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல், உலகம் முழுவதும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கும் அதிலிருந்து தப்பி உயிர் வாழ்பவர்களுக்கும் மரியாதை அளிதத்ல் போன்றவற்றின் அவசியம் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இவ்வகையான குற்றங்களை ஒழிப்பதற்காக தைரியத்தோடு எதிர்த்துப் போராடி தனது உயிரையே அர்ப்பணித்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதற்காகவும் வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- 2015 ஆம் ஆண்டு ஜுன் 19 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தை அறிவித்தது.

## தேசிய வாசிப்பு தினம் – ஜுன் 19

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது இந்த தினத்தைக் கடைப்பிடிக்கிறது.
- மறைந்த P.N. பணிக்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி (ஜுன் 19) அவருக்கு கௌரவம் அளிக்கும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இவர் 'கேரளாவின் நூலக இயக்கத்தின் தந்தை' ஆவார்.
- இந்த ஆண்டு 26வது தேசிய வாசிப்பு தினமாகும்.
- ஜுன் 19 ஆம் நாளைத் தொடர்ந்து வரும் வாரம் வாசிப்பு வாரமாகக் கடைபிடிக்கப் படுகிறது.
- ஜூலை 18 வரையிலான முழு மாதமும் வாசிப்பு மாதமாகக் கடைப்பிடிக்கப் படுகிறது.

## உலக அரிவாள் உயிரணு தினம் – ஜுன் 19

- அரிவாள் உயிரணு நோயினைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலையும் அந்நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவை பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- அரிவாள் உயிரணு நோயானது நோயாளிகளின் உடலிலுள்ள இரத்த சிவப்பணுக்களை அரிவாள் வடிவில் மாற்றுகிறது.
- இது இரத்த ஓட்டத்தைத் தடுக்கச் செய்கிறது.
- இது ஒரு மரபுவழியிலான இரத்தக் குறைபாட்டு நோயாகும்.




## உலக அகதிகள் தினம் – ஜுன் 20




- இந்த தினமானது அகதிகளுக்கு மரியாதை வழங்கவும் அவர்களின் அவலநிலையை உலகிற்கு எடுத்துக்காட்டவும் மேலும் அவர்களது வாழ்க்கை நிலையை மேம்படுத்தச் செய்யவும் முற்படுகிறது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Together we heal learn and shine" என்பதாகும்.

## சர்வதேச யோகா தினம் – ஜுன் 21




- இந்த ஆண்டு 7வது சர்வதேச யோகா தினமானது உலகம் முழுவதும் கொண்டாடப் பட்டது.
- “ஒரே உலகம், ஒரே ஆரோக்கியம்” எனும் ஒரு குறிக்கோளுடன் இந்த தினமானது கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, “ஆரோக்கியத்திற்காக யோகா” என்பது ஆகும்.
- இந்த நாளில் mYoga எனும் ஒரு கைபேசிச் செயலியை பிரதமர் மோடி அவர்கள் வெளியிட்டார்.
- இந்தச் செயலியானது உலக சுகாதார அமைப்பு மற்றும் ஆயுஷ் அமைச்சகம் ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்டதாகும்.

## சர்வதேச நீண்ட பகல் இரவு நாள் கொண்டாட்ட தினம் – ஜுன் 21

- இந்த தினமானது சம பகல் இரவு நாள் மற்றும் நீண்ட பகல் இரவு நாள் பற்றியும், பல்வேறு சமயங்கள் மற்றும் இனக் கலாச்சாரங்களில் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ஆண்டுதோறும் இவ்வாறு இரண்டு நாட்கள் ஏற்படுகிறன்றன.
- புவியின் ஒவ்வொரு அரைக்கோளத்திலும் ஒரு முறை என்ற ரீதியில் இது வருடத்திற்கு இரண்டு முறை நிகழ்கின்றது.



- அவை,
  - கோடைக் கால நீண்ட பகல் நாள் – வட துருவத்தில் ஆண்டின் மிக நீளமான நாள் மற்றும் தென் துருவத்தில் ஆண்டின் மிக குறுகிய இரவு – ஜுன் 21.
  - குளிர்கால நீண்ட இரவு நாள் – வட துருவத்தில் ஆண்டின் மிக குறுகிய இரவு நாள் மற்றும் தென் துருவத்தில் ஆண்டின் மிக நீளமான நாள் – டிசம்பர் 21.

## உலக இசை தினம் – ஜுன் 21

- இந்த தினமானது தொழில்சாரா மற்றும் தொழில்முறை இசைக்கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- இதன் நோக்கம்,
  - அனைவருக்கும் இலவச இசையை வழங்குதல் மற்றும்
  - தொழில்சாரா இசைக்கலைஞர்களைத் தங்களது படைப்பினை உலகிற்கு வெளிக் கொணர்வதற்கு ஊக்குவித்தல் ஆகியனவாகும்.

## உலக மனிதநேய தினம் – ஜுன் 21

- இந்த தினமானது ஆண்டுதோறும் ஜுன் மாதத்தின் நிகழும் நீண்ட பகல் நாளன்று (ஜுன் 21) உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- மனிதநேயத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஒரு வாழ்க்கைத் தத்துவமாகவும் உலகில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு வழிமுறையாகவும் பரப்பச் செய்வதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இந்த தினமானது 1980 ஆண்டு முதல் சர்வதேச மனிதநேய மற்றும் நெறிமுறை ஒன்றியத்தினால் நடத்தப் பட்டு வருகிறது.




## உலக நீர்நிலையியல் தினம் – ஜுன் 21

- இந்த தினமானது சர்வதேச நீர்நிலையியல் அமைப்பினால் உருவாக்கப்பட்டது.
- இந்த தினமானது நீர்நிலையியல் வல்லுநர்களின் பணி மற்றும் நீர்நிலையியலின் முக்கியத்துவம் ஆகியவற்றை வெளிக்கொணர வேண்டி அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இந்த ஆண்டு சர்வதேச நீர்நிலையியல் அமைப்பின் 100வது ஆண்டு நிறைவாகும்.

## உலக மழைக்காடுகள் தினம் – ஜூன் 22

- மழைக்காடுகளின் வளங்காப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது கொண்டாடப் படுகிறது.
- மழைக்காடுகள் கூட்டிணைவு எனும் அமைப்பின் முயற்சியினால் 2017 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் தேதியன்று முதல்முறையாக உலக மழைக்காடுகள் தினமானது அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்த ஆண்டின் இந்த தினத்திற்கான கருத்துரு, "Protected Together. Now. Forever" என்பதாகும்.




## சர்வதேச ஒலிம்பிக் தினம் – ஜூன் 23



- இந்த தினமானது கோடைக்கால மற்றும் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளை உள்ளடக்கிய வகையிலான நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டிகளைக் குறிக்கிறது.
- ஒலிம்பிக் தினமானது மூன்று தூண்களின் அடிப்படையில் கடைபிடிக்கப் படுகிறது. அவையாவன
    - இயக்கம் (Move)
    - கற்றல் (Learn)

- கண்டறிதல் (Detect) என்பவையாகும்

- உலக ஒலிம்பிக் தினமானது 1948 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று நவீன கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப் பட்டதை நினைவு கூரும் வகையில் தொடங்கப்பட்டதாகும்.
- நவீனகால ஒலிம்பிக் கோட்டிகள் பாரீசின் சார்பான் (Sorbonne) என்னுமிடத்தில் தொடங்கப் பட்டன.
- 2021 ஆம் ஆண்டின் இந்த தினத்திற்கான கருத்துரு, "Stay Healthy, Stay Strong, Stay Active with the Olympic Day Workout on 23 June" என்பதாகும்.

## ஐக்கிய நாடுகளின் பொதுச் சேவை தினம் – ஜூன் 23

- மேம்பாட்டுச் செயல்முறையில் பொதுச் சேவையின் பங்கினைக் குறிப்பிட்டுக் காட்டவும் சமூகத்தினருக்கு பொதுச் சேவையின் மதிப்பை உணர்த்துவதற்காகவும் வேண்டி இந்த தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக "வருங்கால பொதுச் சேவையை புதுமைப்படுத்துதல் : நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்கான ஒரு புதிய சகாப்தத்திற்கான புதிய அரசு மாதிரிகள்" எனும் ஒரு காணொலி நிகழ்வானது நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்வினை ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை மற்றும் ஐக்கிய அரபு அமீரக அரசு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தது.




## உலக வெண்புள்ளி நோய் (வெண் குஷ்டம்) தினம் – ஜூன் 25

- உலகளவில் வெண்புள்ளி நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- வெண்புள்ளி நோய் என்பது சருமத்தில் நிறமிழப்பை ஏற்படுத்தும் ஒரு சருமக் குறைபாட்டு நோயாகும்.
- இது நிறமி இழப்பின் காரணமாக தோலில் பல வகையான வடிவங்களை உருவாக்குகிறது.
- முதலாவது உலக வெண்புள்ளி நோய் தினமானது 2011 ஆம் அண்டு ஜூன் 15 அன்று அனுசரிக்கப் பட்டது.

## மாலுமிகள் தினம் – ஜுன் 25

- கடல்சார் போக்குவரத்தை இயக்குவதன் மூலம் உலகின் போக்குவரத்துச் செயல்பாட்டிற்கு உதவும் மாலுமிகளுக்கு மரியாதை செலுத்துவதற்காக வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த தினமானது சர்வதேசக் கடல்சார் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு 11வது மாலுமிகள் தினமாகும்.
- 2021 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Seafarers : at the core of shipping's future" என்பதாகும்.




## போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் – ஜுன் 26

- இது போதைப் பொருள் பயன்பாடற்ற சர்வதேசச் சமுதாயத்தை உருவாக்குதல் எனும் இலக்கை அடைவதற்கான நடவடிக்கை மற்றும் ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதில் தனது உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துவதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் அவையினால் கடைபிடிக்கப்படும் ஒரு தினமாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Share Facts on Drugs, Save Lives" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தின் தலைமையகமானது ஆஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் அமைந்துள்ளது.




## சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் – ஜுன் 27

- உள்நாட்டு மற்றும் உலகளாவியப் பொருளாதாரத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பணிகளையும் நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டில் அவை ஆற்றும் பங்களிப்பினையும் கொண்டாடும் வகையில் இந்த தினமானது ஐக்கிய நாடுகளினால் கடைப்பிடிக்கப் படுகிறது.

- மேலும் இந்த தினமானது நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அமல்படுத்தச் செய்வதற்கான இந்த நிறுவனங்களின் சிறந்தப் பங்களிப்பினையும் அங்கீகரிக்கிறது.
- இந்த ஆண்டின் இந்த தினத்திற்கான கருத்துரு, "MSME 2021 : Key to an inclusive and sustainable recovery" என்பதாகும்.




## உலக ஒவ்வாமை வாரம் - ஜூன் 13 முதல் 19 வரை

- உலக ஒவ்வாமை அமைப்பானது உலக ஒவ்வாமை வாரத்தை ஏற்பாடு செய்கிறது.
- இது 2021 ஆம் ஆண்டில் ஜூன் 13 முதல் 19 வரை நடைபெற்றது.
- 2021 ஆம் ஆண்டின் உலக ஒவ்வாமை வாரத்தின் தலைப்பு அனாபிலாக்ஸிஸ் (Anaphylaxis) என்பதாகும்.
- "Anaphylaxis: Be Aware. Be prepared. Save lives" என்பது 2021 ஆம் ஆண்டின் உலக ஒவ்வாமை வாரத்தின் கருத்துருவாகும்.
- அனாபிலாக்ஸிஸ் என்பது பொதுவாக உணவு ஒவ்வாமையுடன் தொடர்புடையதாகும்.
- முதல் உலக ஒவ்வாமை வாரமானது 2011 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.




## தேசியப் புள்ளியியல் தினம் – ஜுன் 29

- தேசியப் புள்ளியியல் தினமானது சமூகப் பொருளாதார திட்டமிடுதல் மற்றும் கொள்கை இயற்றுதலில் புள்ளி விவரங்களின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக வேண்டி ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 29 அன்று கடைபிடிக்கப் படுகிறது.

- பட்டினியை ஒழிக்கச் செய்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்து ஆகியவற்றை அடைதல் மற்றும் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் (ஐ.நா. வின் நிலையான மேம்பாட்டு இலக்கு 2) என்பதே இந்த ஆண்டின் இந்த தினத்திற்கான கருத்துருவாகும்.
- மேலும் புள்ளிவிவரங்கள், புள்ளிவிவர அமைப்பு முறை மற்றும் பொருளாதாரத் திட்டமிடல் ஆகிய துறைகளில் மறைந்த பேராசிரியர் பிரசாந்த் சந்திரா மஹலநோபிஸ் ஆற்றியச் சிறந்த பங்களிப்பினையும் இந்த நாள் பறைசாற்றுகிறது.
- இவர் பெரும்பாலும் இந்தியப் புள்ளியியலின் தந்தை எனக் குறிப்பிடப்படுகிறார்.
- இவர் 1933 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் புள்ளிவிவரப் பத்திரிக்கையான 'சங்க்யா' எனும் இதழை நிறுவினார்.
- மேலும் இவர் மஹலநோபிஸ் தொலைவின் புள்ளி விவர அளவீட்டிற்காகவும் நினைவு கூறப்படுகிறார்.
- இவர் இந்திய புள்ளியியல் நிறுவனத்தினை நிறுவியவராவார்.
- மத்திய அரசானது 2007 ஆம் ஆண்டில் ஜுன் 29 ஆம் தேதியினை தேசியப் புள்ளியியல் தினமாக அறிவித்தது.
- இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமானது இந்தியப் பொருளாதாரம் குறித்த மஹலநோபிசுனுடைய கணித விளக்கத்தைச் சார்ந்து அமைக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது இந்தியாவில் கனரகத் தொழிற்சாலைகளின் உருவாக்கத்தை ஊக்குவித்தது.
- இது பின்பு, நேரு-மஹலநோபிஸ் மாதிரி அல்லது பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைத் தொழில்துறை உத்தியாக உருப்பெற்றது.




## உலக சிறுகோள் (Asteroid) நாள் - ஜூன் 30

- இது ஆண்டுதோறும் ஐ.நா. ஏற்றுக் கொண்ட ஒரு உலகளாவிய விழிப்புணர்வுப் பிரச்சார நிகழ்வு ஆகும்.
- பூமிக்கு அருகில் உள்ள பொருட்களால் அபாயம் ஏற்படுமானால், உலக அளவில் எடுக்கப்பட வேண்டிய நெருக்கடி தகவல்தொடர்பு நடவடிக்கைகள் குறித்தும் சிறுகோள் தாக்க அபாயத்தைப் பற்றி பொதுமக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய விழிப்புணர்வு

குறித்தும் நடவடிக்கைகள் ஏற்படுத்தச் செய்வதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## நாடாளுமன்ற அமைப்பு முறைக்கான சர்வதேச நாள் - ஜூன் 30

- பாராளுமன்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் பாராளுமன்ற அமைப்புகள் உலகம் முழுவதும் உள்ள தனிநபர்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் விதத்தை இந்த நாள் கொண்டாடுகிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்தின் மூலம் இந்த நாள் 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தை (Inter-Parliamentary Union) உருவாக்கியதையும் இந்த நாள் நினைவில் கொள்கிறது.
- நாடாளுமன்ற ஒன்றியமானது (Inter-Parliamentary Union) என்பது 1889 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

# இதரச் செய்திகள்

## பூச்சிக்கொல்லிகள் - இந்தியாவில் நச்சுத்தன்மைக்கான முன்னணி காரணி

- இந்திய மக்களின் உடலில் நிலவும் நச்சுத்தன்மை பற்றிய ஆய்வு 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை: ஒரு முறையான மறுசீராய்வு மற்றும் பிறழ் பிரிப்பு ஆய்வு (A systematic review and meta-analysis) எனும் ஒரு ஆய்வானது பிரிட்டிஷ் மருத்துவ இதழால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்திய மக்களின் உடலில் ஒட்டு மொத்தமாக 63% அளவிற்கு நச்சுத்தன்மை நிலவுவதற்கு பூச்சிக்கொல்லிகளே முக்கியக் காரணம் என இந்த அறிக்கை கூறுகிறது.
- வேளாண்மை மற்றும் வீட்டு உபயோகத்திற்கு வேண்டி பூச்சிக் கொல்லிகள் அதிகளவில் பயன்படுத்தப் படுவதே இதற்குக் காரணமாகும்.
- இந்த ஆய்வின்படி, இளம் பருவத்தினரிடையே 65 சதவீதமும் குழந்தைகளிடையே 22% நச்சுத் தன்மையும் நிலவுகிறது.
- வட்டார ரீதியிலான நச்சுத் தன்மைப் பரவல் குறித்த ஆய்வானது,
  - வட இந்தியாவில் அதிகபட்சமாக 75 சதவீதமும்,
  - அதனைத் தொடர்ந்து தென் இந்தியா (65.9%)

- மத்திய இந்தியா (59.2%)
- மேற்கு இந்தியா (53.1%)
- வடகிழக்கு இந்தியா (46.9%) மற்றும்
- கிழக்கு இந்தியா (38.5%)

என்ற அளவில் நச்சுத்தன்மை இருப்பதாகவும் கண்டறியப் பட்டுள்ளதைக் குறிப்பிட்டு உள்ளது.

## உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2021-22

- ❖ இந்தத் தரவரிசையில் ஹார்வர்டு பல்கலைக்கழகமானது முதலிடத்தையும் அதனைத் தொடர்ந்து மாசாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், ஸ்டான்போர்டு பல்கலைக் கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.
- ❖ உலகம் முழுவதுமான 2000 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களின் பட்டியலில் 68 இந்தியக் கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- ❖ அலகாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமானது (IIM-Ahmedabad) 415வது இடத்தையும் அதனையடுத்து இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது (IISc) 459வது இடத்தையும் பெற்றுள்ளன.

## 2021 ஆம் ஆண்டு ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசை – டைம்ஸ் உயர் கல்வி இதழ்

- ❖ பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், ரூபாரின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், இந்தூரின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவை ஆசியாவின் 100 முன்னணிப் பல்கலைக் கழகங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- ❖ பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது 37வது இடத்தில் உள்ளது.
- ❖ ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது 55வது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது 78வது இடத்தில் உள்ளது.
- ❖ சீனாவின் சிங்க்வா (Tsinghua University) பல்கலைக்கழகமானது 2021 ஆம் ஆண்டிற்கான ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- ❖ அதில் இரண்டாவது இடத்தினையும் சீனாவிலுள்ள பீகிங் பல்கலைக்கழகமே (Peking University) பெற்றுள்ளது.

## QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2022

- ❖ லண்டனில் அமைந்துள்ள குவாக்கரலி சைமண்ட்ஸ் (QS) என்ற நிறுவனமானது 2022 ஆம் ஆண்டிற்கான QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள சிறந்த 400 உலகப் பல்கலைக்கழகப் பட்டியலில் 8 இந்தியப் பல்கலைக் கழகங்களும் இடம் பெற்றுள்ளன.
- ❖ முதல் 200 பல்கலைக் கழகங்களுள் மூன்று இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன. அவை,

- இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மும்பை – 177,
- இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், டெல்லி – 185,
- இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், பெங்களூரு – 186

❖ பெங்களூருவிலுள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது "உலகின் முன்னணி (சிறந்த) ஆராய்ச்சி நிறுவனம்" என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

❖ ஆராய்ச்சியின் தாக்கத்தை மதிப்பிடும் ஆசிரியர் ஆய்வறிக்கை என்ற குறியீட்டில் (Citations per Faculty indicator) இந்த நிறுவனம் நூற்றுக்கு நூறு என்ற மதிப்பினைப் பெற்றுள்ளது.

❖ ஆராய்ச்சி அல்லது எந்தவொரு பரிமாணத்திலும் ஓர் இந்திய நிறுவனமானது முழு மதிப்பினைப் பெறுவது இதுவே முதல்முறையாகும்.

❖ இந்தத் தரவரிசையில் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது தொடர்ந்து 10 ஆண்டுகளாக முதலிடத்திலுள்ளது.

❖ இதனையடுத்து இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமானது இரண்டாம் இடத்திலுள்ளது.

❖ அமெரிக்காவின் ஸ்டான்போர்டு மற்றும் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக் கழகங்கள் மூன்றாம் இடத்தைப் பகிர்ந்து கொண்டு உள்ளன.

**Top varsities** | JNU, featuring for the first time in the QS World Universities Ranking list, is among the top-600 in the world

*= indicates shared ranking*

| 2022 global rank | Name |
|---|---|
| 177= | Indian Institute of Technology, Bombay |
| 185 | Indian Institute of Technology, Delhi |
| 186= | Indian Institute of Science, Bengaluru |
| 255= | Indian Institute of Technology, Madras |
| 277= | Indian Insititute of Technology, Kanpur |
| 280 | Indian Insititute of Technology, Kharagpur |
| 395= | Indian Insititute of Technology, Guwahati |
| 400= | Indian Institute of Technology, Roorkee |
| 501-510 (ranking band) | University of Delhi |
| 561-570 (ranking band) | Jawaharlal Nehru University, Delhi |

## டெலாய்டு ரோட்டிஃபர்

❖ சைபீரியப் பகுதியில் 24 ஆயிரம் ஆண்டுகளாக நிலத்தடி பனியில் உறைந்திருந்த ஒரு நுண்ணிய விலங்கானது மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளது.

❖ இந்த நுண்ணிய விலங்கானது சைபீரியாவின் நிலத்தடி உறைபனியில் உறைந்து இருந்தது.

❖ இந்த நுண்ணிய விலங்கானது டெலாய்டு ரோட்டிஃபர் (bdelloid rotifer) என அழைக்கப் படுகிறது.



## உலகின் மிகப்பெரியக் குடும்பத்தின் தலைவர்

- உலகின் மிகப்பெரியக் குடும்பத்தின் தலைவரான சியோனா சானா தனது 76 வயதில் காலமானார்.
- இவர் மிசோரத்தை சேர்ந்தவர் ஆவார்.
- இவர் குறைந்தபட்சமாக 39 மனைவிகள், 94 குழந்தைகள் மற்றும் 33 பேரக் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார்.
- இவர் சானா பாவ்ல் எனப்படும் ஒரு கிறித்துவப் பிரிவின் தலைவராவார்.
- இந்தப் பிரிவில் ஆண்களுக்கு பலதார மணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.
- உலகின் மிகப்பெரியக் குடும்பத்தைக் கொண்டிருந்ததற்காக இவர் 2011 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் ரிப்லேயின் நம்பினால் நம்புங்கள் (Ripley's Believe It or Not) என்ற புத்தகத்தில் இடம் பெற்றார்.



## பசும் பூஞ்சை (பச்சை பூஞ்சை)

- பச்சை பூஞ்சை என்பது (அஸ்பெர்கில் லோசிஸ்) ஒரு பூஞ்சைத் தொற்றாகும்.
- இது பூஞ்சைக் காளானால் ஏற்படும் ஒரு தொற்றாகும்.
- இது வீட்டு உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் காணப்படும் ஒரு வகைப் பூஞ்சையாகும்.
- இந்தூரை (மத்தியப் பிரதேசம்) சேர்ந்த கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒரு நபரின் உடலில் சமீபத்தில் பச்சைத் தொற்று கண்டறியப் பட்டு உள்ளது.

## ரியூட்டர்ஸ் டிஜிட்டல் செய்திகள் அறிக்கை 2021

- 10வது ரியூட்டர்ஸ் டிஜிட்டல் செய்திகள் அறிக்கையானது (2021) சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையானது ரியூட்டர்ஸ் என்ற பத்திரிக்கையியல் கல்வி நிறுவனத்தினால் வெளியிடப் படுகிறது.
- "செய்திகளின் மீதான நம்பகத் தன்மை" எனும் பிரிவில் இந்தியா உலகின் 31வது இடத்தில் உள்ளது.
- பின்லாந்து நாடானது 65% என்ற அளவில் செய்திகளில் மீதான ஒட்டு மொத்த நம்பிக்கைத் தன்மையைக் கொண்டுள்ளது.
- அமெரிக்க நாடானது 29% என்ற அளவில் குறைவான நம்பிக்கைத் தன்மை உடையதாக உள்ளது.




## QS EMBA தரவரிசை 2021

- பெங்களூருவின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவன மேலாண்மைக்கான முதுகலைப் பட்டப்படிப்பானது சமீபத்திய QS நிர்வாக முதுகலை வணிக மேலாண்மைத் தரவரிசையில் இந்தியாவின் சிறந்த படிப்பாக இடம் பெற்று உள்ளது.
- பெங்களூருவின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமானது உலகளவில் 39வது இடத்தில் உள்ளது.
- இந்தத் தரவரிசையின் முதல் 100 இடங்களில் இடம் பெற்ற ஒரே இந்திய நிறுவனம் இதுவேயாகும்.
- ஆசிய – பசிபிக் பிரிவில் இந்தக் கல்வி நிறுவனம் 10வது இடத்தைப் பெற்றுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★